விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு+பதினாறு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
021 222 5392
(C-6121)

வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 புரட்டாதி 30 ஞாயிற்றுக்கிழமை (16.10.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 302

# ராஜபக்ஷவினருக்கு எதிரான விசாரணைகள் நிறுத்தப்படாது



## ஜனாதிபதி மைத்திரி உறுதிபடத்தெரிவிப்பு

*(கொழும்பு)*

ஊழல் மோசடிகள் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ராஜபக்ஷ வினரை எந்தவகையிலும் தான் பாதுகாக்க போவதில்லை எனவும் அவர்களுக்கு எதிரான விசாரணைகளை நிறுத்துமாறும் எப்போதும் கேட்டதில்லை எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியாக தெரிவித்துள்ளார்.

*(15ஆம் பக்கம் பார்க்க)*

## ஜனாதிபதியின் கருத்து பற்றி எதுவும் பேச வேண்டாம்

### பிரதமர் ரணில் பணிப்பு

(கொழும்பு)

வெளிநாடு சென்று தான் நாடு திரும்பும் வரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கருத்து தொடர்பாக விமர்சனங்களையோ பதில்களையே அளிக்க வேண்டாம் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட கட்சியின் செயற்பாட்டாளர்களுக்கு இந்த ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

16 ஆம் பக்கம் பார்க்க...

## 105 கிலோ கேரள கஞ்சா மீட்பு!

### மூவர் கைது




(யாழ்ப்பாணம்)

மாதகல் கடற்பகுதியூடாக கடத்தப்பட்ட பல இலட்சம் ரூபாய் பெறுமதி வாய்ந்த 105 கிலோ கேரள கஞ்சா நேற்றைய தினமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும் தொடரும் கஞ்சா கடத்தல்களால் அங்கு பொலிஸ் கண்காணிப்பு நடவடிக்கை

16 ஆம் பக்கம் பார்க்க....

## போதைமாத்திரைகளுடன் 35 கிலோ கஞ்சா மீட்பு

### இந்.பிரஜை உட்பட மூவர் கைது



16 ஆம் பக்கம் பார்க்க...

"அரசியல் நிகழ்ச்சி நிரலில் ஊழல் விசாரணைகள்"

## ஜனாதிபதியின் கருத்தை கோத்தபாய வரவேற்பு

(கொழும்பு)

இராணுவத்தினைச் சார்ந்தவர்கள் ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நீதிமன்றத்துக்கு அழைக்கப்படுகின்றமை மற்றும் குற்றப்புலனாய்வு பிரிவினரின் அரசியல் சார்ந்த விசாரணை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரி பால

15 ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி நேற்று இந்தியா பயணம்

(கொழும்பு)

பிராந்திய அமைப்புக்களின் ஒத்துழைப்பில் நடைபெறும் BRICS - BIMSTEC மாநாட்டில் பங்குபற்றுவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று இந்தியா பயணமானார்.

15 ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதிக்கு அறிவிக்க வேண்டிய அவசியமில்லை

### இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மைத்திரிக்கு கடிதம்

(கொழும்பு)

தாம் முன்னெடுக்கும் விசாரணைகளின் முடிவுகளை ஜனாதிபதிக்கு அறிவித்து, ஆலோசனையோ அல்லது ஏனைய தீர்மானங்களையோ பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற சட்ட ரீதியான கட்டுப்பாடு இல்லை என்று இலஞ்ச ஊழல் ஆணைக்குழு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அறி

15 ஆம் பக்கம் பார்க்க....

## வாகன விபத்து; குடும்பஸ்தர் பலி

(அக்கரைப்பற்று)

மட்டக்களப்பு அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆலிம் நகர் பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார். இந்த விபத்தின் போது

15 ஆம் பக்கம் பார்க்க....

மகாராஜா பொதிகள் சேவை GTV Express

11kg க்கு மேல் 01kg க்கான கட்டணம்

| ஜெர்மன் | லண்டன் | அயர்லாந்து | டென்மார்க் | நெதர்லாந்து | இத்தாலி | சுவீடன் | பிரான்ஸ் | ஸ்பெயின் |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| 700/= | 600/= | 900/= | 950/= | 900/= | 800/= | 950/= | 700/= | 950/= |

இல. 225 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 2224338 / 021 4925024 | இல. 25 கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. 024 4930200

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வறுமை நிலை அதிகரித்துள்ளது

நாட்டில் வறுமை நிலை அதிகரித்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் உள்ள 25 மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற ஆய்வின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியுடன் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மக்களின் சராசரி வருவாய் தொடர்பான இந்த ஆய்வு நாடளாவிய ரீதியாக 25 ஆயிரம் குடும்பங்களை மையப்படுத்தி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் இலங்கை பிரஜை ஒருவரின் சராசரி மாத வருமானம் 4038 ரூபாய் என்பது தவறானது என புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (செ-5)

# மாதாந்த கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் நடத்தும் மாதாந்த கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு யாழ். ஆனைப்பந்தி குருகுல தலைமைச் செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் சனச அபிவிருத்தி வங்கியின் சிரேஷ்ட வங்கியாளர் பிரமஸ்ரீ க.இலட்சுமண சர்மா விசேட கருத்துரை ஆற்றவுள்ளார்.

மேற்படி கருத்தரங்கில் அந்தணர் குடும்பத்தினருக்கான கடனுதவிகள் குறித்தும் தெளிவுபடுத்தப்படவுள்ளதால் இதில் அந்தணர்கள் அனைவரும் பங்கு பற்றி பயன்பெறமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)


## வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையில் 42-ம் வீதியில் 3-ம் இலக்கத்தில் இரண்டு அறைகள் இணைந்த குளியலறையுடன் கூடிய தொடர்மாடி நாள்,கிழமை,மாத வாடகைக்குண்டு.

(6348)

T.P 077 8378597

## கார்கள் வான்கள் வாடகைக்கு

| Type | Colour | Price (Perday) |
|---|---|---|
| Premio car | White | 6,000 |
| Axio car | White | 5,000 |
| N-15 car | White | 3,000 |
| TATA Indico car (V2) | Blue | 2,500 |
| DAEWOO car | Black | 2,000 |
| KDH van | White | 6,000 |

கிழமை,மாதாந்த வாடகைகளுக்கு கட்டணம் மேலும் குறைக்கப்படும்

தொடர்புகளுக்கு:-

0773777502

(6345).


# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

திருச்செந்தூர்ப் புராணம் (மூலமும் உரையும்) நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 6.30 மணிக்கு நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் இடம்பெறும்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் வெளியீட்டுரையினை தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் வழங்குவார்.

சிறப்புரையினை பிரம்ப ஸ்ரீ ப.சிவானந்த சர்மா, சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (இ-3)

# லசந்த கொலை; விசேட விசாரணை

(கொழும்பு)

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலையுடன் தாம் தொடர்பு கொண்டுள்ளதாக கூறி தற்கொலை செய்துகொண்ட முன்னாள் இராணுவ புலனாய்வு அதிகாரியின் மரணம் தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்காக விசேட புலனாய்வு பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் இராணுவ அதிகாரியின் உடலம் மரண பரிசோதனைக்கு நேற்று உட்படுத்தப்பட்டது.

இதன்போது அவர் கழுத்தில் சுருக்கிட்டுக்கொண்டதினால் மரணித்தமை உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (செ-11)

# பாதுகாப்பு ஊழியரை தாக்கிய சம்பவம் ஒருவர் கைது!

நெல்லியடி நகரின் பாதுகாப்பு ஊழியர் ஒருவரை தாக்கிய சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவரை தாம் கைது செய்துள்ளதாக நெல்லியடிப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆ.பி.ஏ.பிரியந்த தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பாதுகாப்பு ஊழியர் மீது தாக்குதல் நடத்தியதாக வர்த்தக சங்கத்தால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதன்பிரகாரம் தாக்குதல் மேற்கொண்ட வதிரிப் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞரை நேற்றுக் காலை சந்தேகத்தின் பேரில் கைது செய்ததுடன் மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவருடன் இன்னொரு நபர் தாக்குதல் நடத்தும் போது வந்ததாகவும் அவரையும் விரைவில் கைது செய்வதாகவும் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (செ-60)

# இறுதிப் போர் குறித்து மற்றுமொரு நூல் வெளியீடு

(கொழும்பு)

இறுதிக்கட்ட போரில் கடற்படையினரின் பங்களிப்பு தொடர்பாக முன்னாள் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே எழுதிய நூல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

18ஆவது கடற்படைத் தளபதியாக பதவி வகித்த ரியர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே இறுதி யுத்தத்தின்போது கடலில் இடம்பெற்ற சீரற்ற யுத்தம் என்ற தலைப்பில் இந் நூலை எழுதி வெளியிட்டுள்ளார்.

யுத்தத்தின் பின்னர் இறுதிப் போரில் நேரடியாக களத்தில் தொடர்புபட்ட இராணுவ அதிகாரிகள் தங்களது போர்க்கள அனுபவத்தை புத்தகமாக வெளியிட ஆரம்பித்துள்ளனர்.



இறுதிப்போரின் போது முக்கிய பங்கு வகித்த இலங்கை இராணுவத்தின் படைத் தளபதிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன அண்மையில் புத்தகமொன்றை வெளியிட்டார். இந்தப் புத்தகம் சிங்கள மக்கள் மத்தியில் பிரபல்யமடைந்துள்ளது. இந் நிலையில் முன்னாள் இராணுவத் தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும் இறுதிப்போர் தொடர்பான நூல் ஒன்றை எழுதிவருவதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

ஜே 101 கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் இரத்ததான முகாம் இன்றைய தினம் காலை 9.30 மணியளவில யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறவுள்ளது. இந்த முகாமில் குருதிக்கொடையாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்குமாறு விளையாட்டுக் கழகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (செ-4)


## கண்ணீர் அஞ்சலி

அமரர் விஸ்வலிங்கம் விநாயகமூர்த்தி

*உறவுகளை எமக்குப் புரியவைத்த*
*உணர்வுகளில் எங்களில் ஒருவராய்*
*எம்மை நல்வழிக்கிட்டுச் செல்ல*
*புத்திகள் பல சொன்ன தந்தையே*
*உம்பிரிவு எம்மை வாட்டுகிறது*



எமது ஆருயிர் நண்பன் வி.நிருத்தரனின் அன்பு தந்தையின் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். அவரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(6347)

பிரிவினால் துயருறும்

நிருதரனின் ஆருயிர் நண்பர்கள்



## வேலைவாய்ப்பு

யாழ்.நகர் பகுதியில் சைவ உணவகம் ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம், கௌரவத்துடன் வேலைவாய்ப்பு, தங்குமிடவசதி, மூன்று நேர உணவு.

01.உணவு பரிமாறுபவர்கள் (ஆண்/பெண்)
02.குசினி வேலையாட்கள்
03.அலுவலக உதவியாளர் (ஆண்/பெண்)
04.பில் கிளாக்
05.காசாளர்
06.மரக்கறி வெட்டுபவர்கள்
07.இடியப்பம் போடுபவர்கள்
08.றொட்டி வேலையாட்கள்
09.உதவியாளர்கள்
10.ரீமேக்கர்

இடம்பெயர்ந்தவர்களுக்கு முன்னுரிமை

தொடர்புகளுக்கு: 0777917753, 0755304521

38, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(6346)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 222 7603, 021 567 1532



## ஏல விற்பனை

யா/வட்டு இந்துக் கல்லூரியில் 2016.10.17 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு பின்வரும் கணனிபொருட்கள் ஏல விற்பனைக்கு விடப்படும்.

| | |
|---|---|
| Monitor-13 | U.P.S-02 |
| System-15 | Head Phone-02 |
| Mouse-10 | Scanner-01 |
| Keyboards-06 | Speaker-01 |

-அதிபர்



## பணியாளர் தேவை

கிளிநொச்சி அருள்மிகு சித்தி விநாயகர் ஆலயத்திற்கு கணக்கு, பதிவேடு முகாமைத்துவம் செய்யக்கூடிய சைவ சமயத்தை சேர்ந்தவர் தேவை.

- ஏனைய விடயங்கள் பேசித் தீர்மானிக்கப்படும்
- தங்குமிட வசதி செய்து தரப்படும்

அருள்மிகு சித்தி விநாயகர் ஆலயம்

A9 வீதி, கிளிநொச்சி.

T.P:0773344809, 0771802336

(6131)









இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி. பாரதரத்னா. டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாமின் 85 ஆவது பிறந்ததின நிகழ்வு கொண்டாட்டம் நேற்றைய தினம் யாழ்.பொது நூலகத்தில் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது. யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொது நூலகத்தில் அமைந்துள்ள கலாமின் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து நிகழ்வுகள் நடைபெற்றன. யாழ். இந்திய துணைத்தூதர் ஆ.நடராஜன். வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம். எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா. உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம். யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகம். யாழ்.மாநகர சபையின் ஆணையாளர் வாகீசன். மதத் தலைவர்கள். பாடசாலை அதிபர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். முன்னதாக கலாமின் உருவச்சிலைக்கு துணைத் தூதுவர். அவர் தம் பாரியார் ஆகியோர் இணைந்து மலர்மாலை அணிவித்ததை தொடர்ந்து மாணவர்களின் இசை நிகழ்ச்சி. பேச்சுக்கள் என்பன நடைபெற்றதோடு பரிசளிப்பு வைபவமும் நடைபெற்றது.

(படங்கள்- உ.சாளின்)

# யாழ்.மண்ணில் கால் வைத்தால் சொர்க்கத்தை அடைந்து விடலாம்

## இந்தியத் துணைத்தூதுவர் தெரிவிப்பு

*(யாழ்ப்பாணம்)*

***உலகத்தில் உள்ள எந்த மனிதரும் யாழ்.மண்ணில் கால் வைத்துவிட்டால் அவர்கள் சொர்க்கத்தை அடைந்துவிட முடியும். அந்தளவிற்கு யாழ்.மண் பெருமை வாய்ந்தது என யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன் தெரிவித்துள்ளார்.***



இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி. பாரதரத்னா. டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் 85 ஆவது பிறந்த தின நிகழ்வு கொண்டாட்டம் நேற்றைய தினம் யாழ். பொது நூலகத்தில் நடைபெற்றது.

இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொது நூலகத்தில் அமைந்துள்ள கலாமின் உருவச்சிலைக்கு மாலை அணிவித்து நிகழ்வுகள் நடைபெற்றன. இதன் பின்னர் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.பொது நூலகத்தில் சென்ற வருடம் தான் இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் உருவச்சிலை அமைக்கப்பட்டது. தற்போது மீண்டும் அவரது நினைவாக நாங்கள் அனைவரும் கூடியிருப்பது மகிழ்வை தருகின்றது. அவரை யாழ்ப்பாணத்து மாணவர்கள் தமது பேச்சுகள் மூலம் புகழ்பாடியுள்ளனர். அந்த மாணவர்களது எதிர்காலம் சிறப்பாக இருக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் கிடையாது.

தமிழனாய் பிறந்த கலாம். தலை நிமிர்ந்த கலாம். நம்மவர்களின் சொத்துக் கலாம். அவர் வாழ்நாள் முழுவதும் நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் உழைத்திருந்தார். இந்த மண்ணில் இப்போது அவர் இல்லாவிட்டாலும் எமக்கு அவர் எப்போதும் வழிகாட்டியாகவேயுள்ளார். கலாம் ஜனாதிபதி ஆவதற்கு முன்னரும் பின்னரும் எளிமையாகவே இருந்தார்.

அவர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தமை எமக்கு பெருமை அளிக்கின்றது. கலாமின் ஆசிரியர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் எனும் போது எமக்கு இன்னும் பெருமையாக இருக்கின்றது. எனவே இங்கு வந்திருக்கும் அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எந்த மனிதனும் யாழ். மண்ணில் தனது காலை பதித்து விட்டால் அவன் சொர்க்கத்திற்கு போவான். அந்தளவு பெருமை வாய்ந்தது யாழ்.மண்.

அதேபோல் மறைந்த இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமும் சென்றிருப்பார் என நான் நம்புகின்றேன் என யாழ்.இந்திய துணைத் தூதுவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## நாகர் கோவிலில் கப்பல் திருவிழா

சரித்திர பிரசித்தி பெற்ற நாகர் கோவில் பூர்வீக நாக தம்பிரான் ஆலய கப்பல் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இன்று நண்பகல் மதியப் பூசை நடைபெற்று நாகேஸ்வரப் பெருமான் உள் வீதி வலம் வருவார்.

இரவு விசேட மேளக்கச்சேரிகள், நிகழ்வுகள் நடைபெற்று வசந்தமண்டப பூசை இடம்பெறும். அதனைத் தொடர்ந்து நாகேஸ்வரப் பெருமான் வெளி வீதியுலா வரும் போது ஆலயத்தின் வடக்கு வீதியில் வரலாற்றினை எடுத்தியம்பும் கப்பல் திருவிழா வைபவம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-60)

## மூன்று நூல்களின் வெளியீடு

திருமதியோகேஸ்வரிசிவப்பிரகாசம் எழுதிய மூன்று நூல்களின் வெளியீட்டு விழா எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் பிற்பகல் 3 மணியளவில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ம.பிரதீபன் கலந்து கொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன், யாழ்.கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் ச.வேலழகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வரவேற்புரையை யாழ். அத்தியார் இந்துக்கல்லூரி பகுதித் தலைவர் அ.பேரின்பநாயகமும் ஆசியுரையை சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்களும் வெளியீட்டுரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரனும் ஆய்வுரையினை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தமிழ்த்துறை, முதுநிலை விரிவுரையாளர் திருமதி செல்வஅம்பிகை நந்தகுமாரும் ஏற்புரையினை நூலாசிரியரும் வழங்கவுள்ளார். (இ

## வெள்ளைப்பிரம்பு தின விழிப்புணர்வு பேரணி

(யாழ்ப்பாணம்)

வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு சர்வ தேச லயன்ஸ்கழகத்தினரால் விழிப்புணர்வு பேரணி ஒன்று எதிர்வரும் 19 ஆம் திகதி யாழ். நகர்ப்பகுதியில் முன்னெடுக்கப்படவுள் ளதாக வைத்திய நிபுணர் லயன் வை.தியாகராஜா அறிவித் துள்ளார்.

குறித்த விழிப்புணர்வு பேரணியானது காலை 9 மணியளவில் யாழ்.ஆரியகுளம் சந்திப் பகுதியில் ஆரம்பித்து ஸ்ரான்லி வீதி ஊடாகச் சென்று மணிக்கூட்டு வீதியை அடைந்து நகர்ப்பகுதி ஊடாக வைத்தியசாலை வீதியை அடைந்து மணிக்கூட்டு வீதி வழியாக சென்று யாழ். பொது நூலகத்தை அடையவுள்ளதுடன் பொதுநூலக கேட்போர் கூடத்தில் விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன் விசேட தேவையுடைவர்களுக்கான உதவிகளும் வழுங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

தேசிய தொழில் தகைமை மட்டம் 5, முதலாம் அரையாண்டுபரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எனவே மீள் பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் விண்ணப்பப்படிவங்களை தொழில்நுட்பவியல் கல்லூரியின் பரீட்சைப் பகுதியில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 24.10.2016 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்தில் பரீட்சைப் பகுதியில் சமர்ப்பிக்குமாறு பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

# நியூசிலாந்தை வீழ்த்துவதே எமது இலக்கு

## இந்திய வீரர் அஜின்கியா ரஹானே நம்பிக்கை

இந்தியா - நியூசிலாந்து இடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் முதலாவது ஆட்டம் தரம்சாலாவில் இன்று ஆரம்பமாகின்றது.

இதையொட்டி பயிற்சியில் ஈடுபட்ட இந்திய வீரர் ரஹானே பின்னர் நிருபர்களிடம் கூறியதாவது.

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பாக செயற்பட்டு அந்த தொடரை 3:0 என்ற கணக்கில் கைப்பற்றினோம்.

அடுத்து ஒரு நாள் தொடரையும் வெற்றியோடு தொடங்குவதில் ஆவலோடு எதிர்நோக்கி இருக்கிறோம்.



முழு உத்வேகத்தை எடுத்துச் செல்ல முதல் ஆட்டத்தில் வெற்றி பெறுவது மிகவும் முக்கியம்.

எல்லா நேரமும் ஆக்ரோஷமாக விளையாட வேண்டும் என்பதுதான் எங்களது நோக்கம்.

எனவே ஒரு நாள் தொடரிலும் எங்களது ஆக்ரோஷமான அணுகுமுறை தொடரும்.

எதிரணியின் பலம், பலவீனம் என்ன என்பதில் கவனம் செலுத்துவதை விட, எங்களது பலத்துக்கு தகுந்தபடி விளையாடுவோம்.

எங்களது அணி தற்போது நல்ல நிலைமையில் இருக்கிறது. உள்ளூர் போட்டியில் அசத்திய சில இளம் வீரர்களும் அணியில் இருக்கிறார்கள். இந்த தொடரிலும் சாதிக்கும் முனைப்புடன் உள்ளோன்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து உடனடியாக ஒரு நாள் போட்டிக்கு ஏற்ப மாறுவது குறித்து கேட்கிறீர்கள். இது முற்றிலும் உங்களது மனஉறுதி சம்பந்தப்பட்டது.

நாங்கள் தொழில்முறை கிரிக்கெட் வீரர்கள்.

ஒரு வடிவிலான கிரிக்கெட்டில் இருந்து இன்னொரு வடிவிலான கிரிக்கெட்டுக்கு ஏற்ப எப்படி மாற்றிக் கொள்வது என்பது தெரியும்.

எனது இயல்பான ஆட்டத்தின் மீது கவனம் செலுத்த முயற்சிக்கிறேன். அதுதான் எனது பலம் என்றார். (செ)

# இலங்கை அணி வீரர்களின் சம்பளம் எவ்வளவு தெரியுமா?

இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

2015-2016ம் ஆண்டுக்கான ஊதிய ஒப்பந்தம் இந்த ஆண்டு பெப்ரவரி மாதத்துடன் முடிவடைந்து விட்டது. இதில் 4 பிரிவுகளில் வீரர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டது.

முதல் பிரிவில் உள்ள வீரர்களுக்கு 1,65,000 அமெரிக்கா டொலர்களும், 2ஆவது பிரிவில் 1,00,000 அமெரிக்கா டொலர்களும், 3ஆவது பிரிவில் 70,000 அமெரிக்கா டொலர்களும், 4வது பிரிவில் 40,000 அமெரிக்கா டொலர்களும் வழங்கப்பட்டன.

ஆனால் தற்போது இந்த ஆண்டுக்கான ஊதிய ஒப்பந்தத்தில் முன்னதாக வழங்கப்பட்ட ஊதியம் குறைக்கப்பட்டுள்ளது. இது 5 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

முதல் பிரிவு வீரர்களுக்கு 1,25,000 அமெரிக்கா டொலர்களும், 2ஆவது பிரிவு வீரர்களுக்கு 80,000 அமெரிக்கா டொலர்களும், 3ஆவது பிரிவு வீரர்களுக்கு 60,000 அமெரிக்கா டொலர்களும், 4ஆவது பிரிவு வீரர்களுக்கு 40,000 மற்றும் 5ஆவது பிரிவு வீரர்களுக்கு 20,000 டொலர்களும் வழங்கப்படுகின்றன.

இது தவிர, அதிக ஓட்டங்கள், அதிக விக்கெட்டுகள் எடுப்பவர்களுக்கு தனித்தனியாக பரிசுத்தொகை வழங்கப்படும்.

டெஸ்ட் போட்டிகளில் வீரர்களுக்கு வழங்கப்பட்ட தொகை 7,500 அமெரிக்க டொலர் களில் இருந்து 5,000 அமெரிக்க டொலர்களாக குறைக்கப்பட்டுள்ளது. டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெறும் பட்சத்தில் இந்த தொகை 10,000 அமெரிக்கா டொலர்களாக உயரும்.

இது போல் ஒருநாள் போட்டிகளில் 3,000 அமெரிக்க டொலர்களும், இருபது-20 போட்டிகளில் 2,000 அமெரிக்க டொலர்களும் வழங்கப்படுகிறது.

2015-2016ம் ஆண்டில் 16 வீரர்களுக்கும் மட்டும் ரூ.684.85 மில்லியன் ஊதியமாக வழங்கப்பட்டுள்ளதாம். இது இலங்கை கிரிக்கெட் வாரியத்தின் வருவாயில் 33 சதவீதமாகும். (செ)

# அரையிறுதியில் ஜோகோவிச்



ஷாங்காய் மாஸ்டர்ஸ் சர்வதேச டென்னிஸ் போட்டி சீனாவில் நடந்து வருகிறது.

இதன் ஒற்றையர் பிரிவு கால் இறுதி ஆட்டம் ஒன்றில் உலகின் நம்பர் வன் வீரரான ஜோகோவிச் (செர்பியா) 3-6, 7-6 (7-4), 6-3 என்ற செட் கணக்கில் தகுதி சுற்று மூலம் முன்னேறிய ஜெர்மனி வீரர் மிஸ்சா ஸ்ரெவேவை வீழ்த்தி அரை இறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு கால் இறுதி ஆட்டத்தில் உலக தர வரிசையில் 19-வது இடத்தில் இருக்கும் ராபர்டோ பாடிஸ்டா (ஸ்பெயின்) 6-3, 6-4 என்ற நேர்செட்டில் 13-வது இடத்தில் உள்ள பிரான்ஸ் வீரர் சோங்காவை சாய்த்து அரை இறுதிக்குள் அடியெடுத்து வைத்தார்.

இன்னொரு கால் இறுதி ஆட்டத்தில் ஒலிம்பிக் சம்பியன் ஆன்டி முர்ரே (இங்கிலாந்து) 6-2, 6-2 என்ற நேர்செட்டில் பெல்ஜியம் வீரர் டேவிட் கோபினை தோற்கடித்து அரை இறுதிக்குள் நுழைந்தார். (செ)

# விசாரணை திருப்தி அளிக்கவில்லை
# பிலிப் குடும்பத்தினர் அதிருப்தி

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் பிலிப் ஹியூக்ஸ், கடந்த 2014ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சிட்னி மைதானத்தில் முதல்தர கிரிக்கெட்டில் விளையாடியபோது பந்து தாக்கியதில் மரணம் அடைந்தார்.

தெற்கு அவுஸ்திரேலிய அணிக்காக களம் இறங்கியபோது, நியூ சவுத் வேல்ஸ் வேகப்பந்து வீச்சாளர் சீன் அப்போட் வீசிய பயங்கரமான பவுன்சர் பந்து அவரை ஒரேயடியாக சாய்த்து விட்டது.

இதைபடுத்து நியூசவுத்வேல்ஸ் மாகாணத்துக்கான இறப்பு குறித்து விசாரிக்கும் தனி அதிகாரி மைக் கேல் பார்ன்ஸ் அது குறித்து விசாரணை மேற்கொண்டு வருகிறார்.

இதல் ஹியூக்ஸ் எதிரணி பவுலர்கள் கோபப்படும் வகையில் சீண்டியதும், உன்னை கொன்று விடுகிறேன் என்று இன்னொரு பவுலர் போலிஞ்சர் அவரை திட்டியதும் தெரிய வந்தது.



அதன் தொடர்ச்சியாக நிறைய பவுன்சர்கள் வீசப்பட்டதில் ஒரு பந்து ஹியூக்சின் உயிரை குடித்து விட்டது.

ஆனால் சாட்சியம் விசாரணையின் போது பெரும்பாலான வீரர்கள் சம்பவத்தன்று நடந்தது என்ன? என்பது ஞாபகம் இல்லை என்று தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்தனர்.

இதனால் அதிருப்திக்குள்ளான ஹியூக்சின் குடும்பத்தினர் நேற்றைய கடைசி நாள் சாட்சி விசாரணையின் போது பாதியில் வெளியேறினர்.

மைக்கேல் பார்ன்சின் விசாரணை அறிக்கை எதிர்வரும் 4ஆம் திகதி வெளியாகும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. (செ)

# கார் விபத்தில் பாகிஸ்தான் கால்பந்து வீராங்கனை பரிதாபமாக பலியானார்


பாகிஸ்தான் காற்பந்து அணியின் பிரபல நட்சத்திரம் ஷாலைலா பலோச். இவர் கராச்சியில் காரில் சென்று கொண்டிருந்த போது, கட்டுப்பாட்டை இழந்த அவரது கார் வீதியோரம் இருந்த இரும்பு கம்பம் மீது மோதியது.



இதில் ஷாலைலா பலோச் மரணம் அடைந்தார். காரை ஓட்டிய டிரைவர் லேசான காயத்துடன் உயிர்தப்பினார்.

20 வயதான பலோச், 2014-ம் ஆண்டு நடந்த தெற்காசிய காற்பந்து போட்டியில் பாகிஸ்தான் அணிக்காக ஆடியிருந்தார். (செ)

# மரண அறிவித்தல்



## அமரர் கேதீஸ்வரன் முருகேசு

இல.57, முகத்தான்குளம், செட்டிக்குளத்தைப் பிறப்பிடமாகவும் இராசேந்திரங்குளத்தை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் முருகேசு கேதீஸ்வரன் நேற்று (15.10.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - சின்னப்பிள்ளையின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற யசோதாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற குமாரசாமி (அமரர்) பிலோமினாவின் மருமகனும் ஜெகன், சரண்யா (கல்வித் திணைக்கள உத்தியோகத்தர் - வவுனியா), ஜெனா (பிரான்ஸ்), ஜெனி, மயூரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் புஸ்பநாதன் (பிரான்ஸ்), தமிழ்செல்வன் ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரகதி (பிரான்ஸ்), ஹர்சினி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2016) பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இராசேந்திரங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: ஜெகன் (மகன்) 077 288 1490

(C-6133)

# தேவையற்ற ஊடகப் பரபரப்புக்கள் நாட்டின் எதிர்காலத்தை பாதிக்கும்

தேவையற்ற ஊடகப் பரபரப்புக்கள் நாட்டின் எதிர்காலத்தை மோசமாக பாதிக்கும் என ஊடக அமைச்சின் செயலாளர் நிமால் போபகே தெரிவித்துள்ளார்.

ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் அவர் இதனைத் தெரிவத்துள்ளார்.பாதுகாப்பு அமைச்சின்கீழ் இயங்கி வரும் துறையொன்று தொடர்பில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் ஜனாதிபதி ஆற்றிய உரை தொடர்பில் ஊடகங்களில் செய்தி அறிக்கையிடப்பட்டிருந்தது.

இவ்வாறு செய்தி அறிக்கையிடும் போது ஜனாதிபதி மற்றும் பிரதமரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படக் கூடிய வகையில் செய்தி அறிக்கையிடுவதனை தவிர்க்க வேண்டும்.


நாட்டின் எதிர்காலத்தைக் கூட நிர்ணயிக்கக் கூடிய இவ்வாறான ஓர் சந்தர்ப்பத்தில் ஊடகங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதனை புரிந்து ஒழுக்க விதிகளை மீறாது செயற்பட வேண்டிய தார்மீக கடப்பாடு உண்டு.

பிழையான அர்த்தப்படுத்தல்களின் ஊடாக பல்வேறு சிக்கல் நிலைமைகள் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுகின்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆற்றிய முழு உரையின் சில வசனங்களை மட்டும் எடுத்து செய்தி அறிக்கையிட்டு பிழையான தகவல்களையும் அர்த்தப்படுத்தல்களையும் மக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பது ஊடக தர்மத்திற்கு அழகாகாது. ஜனாதிபதியின் செயற்பாடுகள் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் போற்றப்படுகின்ற நிலைமை காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையான தேவையற்ற அர்த்தப்படுத்தல்களின் ஊடாக கலகம் விளைவிப்பது நாட்டின் எதிர்காலத்தையே பாதிக்கக் கூடும் என நிமால் போபகே தனது ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

## மரண அறிவித்தல்

### அமரர் இராஜசிங்கம் சிவராஜா (சச்சி)



மாகியப்பிட்டி சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் Pletten Berg ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜசிங்கம் சிவராஜா 29.09.2016 அன்று ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜசிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) மற்றும் பொற்கொடி தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான நடராஜா மகேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் அனுஜாவின் (ஜேர்மனி) பாசமிகு கணவரும், லோஜினி, தவராஜா (மெக்கானிக் அப்பன்), நந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ஆனந்தகுமாரசாமி மற்றும் வனஜா, பரமநாதன், ரஞ்சனா (கனடா), காலஞ்சென்ற சுதர்சன் மற்றும் கந்தவேள் (ஓய்வு பெற்ற லிகிதர்), நரேந்திரன் (அதிபர்,ஏழாலை தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலை),கெங்கா ஆகியோரின் மைத்துனரும் ஸ்ரீஜனனி (UK), ஸ்ரீஜனன் (பாதுகாப்பு உத்தியோகத்தர், இலங்கை வங்கி, காங்கேசன்துறை), பகலவன், லேகா, நிறோஜா, திவ்யா, கேசவன் ஆகியோரின் மாமனாரும் காருண்யன், புனர்வரன், றகீஸ், நிலானி, பவித்தா (கனடா), தனுராஜ், கவிசாந், ஜஸ்மினா ஆகியோரின் பெரியப்பாவும் கம்சிகா (UK) வின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16.10.2016 இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இலங்கையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்** (6336) **தகவல் குடும்பத்தினர்.**

## பாரிய மோசடியில் ஈடுபட்ட இரண்டு அரச நிறுவனங்கள்

(கொழும்பு)

இலங்கையில் ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகளில் ஈடுபட்ட நிறுவனங்கள் தொடர்பான தகவல் வெளியாகியுள்ளது.

அரசாங்க கணக்காய்வு குழுவினால் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் மற்றும் இலங்கை சுங்க திணைக்களம் என்பன இவ்வாறு பெயரிடப்பட்டுள்ளன.

அரசாங்கத்துக்கு பெருந்தொகையான வருமானத்தை பெற்றுக் கொடுக்கும் நிறுவனங்களாக குறித்த இரண்டு நிறுவனங்கள் காணப்படுவதாக அரசாங்க கணக்காராய்வு குழுவின் தலைவர் பிரதி அமைச்சர் லசந்த அலகியவன்ன தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையில் பல்வேறு ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் காரணமாக அதற்கு சமமான பணத்தை இழப்பதும் இந்த நிறுவனங்களாகும் என அவர குறிப்பிட்டுள்ளார்.

இந்த இரண்டு நிறுவனங்களின் ஊழல் மோசடி முறைகேடு தொடர்பிலான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கை நாடாளுமன்றத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். எனவே இது தொடர்பில் நாடாளுமன்றமே தீர்மானம் மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும தெரிவித்துள்ளார். (இ-3)

## மரண அறிவித்தல்

### திருமதி திருச்செல்வம் தவநாயகி



கலட்டி அல்வாய் கிழக்கை பிறப்பிடமாகவும் உடுப்பிட்டி இலக்கணாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் தவநாயகி 14.10.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராசா சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற தியாகராசா மற்றும் சின்னம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற திருச்செல்வத்தின் அன்பு மனைவியும் யசோதரன் (கனடா), காலஞ் சென்ற யசோதரி மற்றும் ஜெயதரன் (ஜேர்மனி), சசிகலா (சுவிஸ்), காலஞ்சென்ற சசிதரன் மற்றும் ஜெயமாலினி, ரஜிதரன் (நோர்வே) துசாந்தினி, டினேஸ்குமார் (ஜேர்மன்) சசிரேகா ஆகியோரின் அன்புத்தாயாரும் புஸ்பநாயகி செல்வநாயகம் (சுவீடன்), காலஞ்சென்றவர் களான இராசநாயகம் சத்தியநாயகம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரது உடுப்பிட்டி இலக்கணாவத்தை இல்லத்தில் 17.10.2016 நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இலக்கணாவத்தை உடுப்பிட்டி** (சி-6126) **தகவல்: குடும்பத்தினர் 077 539 7845**

## இராசி பலன்

16.10.2016
(புரட்டாதி 30, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
பூரணை முற்பகல் 10.31 மணிவரை
ரேவதி பிற்பகல் 12.35 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
அமிர்தசித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தரம், அத்தம்<br>பகல் 12.36 மணிக்கு<br>மேட-சந் | | |
| | | | ராகு |
| செவ் | சனி சுக் | | குரு, புதன், சூரி |

**மேடம்** — திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும், விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடிவரலாம்.

**இடபம்** — தொழிலில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தேவையற்ற சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** — வெளியூர்த் தொடர்புகள் நன்மைதரும், புதிய நட்புகள் இடம்பெறலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், பொதுநல ஈடுபாட்டால் புகழ்பெறுவீர்கள்.

**கடகம்** — நம்பிக்கைகள் நடைபெறலாம், தொல்லை தந்தவர்களே தோள் கொடுத்து உதவ முன்வரலாம், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறலாம், ஆன்றோர் சந்திப்புண்டு.

**சிம்மம்** — சிந்தித்து செயற்பட்டு சிறப்புகளைக் காண வேண்டிய நாள், வேலைச்சுமை கூடும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், நடைபெறவிருந்த காரியமொன்று தாமதமாகலாம்.

**கன்னி** — உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, போசன சுகக் குறைவுகள் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**துலாம்** — செய்தொழில் மேன்மையுண்டு, அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** — நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு** — பொன்னான எதிர்காலத்தை அமைக்க புதிய வழி பிறக்கும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்** — நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, சுபகாரியச் செலவுகள் ஏற்படலாம்.

**கும்பம்** — சமுதாயப் பணிகளில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வியாபார விருத்தியுண்டு, வாய்ப்புக்கள் அதிகரிக்கும்.

**மீனம்** — மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

# WINGS

A FESTIVAL OF ARTS

අපේක්ෂාවේ පියාසැරිය

நம்பிக்கையின் சிறகசைப்பு

கலைத்துவச் செயற்பாடுகள் மற்றும் உருவாக்கங்கள் மூலமாக நல்லிணக்க எண்ணக்கருவை அணுகும் வகையில் நாடு முழுவதிலிமிருந்தான கலைஞர்கள், செய்முறையாளர்கள், எழுத்தாளர்கள், இளையோர்கள் மற்றும் கலைக்குழுக்களினால் வடிவமைக்கப்பட்ட கலைப்படைப்புக்களை காட்சிப்படுத்தும்

**வடபுலத்திலிருந்து ஆரம்பமாகும் தேசியமட்ட பெருவிழா**

# கலைகளின் சங்கமம்

**2016 ஒக்டோபர் மாதம் 21,22,23 ஆம் திகதிகளில்**
**காலை 9.00 மணி தொடக்கம் மாலை 9.00 மணி வரை**
**கிளிநொச்சி கூட்டுறவுச் சங்க கலாசார மண்டபம் மற்றும்**
**கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில்**

தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகங்களின் பாரம்பரிய கலைகள், மேடை நாடகங்கள், சிறுகதை எழுத்தாக்கங்கள், கருத்துக்கள நாடகங்கள், ஆடல், பாடல் மற்றும் நடன ஆற்றுகைகள், திரைப்படக் காட்சிகள், கவியரங்கம், கலைக்கருத்தரங்குகள் மற்றும் ஓவியக்கண்காட்சி போன்ற நிகழ்வுகள் இடம்பெற இருக்கின்றன.

**அனுமதி இலவசம்**

விழா பங்குதாரர்கள்:

OFFICE FOR NATIONAL UNITY AND RECONCILIATION

European Union

german cooperation
DEUTSCHE ZUSAMMENARBEIT

giz

care

YOU CREATE

www.wingssrilanka.com

# சுயாதீன ஆணைக்குழுக்களின் அதிகாரிகள் சுயாதீனமாகச் செயற்படுவதேயில்லை

## ஜனாதிபதியின் கருத்துக்கு வலுச்சேர்க்கிறார் அமைச்சர் அமரவீர

(கொழும்பு)

***எத்தனை சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்பட்டாலும் அவற்றுக்கு நியமிக்கப்படும் அதிகாரிகள் சுயாதீனமாக செயற்படுவதில்லை என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.***

திக்ஓவிட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள், குற்றவாளிகள், திருடர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இராணுவத்தினைச் சேர்ந்தவர்கள் தவறிழைத்திருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும். 15-20 ஆண்டுகளுக்கு முன்னைய குப்பைகளை கிளறுவது பிரச்சினையாகும். ஜனாதிபதி இருக்கும் வரையில் படைவீரர்களுக்கு ஆபத்து ஏற்படாது.

போர் இடம்பெற்ற காலத்தில் உயிர்த்தியாகம் செய்த படையினரை நீதிமன்றங்கள், விசாரணைக்குழுக்கள் எதிரில் முன்னிலைப்படுத்தும் போது கிரமமான ஓர் முறை பின்பற்றப்பட வேண்டும். அவர்கள் துன்புறுத்தப்படக்கூடாது என்றே ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

கடந்த காலங்களில் இராணுவ உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டு மாதக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டமை எமக்கு பிரச்சினையை ஏற்படுத்தியது.

போரை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளோம். படையினர் துன்புறுத்தப்படுவதனை எவரும் விரும்புவார்கள் என நான் எதிர்பார்க்கவில்லை. சுயாதீன ஆணைக்குழுக்கள் சுயாதீனமாக செயற்பட நாம் அனுமதியளித்துள்ளோம்.

சுயாதீன ஆணைக்குழுக்களின் விசாரணைகளுக்கு ஜனாதிபதி ஒரு போதும் தலையீடு செய்வதில்லை.


எனினும் சில அதிகாரிகளின் செயற்பாடுகள் குறித்து எம்மால் திருப்தி அடைய முடியாது என மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (இ-3)


**யாரிடம் பேசுவது?**

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

**எம்முடன் பேசுங்கள்.**

**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
**021 222 8117, 077 900 8776**
வவுனியா: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)


# மைத்திரிக்கு பதிலாக எனக்கே முதல் அழைப்பு விடுக்கப்பட்டது

## அமைச்சர் அர்ஜுன கூறுகிறார்



கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிடுமாறு முதலில் தனக்கே அழைப்பு விடுக்கப்பட்டதாக துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எனினும் தனக்கு ஜனாதிபதி பதவி தேவையில்லை எனவும் தகுதியான வேறு ஒருவரை தெரிவு செய்து கொள்ளுமாறும் தான் கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

நீதியான சமூகத்திற்கான மக்கள் அமைப்பின் தலைவரான காலஞ்சென்ற மாதுளுவாவே சோபித தேரர் தனக்கு இந்த அழைப்பை விடுத்திருந்ததாகவும் அர்ஜுன ரணதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா:27 1/2<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில் A/L மின்னியலாளர்<br>தொ.இ: B/6307 | பிறப்பு: 1979இந்து<br>நட்சத்திரம்: விசாகம்3<br>கி.பா: 10 1/2<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம் முக்கியம்<br>தொ.இ: G/6315 |
| பிறப்பு: 1981 RC<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:Own Business (தனியார்)<br>எதிர்பார்ப்பு: விவாகரத்து பெற்றவர்<br>தொ.இ: B/6308 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 4<br>கி.பா:110 செவ் 8 இல்<br>உயரம்:148 cm<br>தகைமை/தொழில்:ஆசிரியர் (அரச)<br>எதிர்பார்ப்பு:உள்நாடு (அரசதொழில்)/ வெளிநாடு<br>தொ.இ: G/6317 |
| பிறப்பு: 1983 RC<br>நட்சத்திரம்: பரணி 1<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: B/6309 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா:38 செவ் 8 இல்<br>உயரம்:150 cm<br>தகைமை/தொழில்: BSc Bio Science<br>எதிர்பார்ப்பு:அரச தொழில்<br>தொ.இ: G/6320 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>கி.பா: 61 1/2 செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:UKகடை (A/L)<br>தொ.இ: B/6310 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா:12 3/4 செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc.Acma.MBA. ERP consultant<br>எதிர்பார்ப்பு:அரசதொழில்<br>தொ.இ: G/6324 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

# இலங்கையில் சிவசேனை அமைப்பு தொடங்கியதில் உடன்பாடில்லை

## தொல்.திருமாவளவன் பேட்டி

இலங்கையில் சிவசேனை அமைப்பு தொடங்கி இருப்பதை, முள்ளிவாய்க்கால் பிரச்சினைக்கு பிறகு அங்கு வாழ்கின்ற மக்கள் தங்களை தற்காத்துக் கொள்ளவும், இந்தியாவில் உள்ள பி.ஜே.பியினரின் கவனத்தை ஈர்க்கும் ஒரு முயற்சியாக தான் பார்ப்பதாகவும் ஆனால் தனக்கு இதில் உடன்பாடு என்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் கூட தமிழ் அடையாளத்தை முன்வைத்து போராட்டம் நடத்தினாரே தவிர இந்து மதத்தை முன்வைத்து அல்ல என்றும் அவர் கூறினார்.

தமிழகத்தில் எதிர்வரும் நவம்பர் 17 ஆம் திகதி தேசிய அளவில் தலித் முன்னணியின் மாநாடு ஒன்றை நடத்தவிருப்பதாக கூறிய அவர், அண்மையில் வெளியான தேசிய குற்ற ஆவண மையத்தின் புள்ளிவிபரத்தை சுட்டிக்காட்டி, இந்தியாவிலே தமிழகத்தில் அதிகளவில் கௌரவ கொலைகள் நடத்திருப்பதாகவும், கடந்த ஆண்டில் மட்டும் 1700இற்கும் மேற்பட்ட வன்கொடுமைத் தாக்குதல்கள் தலித்கள் மீது நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வர் ஜெயலலிதா உடல்நிலை குறித்து கருத்து தெரிவித்த அவர், தமிழக முதல்வர் விரைவில் குணமடைந்து வீடு திரும்ப வேண்டும். அவர் உடம்பிற்கு என்ன என்பதையே யாரும் அறிந்து கொள்ள முடியாத நிலை



உள்ளது. மத்திய அமைச்சர்கள், ஆளுநர் யாருமே முதல்வரை சந்திக்க முடியவில்லை என்கிற போது அதிர்ச்சியாக இருக்கிறது.

மேலும், ஆட்சி அதிகாரம் குறித்து பல தரப்பட்ட தகவல் வெளியான நில்லையில் அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக ஆளுநர் ஓ.பன்னீர்ச்செல்வத்திடம் பொறுப்புகளை வழங்கி இருப்பதாகவும், முதல்வர் ஜெயலலிதா முன்னர் சுறுசுறுப்பாக ஆட்சி செய்தது போன்ற நிலை தற்போது இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இறுதியாக, உள்ளாட்சித் தேர்தலிலும் மக்கள் நலக்கூட்டணியில் உள்ள நான்கு கட்சியும் தோழமையுடன் செயறபடும் என்றும் தெரிவித்துள்ளார். (இ-3)

# ஹைட்ரோ ஃபுளூரோ கார்பன்களை அகற்றுவதற்கான ஒப்பந்தம் வெற்றி

சுமார் இருநூறு நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள், உலக வெப்பமயமாதலுக்கு அதிக பங்களிப்பைச் செய் யும் ஹைட்ரோ ஃபுளூரோ கார்பன்களை அகற்றுவதற்கான ஓர் ஒப்பந்தத்தை வெற்றிகரமாக எட்டியுள்ளனர்.

ருவாண்டா தலைநகர் கிகாலியில் கூடியிருந்த பிரதிநிதிகள் இரவு முழுவதும் நடத்திய பேச்சுவார்த்தைக்கு பின், ஹைட்ரோ ஃபுளூரோ கார்பன் பயன்பாட்டைப் படிப்படியாக நிறுத்துவது என்ற ஒப்பந்தத்தை ஆரவாரங்களுடன் நேற்று முன்தினம் அறிவித்தனர். ஹைட்ரோ ஃபுளூரோ கார்பன் என்பவை தான், குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் குளிரூட்டிகள் ஆகிய சாதனங்கள் செயற்படத் தேவையான ஒரு முக்கியமான அம்சமாகும்.

கரியமிலவாயு எனப்படும் கார்பன்டை ஒக்சைட்டை (carbon dioxide)பசுமை வாயுக்கள் என்று அறியப்படும் கிரீன்ஹவுஸ் வாயுக்களை(green house gases) போன்று ஹைட்ரோ ஃபுளூரோ கார்பன்கள் ஆயிரம் மடங்கு சக்தி வாய்ந்தவை என்று கூறப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் கீழ், பணக்கார நாடுகளில் ஹைட்ரோ ஃபுளூரோ கார்பன் பயன்பாடு மூன்று ஆண்டுகளில் நிறுத்தப்படும.

குறைவான வளர்ச்சியை உடைய நாடுகளில், இந்த முயற்சி பல ஆண்டுகளுக்குப் பின்னர் தொடங்கும் எனத் தெரியவருகிறது. (இ-3)

# அவதூறுப் பிரசாரங்களால் பாதிக்கப்பட்டநபர் நான்தான்

## கூறுகிறார் ட்ரம்ப்




பல பெண்கள் தன் மீது பாலியல் தாக்குதல் தொடர்பாக குற்றம் சாட்டியதற்குப் பின், டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க வரலாற்றில் மோசமான அரசியல் அவதூறு பிரசாரங்களால் பாதிக்கப்பட்ட நபர் தான் எனப் புகார் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளராக உள்ள ட்ரம்ப், தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் நூறு சதவீதம் பொய்யானவை என்று கூறியுள்ளார்.

தேர்தலுக்கு ஒரு மாதத்திற்கும் குறைவான நாட்களே உள்ள நிலையில், ட்ரம்ப் தனது ஆதரவாளர்களிடம் இந்தத் தேர்தல் தில்லுமுல்லு நிறைந்தது என்றார்.

ஒரு தசாப்தத்திற்கு முன்பு, பெவர்லி ஹில்ஸ் ஹோட்டலில் ட்ரம்ப் தன் மீது வலுக்கட்டாயமாக விழ முயன்றார் என்று அவர் மீது குற்றம்சாட்டியவர்களில் ஒருவரான சம்மர் ஜெர்வோஸ் கூறியுள்ளார்.

சமீபத்திய கருத்துக்கணிப்புகளூடாக ஜனநாயகக்கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளின்டன் தனது முன்னிலையை அதிகரித்துக் கொண்டிருப்பதாக தெரியவருகிறது. (இ-3)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

16 10-2016

- 1775 - ஐக்கிய அமெரிக்காவில் மேய்ன் மாநிலத்தின் போர்ட்லண்ட் நகரம் பிரித்தானியரால் எரிக்கப்பட்டது.
- 1781 - ஜோர்ஜ் வாஷிங்டன் வேர்ஜீனியாவின் யோர்க்டவுன் நகரைக் கைப்பற்றினார்.
- 1793 - பிரெஞ்சுப் புரட்சி: பிரான்சின் பதினாறாம் லூயி மன்னனின் மனைவி மரீ அணடொனெட் கழுத்து வெட்டி மரணதண்டனைக்குட்படுத்தப்பட்டாள்.
- 1799 - பாஞ்சாலங்குறிச்சி மன்னன் கட்டபொம்மன் ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்டான்.
- 1813 - ஆறாவது கூட்டணி நாடுகள் நெப்போலியன் பொனபார்ட் மீது லீப்சிக் நகரில் தாக்குதலை ஆரம்பித்தன.
- 1834 - லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனையின் தொன்மைப் பொருட்கள் பல எரிந்து சேதமடைந்தன.
- 1905 - ரஷ்ய இராணுவம் எஸ்தோனியாவில் மக்கள் கூட்டமொன்றின் மீது சுட்டதில் 94 பேர் கொல்லப்பட்டனர்.
- 1905 - பிரித்தானிய இந்தியாவில் வங்காளப் பிரிப்பு இடம்பெற்றது.
- 1923 - வால்ட் டிஸ்னி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1934 - குவோமின்டாங்குகளுக்கு எதிரான சீனக் கம்யூனிஸ்டுக்களின் தாக்குதல் ஆரம்பமானது..
- 1942 - பம்பாயில் இடம்பெற்ற வெள்ளப் பெருக்கில் 40,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1949 - கிரேக்க கம்யூனிசத் தலைவர் நிக்கலாஸ் சக்காரியாடிஸ் தற்காலிக போர்நிறுத்தத்தை அறிவித்தார். கிரேக்க உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.
- 1951 - பாகிஸ்தானின் முதலாவது பிரதமர் லியாகட் அலி கான் ராவல்பிண்டியில் சுட்டுக்கொல்லப்பட்டார்.
- 1964 - மக்கள் சீனக் குடியரசு தனது முதலாவது அணுவாயுதச்சோதனையை மேற்கொண்டது.
- 1973 - ஹென்றீ கிசிங்கர், லே டுக் தோ அமைதிக்கான நோபல் பரிசு பெற்றனர்.
- 1975 - கிழக்குத் திமோரில் ஆஸ்திரேலிய தொலைக்காட்சி ஊடகவியலாளர்கள் ஐந்து பேர் இந்தோனீசியப் படைகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1984 - தென்னாபிரிக்காவின் டெஸ்மண்ட் டுடு அமைதிக்கான நோபல் பரிசு பெற்றார்.
- 1987 - தெற்கு இங்கிலாந்தில் இடம்பெற்ற சூறாவளியில் 23 பேர் கொல்லப்பட்டனர்.
- 1996 - குவாத்தமாலாவில் உதைப்பந்தாட்டப் போட்டி நிகழ்வில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 84 பேர் கொல்லப்பட்டனர்.
- 1998 - சிலியின் முன்னாள் சர்வாதிகாரி ஆகுஸ்டோ பினொச்சே லண்டனில் கைது செய்யப்பட்டார்.
- 2003 - தமிழ் விக்கிப்பீடியாவில் முதலாவது கட்டுரை சிரின் எபாடி பற்றி எழுதப்பட்டது.
- 2006 - ஈழப்போர்: இலங்கை, ஹபரணையில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 102 கடற்படையினர் கொல்லப்பட்டனர.
- 2006 - இலங்கையில் 1987 இல் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை அடுத்து இணைக்கப் பட்டிருந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இணைப்பு செல்லுபடியற்றது என்று இலங்கை உயர் நீதிமன்றம் அறிவித்தது.

**பிறப்புக்கள்**

- 1854 - ஆஸ்கார் வைல்டு, ஐரிய எழுத்தாளர். (இ. 1900)
- 1927 - கூன்டர் கிராசு, இலக்கியத்திற்கான நோபல பரிசு பெற்ற செருமானியர். (இ. 2015)
- 1963 - சூசை, கடற்புலிகளின் தலைவர்.
- 1975 - ஜாக் காலிஸ், தென்னாபிரிக்கத் துடுப்பாட்டக்காரர்.

**இறப்புகள்**

- 1799 - கட்டபொம்மன், பாஞ்சாலங்குறிச்சி மன்னன் . (பி. 1760)
- 1951 - லியாகட் அலி கான், பாகிஸ்தானின் முதலாவது பிரதமர். (பி. 1896)

**சிறப்பு நாள்**

- உலக உணவு நாள்.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவச்சேரி | சாவச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 60 | 50 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 80 | 120 |
| தக்காளி | 120 | 60 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 70 | 60 |
| கோவா | 80 | 80 | 80 | 80 |
| கரட் | 120 | 100-200 | 80 | 160 |
| பூசணி | 30 | 40 | 30 | 40 |
| புடோல் | 50 | 60 | 50 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 100 |
| பாகற்காய் | 160 | 200 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 60 | 120 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 100 | 120 |
| பயற்றங்காய் | 120 | 100 | 80 | 80 |
| லீக்ஸ் | 140 | 120 | 120 | 160 |
| பீற்றூட் | 60 | 50 | 60 | 80 |
| கறிமிளகாய் | 140 | 120 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 120 | 100 | 100 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | 50 | 60 |
| கீரை - 1பிடி | 20 | 30 | 50 | 40 |
| தேசிக்காய் | 600 | 450-600 | 400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 35 | 30-40 |
| இராசவள்ளி | – | – | – | – |
| வெங்காயப்பூ | 180 | 160 | – | 160 |
| முள்ளங்கி | 60 | 60 | 50 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | – | – | – | - |

# மாதர் அபிவிருத்தி சங்க கட்டடத் திறப்பு விழா



யாழ்.இருபாலை தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கலாநிதி க.சர்வேஸ்வரன் கலந்து கொண்டு கட்டடத்தினை நாடாவெட்டி திறந்துவைத்ததுடன் சங்க உறுப்பினர்களுக்கு வாழ்வாதார உதவியாக சுழற்சி முறை கடனும் வழங்கிவைத்தார். (இ-91)

# ஐந்து பில்லியன் ரூபா நட்டஈடு கோரும் அர்ஜுன் அலோசியஸ்

(கொழும்பு)

தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் சில ஊடகங்கள் வெளியிட்டுள்ள கருத்துக்கள் தொடர்பில் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்தரனின் மருமகன் அர்ஜுன் அலோசியஸ் நட்டஈடு கோரியுள்ளார்.

இது தொடர்பாக குறித்த ஊடகத்திற்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார் என கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த தொலைக்காட்சி ஊடகங்கள் தன்னைப் பற்றி தவறான அறிக்கைகளை வெளியிடுவதனால் 5 பில்லியன் நட்டஈடு கோரி கடிதத்தை அனுப்பியுள்ளார். (இ-3)

# வாரம் ஒரு தகவல்

## பாடல் ஒன்றுக்கு ஒரு பொன் தேங்காய்

பாண்டிய நாட்டின் ஒரு பகுதியாகிய சேது நாட்டை (இராமேஸ்வரமும் அதைச் சார்ந்த பகுதியும்) ஆண்டுவந்த தளவாய் இரகுநாத சேதுபதி தமிழ்ப் புலமை சார்ந்தவராய் இருந்ததோடு புலவர் பெருமக்களைக் கண்போல் காத்து ஆதரவுகள் நல்கிப் பேணி வந்தார்.

இவரது அவையைப் புலவர்கள் பலர் அணி செய்து வந்தனர். இவர்களுள் தலைசிறந்து விளங்கியவர் அமுத கவிராயர் என்பவர். இவர் தம் புலமைச் சிறப்பும் கவிதை பாடும் வல்லமையும் பிற புலவர்களை இவர் மீது பொறாமை கொள்ள வைத்தன.

இரகுநாத சேதுபதி தம் அவைப் புலவர்களோடு அரண்மனைப் பூங்காவில் அமர்ந்திருந்தார். மாலை நேரம் புலவர்கள் புலமைச் சுனைகளில் மூழ்கிய மன்னவர் தம் உள்ளத்தை இன்பத்தில் மிதக்க விட்டுக் கொண்டிருந்தார்.

அப்போது அரசர் புலவர்களைப் பார்த்து அகப் பொருளில் ஒவ்வொரு துறையிலும் ஒரு பாடல்தானே பாடப்பட்டு வருகின்றது. மிகுதியாகப் பாட முடியுமா எனக் கேட்டார். ஒவ்வொரு புலவரும் தம்தம் ஆற்றலுக்கேற்ப தம்மால் முப்பது பாட முடியும் நாற்பது பாட முடியும் என்று கூறினார்கள். அமுத கவிராயரோ நான் நூற்று பாடுவேன் என்றார்.

மற்றப் புலவர்கள் அமுத கவிராயர் மீதுள்ள தங்கள் பகைமையைத் தீர்த்துக்கொள்ள இதுவே தருணம் என எண்ணி அவர் (நான் + நூறு) நாநூறு பாடுவாராம் எனக் கூறினார்கள்.

அமுத கவிராயர் தம்மை விட்டுக்கொடுக்காத படி, பாடினால் தீர்கிறது என மிடுக்காகப் பதில் அளித்தார்.

தாம் சொல்லியவாறே அமுத கவிராயர் நாணிக் கண் புதைத்தல் என்னும் ஒரே துறையில் நாநூறு கவிதைகள் பாடினார்.

பாடல் ஒவ்வொன்றும் முதல் இரண்டடிகள் மன்னர் சேதுபதியின் சிறப்பையும் ஏனைய இரண்டடிகள் அகப்பொருள் கருத்தையும் தெரிவிப்பதாய் இருந்தது.

இப்பாடல்களின் சொல்லழகிலும் கருத்தழகிலும் உள்ளம் களிப்புற்றார் இரகுநாத சேதுபதி. இந்நூலின் அரங்கேற்றம் நடந்தபோது ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு பொன் தேங்காய் வீதம் நாநூறு பொன் தேங்காய்கள் மன்னர் அவருக்குப் பரிசாக அளித்தார். மேலும் பொன்னாங்கால் என்ற ஊரையும் மன்னர் கவிஞருக்கு பரிசாக அளித்து அவரை செழுமைப்படுத்தினார்.

**கவிஞர் தே.ப.பெருமாள்**

# சிவில் அமைப்புக்கள் கடும் அதிருப்தி!

## மகிந்த பாதையில் மைத்திரி பயணிப்பதாக விசனம்

நல்லாட்சியை நோக்கிய பயணத்தில் சிவில் அமைப்புகள் செய்த பங்களிப்பு மற்றும் மக்களை அரசாங்கதின் பக்கம் திருப்பிய அனைத்து விடயங்களும் இன்று கேள்விக்கு உள்ளாகி விட்டன. நல்லாட்சி புத்தகத்தை மீண்டும் ஒருமுறை ஜனாதிபதியும் பிரதமரும் படிக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. நாம் ஏற்படுத்திய அரசாங்கம் தப்பானதாகிவிட்டது என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம் என சிவில் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

நல்லாட்சியை முன்னெடுக்கும் பயணத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் பின்னிற்கின்றனர். நல்லாட்சியின் பக்கம் இவர்களை திருப்ப எம்மாலான சகல அழுத்தங்களையும் நாம் வழங்குவோம் எனவும் சிவில் அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

புரவசி பலய உள்ளிட்ட சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் மருதானை சனசமூக நிலையத்தில் நடத்திய விசேட செய்தியாளர்சந்திப்பின்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டனர் .

இதில் கருத்து தெரிவித்த கலாநிதி காமினி வியங்கொட தெரிவிக்கையில்,

சுயாதீன நிறுவனங்கள் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த கருத்துக்கள் இன்று அனைவர் மத்தியிலும் பாரிய கருத்து முரண்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டுவந்த எம்மீதும் பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன. ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்திருப்பது தொடர்பில் நாம் என்ன செய்யப்போகின்றோம் என மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் எம்மிடம் கேள்வி கேட்கின்றனர். ஆனால் சிவில் அமைப்புகள் என்ற வகையில் நாம் ஜனாதிபதியின் கருத்தினை வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இன்று மகிந்த ராஜபக்ஷவின் பாதையில் பயணிக்க ஆரம்பித்துவிட்டார்.

தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியை சந்தித்த பின்னர் மிகக் குறுகிய காலத்தில் மீண்டும் அவர் மக்கள் மத்தியில் பலமான நபராக எழுந்துள்ளார் என்றால் அது நல்லாட்சியின் தோல்வியென்றே கூறவேண்டும். அவ்வாறு இருக்கையில் மீண்டும் மீண்டும் ஜனாதிபதி இவ்வாறான கதைகளைக் கூறுவது நல்லாட்சியின் இலட்சினை அல்ல.

இந்த அரசாங்கத்தை நம்பி வாக்களித்த 62 இலட்சம் மக்களுக்கும் இவர்கள் நம்பிக்கையிழந்த தலைமைகளாக மாறிவருகின்றனர். முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் இராணுவ அதிகாரிகள் மூவரை விசாரித்தமை தவறானது என்றும் தனக்கு இந்த விடயம் தெரியாது எனவும் அவர் கூறியிருப்பது தனது கட்சி அரசியலை பலப்படுத்தவும் மகிந்த மற்றும் அவரது குடும்பத்தினரை காப்பாற்றவும் எடுக்கும் முயற்சியாகவே கருதப்பட முடியும்.

கோத்தபாய ராஜபக்ஷவின் நகர்வுகள் அடுத்தகட்ட அரசியல் பயணமாகவே அமைந்துள்ளன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தை எடுத்து நாட்டை ஆளும் ஆசை அவருக்கும் வந்துள்ளது. ஆனால் மகிந்த ராஜபக்ஷவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் வெறுமனே நிதி மோசடி குற்றச்சாட்டுக்கள் மட்டுமல்ல அதையும் தாண்டிய பல்வேறு குற்றச்சாட்டுகள் உள்ளன. அவ்வாறான நபர்களை மீண்டும் ஆட்சிக்குள் கொண்டுவந்தால் அது நாட்டை நாசப்படுத்தும் செயலாகவே அமைந்துவிடும்.

இன்று மைத்திரிபால சிறிசேன செய்ததையே அன்று மகிந்த ராஜபக்ஷவும் மேற்கொண்டார். சுயாதீன அமைப்புகளில் முழுமையான அரசியல் தலையீடுகளை ஏற்படுத்தி நாட்டின் சுயாதீனத்தன்மையை முழுமைகாக சீரழித்தார். தமக்கு வேண்டியவர்கள் தமது விசுவாசிகள், தமக்காக வாக்களித்த மக்களுக்காக மாத்திரமே அவரது ஆட்சி சாதகமாக அமைந்தது.

அதேபோல் இராணுவத்தில் பல்வேறு குற்றங்கள், நடைபெற்றபோது அவற்றை கருத்தில் கொள்ளாது இராணுவ அதிகாரிகளை பாதுகாக்கும் நடவடிக்கையை மாத்திரமே அவர் மேற்கொண்டார். அதே பாணியில் இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பயணிக்க ஆரம்பித்துள்ளார். தனது விசுவாசிகளை பாதுகாக்கவும் குற்றவாளிகளை பாதுகாக்கவும் அவர் முன்வந்துள்ளார். தமக்கு வேண்டிய ஒரு சிலரை காப்பாற்றவும் வேண்டாத நபர்கள் மீது மாத்திரம் விசாரணைகளை மேற்கொண்டு தண்டிக்க முயற்சிப்பதும் நல்லாட்சியின் பண்பல்ல. சகலருக்கும் ஒரே வகையில் சட்டம் செயற்பட வேண்டும்.

எனினும் ஜனாதிபதியும் பிரதமரும் தமக்கு வேண்டப்பட்ட முக்கியமான குற்றவாளிகளை காப்பாற்றி வருகின்றனர். மத்தியவங்கி முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் விடயத்தில் மிகப்பெரிய குற்றம் மறைக்கப்பட்டு இன்றுவரையில் அவருக்கு எதிரான விசாரணை முன்னெடுக்கப்படாதுள்ளது.

அதேபோல் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் இராணுவ அதிகாரிகள் விவகாரத்தில் குற்றம் நிரூபிக்கப்படும் தறுவாயில் இருந்தும் இவர்களை காப்பாற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முயற்சித்து வருகின்றார். ஜனவரி எட்டாம் திகதி நாட்டில் ஏற்பட்ட மாற்றம் ஜனநாயகத்தை மாத்திரம் அல்ல சுயாதீனத்தையும் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தவுமே ஏற்படுத்தப்பட்டது. எனினும் நல்லாட்சியை முன்னெடுக்கும் பயணத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் பின்னிற்கின்றனர். இவர்களின் நகர்வினால் மீண்டும் நாட்டில் இனவாத சக்திகளுக்கே பலம் அதிகரிக்கும். ஆகவே நல்லாட்சியை பலப்படுத்த இவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்றார்.

கலாநிதி சரத் விஜயசூரிய கருத்து தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தை பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுள்ளார். குற்றவாளிகள் யார் என்பது தெளிவாக தெரிந்தும் அவர்களுக்காக ஜனாதிபதி துணை நிற்பது நல்லாட்சியையே கேள்விக்கு உட்படுத்தியுள்ளது. குற்றவாளிகளுக்காக சட்டமும், சுயாதீன நிறுவனங்களும் செயற்படுவதை சிவில் அமைப்புக்கள் வன்மையாகக் கண்டிக்கின்றன. தாஜுடீன், எக்னெலிகொட, ரவிராஜ் உள்ளிட்ட பலரது கொலைகள், பல ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டமை, பலர் நாடுகடத்தப்பட்டமை தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது உள்ளன. இவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளில் 95வீதமான குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்பட்டதில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் குற்றவாளி என நிரூபணமாகியுள்ளது. ஆனால் நீதி அமைச்சரின் தனிப்பட்ட தலையீடுகள் இவர்களை காப்பாற்றி வருகின்றது.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் சுயாதீன நடவடிக்கைகள் இல்லாத காரணத்தினால் தான் இந்த ஆட்சியில் நிதிக்குற்றப்புலனாய்வு பிரிவு, குற்றப்புலனாய்வு பிரிவு ஆகியவை உருவாக்கப்பட்டன. ஆனால் அதிலும் அரசியல் தலையீடுகள் ஏற்பட்டுள்ளன என்றால் சுயாதீனம் கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஜனவரி எட்டாம் திகதி நாட்டில் ஏற்பட்ட மாற்றத்தில் நல்லாட்சியை உருவாக்கும் பயணத்தில் முக்கியமான மூன்று பேர் பிரதானமாக காணப்பட்டனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொது வேட்பாளரை ஆதரிக்க தனது கட்சியினரை கோரினார். ஐக்கிய தேசியக் கட்சியின் முழுமையான ஆதரவும் பெறப்பட்டது. அதேபோல் சந்திரிகா குமாரதுங்க சிறுபான்மை மக்களின் பூரண ஆதரவை வழங்குமாறு வலியுறுத்தினார். மைத்திரிபால சிறிசேன நாட்டின் நல்லாட்சியை தன்னால் ஏற்படுத்த முடியும் என்ற வாக்குறுதியை சகலருக்கும் வழங்கினார் ஆனால் இவர்கள் மூவரும் இன்று தமது கட்சி நலனுக்காகவும் தனிப்பட்ட நபர்களின் நலனுக்காகவும் நல்லாட்சியை கேள்விக்கு உட்படுத்தி வருகின்றனர் எனத் தெரிவித்தார்.

செய்தியாளர் சந்திப்பில் சமன் ரத்னபிரிய கருத்து தெரிவிக்கையில,

நல்லாட்சியை நோக்கிய பயணத்தில் சிவில் அமைப்புக்கள் செய்த பங்களிப்பு மற்றும் மக்களை அரசாங்கத்தின் பக்கம் திருப்பிய அனைத்தும் இன்று கேள்விக்கு உள்ளாகிவிட்டன. நல்லாட்சி புத்தகத்தை மீண்டும் ஒருமுறை ஜனாதிபதியும் பிரதமரும் படிக்க வேண்டும். அதற்கான தேவை ஏற்பட்டுள்ளது. நாம் ஏற்படுத்திய அரசாங்கம் தப்பானதாகிவிட்டது என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். குற்றவாளிகளை காப்பாற்றி அவர்களை அரசியல் ஆசனத்தில் அமர வைக்க ஜனாதிபதியும் பிரதமரும் முயற்சித்து வருகின்றனர். ஆகவே இவர்கள் கூறிய நல்லாட்சி இதுவா என்ற கேள்வி இன்று எம்மத்தியில் எழுந்துள்ளது. நாம் ஆட்சியை கவிழ்க்க முயற்சிக்கவில்லை. அதற்கான தேவையும் இல்லை. இவர்கள் மனச்சாட்சியின் படி செயற்பட வேண்டும். நல்லாட்சியின் பக்கம் இவர்களை திருப்ப எம்மாலான சகல அழுத்தங்களையும் நாம் வழங்குவோம். அதையே நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# மக்களின் பாதுகாப்புப் பற்றி பேசுவதற்கு மகிந்தவுக்கு அருகதை கிடையாது!

## ஜே.வி.பியின் தலைவர் பேட்டி



**கேள்வி:-**புதிய அரசியல் வரைபில் தமிழ் மக்களுக்கு எவ்வாறான தீர்வுகள் வழங்கப்பட வேண்டும். இது தொடர்பாக உங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன?

பதில்:- அரசியல் யாப்பின் மூலம் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் காணப்பட முடியும் என்ற நிலைப்பாட்டில் நாம் இல்லை. பிள்ளைகளுக்கு தொழில் இல்லை, வீதிகள் இல்லை, தாகத்திற்கு குடிப்பதற்கு சுகாதாரமான நீரில்லை, சிறப்பாக கல்வியை கற்கக் கூடிய வளங்கள் நிறைந்த பாடசாலைகள் இல்லை, மகிழ்ச்சியாக வாழ்வதற்கு வீடுகள் இல்லை, பொருளாதார வசதிகள் இல்லை. மக்கள் உயிர் வாழ்தற்கான அடிப்படை வசதிகளை முதலில் செய்ய வேண்டும். இவைகள் தான் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள். இதற்கு யாப்பின் மூலம் தீர்வு காண முடியாது.

இதனை மறைத்துக் கொண்டு தற்போது அரசாங்கம் புதிய யாப்பு ஒன்றினை அறிமுகப்படுத்த முயற்சி செய்து, அதனை விளம்பரப்படுத்திக்கொண்டு தங்களுக்கு இருக்கின்ற இயலாமையை மறைத்துக் கொண்டு காலம் கடத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. இந்நிலையில் இந்த யாப்பினை மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் பாரிய பூதமாக நினைத்து தெற்கில் பிரசாரம் செய்து மக்களைக் குழப்பி அரசியல் குளிர் காய்கின்றனர்.

அந்தவகையில் இந்த இரண்டு தரப்பினரும் யாப்பினை ஒரு கால்பந்தாக நினைத்து விளையாடிக் கொண்டு மக்களை ஏமாற்றுகின்றனர். இலங்கை மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளையும் அவர்களின் உள்ளத்தில் இருக்கும் பிரச்சினைகளையும இனங்கண்டு அதற்கு தீர்வு பெற்றுக்கொடுத்து இந்த நாட்டு மக்கள் அனைவரையும் மகிழ்ச்சியாக வாழ வைப்பதே எமது இலக்கு. அதற்காகவே நாம் தற்போது மக்கள் ஆட்சியை கோரி வருகின்றோம்.

**கேள்வி:-** தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு சுயாட்சி, சமஷ்டி, சமத்துவம் தொடர்பாக கோரி வருகின்ற நிலையில் உங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன?

**பதில்:-** தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வசம் வடக்கு மாகாணசபை இருப்பதுடன் தற்போது உள்ள ஆட்சியைத் தக்கவைப்பதற்கு பூரண முட்டுக் கொடுப்பினையும் வழங்கி வருகின்றனர். இந்நிலையில் தமிழ் மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளுக்கு எந்தவிதமான தீர்வும் பெற்றுக் கொடுத்ததாகத் தெரியவில்லை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வடக்கில் இருக்கின்ற மக்களின் மனதில் இனரீதியான உணர்வுகளை தூண்டிவிட்டு அதில் அவர்கள் சுகமாக குளிர் காய்ந்து வருகின்றனர்.

அதைப்போல் மகிந்த ராஜபக்ஷவும் தெற்கில் இருக்கின்ற மக்களின் உணர்வுகளில் இன வாதத்தினை தூண்டிவிட்டு அதில் இருந்து நன்மை பெறுவதற்கு முயற்சிக்கின்றார். ஆனால் இந்த நடவடிக்கைகள் காரணமாக அரசியல் தலைவர்கள் காலம்காலமாக இலாபம் அடைகின்றார்களே தவிர மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை. தொடர்ந்து ஏமாற்று அரசியலையே இந்த தலைவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இதற்கு மக்கள் ஒரு முற்றுப்புள்ளி இடவேண்டும்.

**கேள்வி:-** நல்லாட்சி அரசினால் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்பாடுகள் ஊடாக மக்கள் எவ்வாறான நன்மைகளைப் பெற்று வருகின்றனர்?

**பதில்:** -இந்த நல்லாட்சி எனச் சொல்லப்படுகின்ற அரசினால் மக்களுக்கு இன்றுவரை எதுவும் கிடைக்கவில்லை. ரணிலுக்கு பிரதமர் பதவி கிடைத்திருக்கின்றது, தயாகமகேக்கு அமைச்சுப் பதவி கிடைத்திருக்கின்றது, இன்னும் பலருக்கு பதவிகள் கிடைத்திருக்கின்றன. ஆனால மக்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை.

இந்த ஆட்சியில் மக்களுக்கு ஒரே ஒரு நன்மை மாத்திரம் கிடைத்துள்ளது. அதாவது மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் மக்கள் மத்தியில் ஒரு அச்சம் இருந்தது. அது தற்போது நீக்கப்பட்டு சற்று சுதந்திரம் கிடைக்கப் பெற்றுள்ளது. இது மாத்திரம் தான் இந்த நல்லாட்சி அரசில் மக்கள் பெற்ற நன்மை ஆகும்.

நாட்டு மக்கள் வாழ்வதற்கு ஒரு வீடு இல்லாது பாரிய துன்பங்களில் வாழ்கின்ற நிலையில் அரசியல் தலைவர்களின் நிலைமைகள் அவ்வாறு இல்லை. அவர்களுக்கு கொழும்பில் ஒரு வீடு, கடற்கரையில் சுகமான ஒருவீடு, விடுமுறைக்காக நுவரெலியாவில் ஒரு வீடு. மக்களுக்கு வீடு இல்லாத போதும் அரசியல் தலைவர்களுக்கு நாடு பூராகவும் வீடுகள் உள்ளன. இதேவேளை இந்த நாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் மாறிமாறி ஆட்சி செய்கின்ற போதிலும் நாட்டு மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதை விட தங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொள்வதிலேயே முனைப்பு காட்டி வருகின்றனர்.

**கேள்வி:-** முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதிய அரசியல் கட்சியின் தோற்றம் அரசியலில் எவ்வாறான தாக்கங்களை செலுத்தும் என நீங்கள் கருதுகின்றீர்கள்?

பதில்:- உண்மையில் மகிந்த ராஜபக்ஷவை எடுத்துக் கொண்டால் மக்களின் சொத்துக்களை சூறையாடிய அவருக்கு மக்களின் சொத்துக்களின் பாதுகாப்பு பற்றிப் பேசுவதற்கு தகுதியில்லை. அத்துடன் வீண் விரயத்தையும் வீண் செலவுகள் பற்றியும் பேசுவதற்கு அருகதையில்லை. காரணம் அவர் மக்களின் பணத்தை வீண்விரயம் செய்தவர். அவர் குடும்ப அரசியல் செய்தவர். மகிந்தவுக்கு கொலை, கொள்ளைகளைப் பறறி பேச தகுதியில்லை அவர் அவற்றுக்கு உடந்தையாகவும் ஆதரவாகவும் செயற்பட்டவர். இதனால் எதிர்காலத்தில் ஆட்சி ஒன்று அமைப்பதற்கோ அல்லது தலைமைத்துவம் ஏற்பதற்கோ தகுதியற்றவர் மகிந்த. அவரின் கனவுக்கு மக்களின் ஆதரவும் கிடைக்கப் போவதில்லை.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் இங்கு தரப்படுகிறது.

**கேள்வி:-** வடக்கு, கிழக்கில் உள்ள மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பாக உங்கள் கருத்து எவ்வாறு உள்ளது?

பதில்:- எந்த சந்தேகமும் தேவையில்லை. மக்களின் காணிகள் மக்களிடம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

**கேள்வி:-** தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக உங்கள் கட்சியின் கருத்து என்ன?

பதில்:- இவர்கள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்பது எமது நிலைப்பாடு. அவர்களை விடுதலை செய்வதில் எமக்கு ஒரு பிரச்சினையும் இல்லை. இந்த அரசியல் கைதிகள் தொடர்பாக பாராளுமன்றத்திலும் பல இடங்களிலும் கதைக்கப்படுகிறது. அரசாங்கத்திற்கு கே.பி, கருணா அம்மான், தயாமாஸ்டர் ஆகியோரை சுதந்திரமாக நடமாடுவதற்கு அனுமதி கொடுக்க முடியும் என்றால் தற்போது சிறைகளில் 103 அரசியல் கைதிகள் இருக்கின்றார்கள். அவர்களுக்கும் ஒரு நியாயமான தீர்வினை வழங்கி அவர்களையும் விடுதலை செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் மக்கள் விடுதலை முன்னணி இருந்து வருகின்றது.

**கேள்வி:-** தமிழர் பிரதேசங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செல்வாக்கினை முறியடித்து தமிழ் மக்களின் வாக்குகளை பெறமுடியும் என நினைக்கின்றீர்களா?

பதில்:-மக்கள் விடுதலை முன்னணி என்ற கட்சி இம்முறை அனைத்துப் பிரதேசங்களிலும் போட்டி இடுவதற்கு தயாராக இருக்கின்றது. தமிழ் மக்கள் எமது கொள்ளைகளை ஆதரித்து எம்முடன் இணைவார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது. சோரம் போகாத அரசியல் வரலாற்றினை கொண்டவர்கள் நாம். அந்த வகையில் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் எமது கட்சியும் தமிழ் பிரதேசங்களில் போட்டியிடுவதுடன் அவர்களின் ஆதரவும் கிடைக்கும் என பூரணமாக நம்புகின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பிரிட்டனின் வழியில் இலங்கை விரைவில் புதிய அமைச்சரவை

இலங்கையில் தற்போது செயற்பாட்டிலுள்ள அமைச்சரவைக்கு மேலதிகமாக, அரசியல் அமைச்சரவை ஒன்றை நியமிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அந்த அமைச்சரவைக்கு 15 உறுப்பினர்களை பெயரிடுவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவ்வாறு பெயரிட்டதன் பின்னர் எதிர்வரும் வாரம் இந்த அமைச்சரவை ஒன்று கூட திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பிரித்தானியாவில் கூட்டணி அரசாங்கம் காணப்பட்ட சந்தர்ப்பத்தில் கூட்டு கட்சியுடன் அரசியல் அமைச்சரவை ஒன்று தனியாக நியமிக்கப்பட்டது.

தற்போதைய அரசாங்கம் புதிய அரசியல் அமைச்சரவையும் அதற்கமைய நியமிக்க ஆயத்தமாகின்றது.

பிரித்தானிய சம்பிரதாயத்திற்கமைய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அமைச்சரவை சந்திப்பு நடத்தப்படும் நாளில் அமைச்சரவை கூட்டத்தின் பின்னர் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் தலைமைத்துவத்தில் அரசியல் அமைச்சரவை கூடும்.

அரசாங்கத்திலுள்ள கட்சியில் காணப்படும் முரண்பாடான நிலைப்பாட்டினை கலந்துரையாடல்மேற்கொண்டு தீர்த்துக் கொள்வதற்கு இந்த அரசியல் அமைச்சரவை செயற்படும்.

விசேடமாக அரசியல் அமைச்சரவையின் பிரதான கட்சிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மற்றும் பங்கு கட்சிகளின் உறுப்பினர்களை உள்ளடக்குவது பிரித்தானியாவின் சம்பிரதாயம் என தெரிவிக்கப்படுகின்றது. (இ-3)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களின் தேவைகளை அடையாளம் காண்பதில் சிக்கல்

போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான தேவைகளை அடையாளம்காண்பது மற்றும் அவர்களுக்கான வாய்ப்புக்களை வழங்குவது என்பவற்றுக்கு இடையில் பாரிய இடைவெளி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம் இதனை தெரிவித்துள்ளது.

குறித்த அலுவலகம், பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சுடன் இணைந்து பெண்களின் நல்லிணக்கம் தொடர்பில் திட்டங்களை கொண்டு செல்கிறது.

இந்தநிலையில் போரினால் பாதிக்கப்பட்ட குறிப்பாக குடும்பங்களுக்கு தலைமை பொறுப்பை ஏற்றுள்ள மரணமான இராணுவத்தினரின் மனைவிமார் உட்பட்ட வடக்கு. கிழக்கின் கணவனை இழந்த பெண்கள் மத்தியில் சேவைகளை இனங் காணுவதும், வாய்ப்புக்களை பெற்றுக்கொடுப்பதற்கும் இடையில் பாரிய இடைவெளி உள்ளது.

தனிப்பட்ட பாதுகாப்பு, சமூக ஒத்துழைப்பு, வாழ்க்கை அபிவிருத்தி உட்பட்ட பல விடயங்களே பெண்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினைகளாக இனங்காணப்பட்டுள்ளன.

இந்த பிரச்சினைகளை தீர்க்க நீண்டகால மற்றும் உடனடி நிவாரணம் வழங்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

எனினும் பிரதேச செயலகங்களில் தமக்கான நிவாரணங்களை பெற்றுக் கொள்வதற்கான ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதில் பெண்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே பெண்களின் பிரச்சினைகளை இனங்காணுதல் மற்றும் அதற்கான தீர்வுகளை முன்னெடுத்தல் விடயங்களிலுள்ள இடைவெளிகள் குறைக்கப்பட வேண்டும் என்று தேசிய ஒற்றுமை நல்லிணக்க அலுவலகம் கோரியுள்ளது. (இ-3)

# மைத்திரி-ரணில் முரண்பாட்டுக்கு காரணம் தேசிய பத்திரிகையின் ஊடகவியலாளரே

(கொழும்பு)

சிங்கள தேசிய பத்திரிகை ஒன்றின் ஊடகவியலாளர் மற்றும் ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர் ஒருவரும் வழங்கிய தவறான தகவல்கள் காரணமாகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சி.ஐ.டி., எப்.சி.ஐ.டி.மற்றும் இலஞ்ச ஆணைக்குழுவை விமர்சித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதியின் புதல்வர் தாஹாம் சிறிசேன, இரவு நேர களியாட்ட விடுதியில் நடந்த மோதலுடன் சம்பந்தப்பட்டுள்ளதாக இணையத்தளங்களில் முன்னெடுக்கப்பட்டு வரும் பிரசாரங்களுடன் ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமல்லாது அதன் தலைவரும் சம்பந்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதியுடன் தாய்லாந்து சென்றிருந்த ஊடகவியலாளர் தொடர்ந்தும் கூறி வந்துள்ளார்.

ஜனாதிபதி இலங்கை திரும்பிய பின்னர், அவரது இணைப்புச் செயலாளரும் இந்த தகவலை உறுதிப்படுத்தும் வகையில் கூறியுள்ளார்.

ஜனாதிபதி கடந்த வாரங்களில் பொலிஸாருக்கு வழங்கிய உத்தரவுகளை பொலிஸார் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் பிரதமரின் தலையீடே இதற்கு காரணம் என இணைப்புச் செயலாளர், ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார் என கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-3)

## செய்தித் துளிகள்

### விபத்தில் தாயும் மகளும் பலி

இரத்தினபுரி - அவிசாவளை வீதியின் மாடொல பகுதியில், ஆட்டோவும் கப் வண்டியும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதில், தாயும் மகளும் உயிரிழந்துள்ளதுடன், 3 வயதுக் குழந்தை உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இவ்விபத்தில், எரன்னகொட, துருவில பகுதியைச் சேர்ந்த 70 வயதான தாயும் 40 வயதான மகளுமே உயிரிழந்துள்ளனர். படுகாயமடைந்த இருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கப் வண்டியை, ஆட்டோ முந்திச் செல்ல முற்பட்ட போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தனர். (இ-3)

### அடையாளம் காணப்படாத சடலங்களை ஏற்க மறுக்கும் கொழும்பு வைத்தியசாலை

பொலிஸாரால் கையளிக்கப்படுகின்ற அடையாளம் தெரியாத சடலங்களை பொறுப்பேற்பதை தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலை தெரிவித்துள்ளது.

ஏற்கனவே வைத்தியசாலையில் அடையாளம் தெரியாத சடலங்கள் அதிகமாக காணப்படுவதாகவும் இதனால் மேலும் சடலங்களை வைப்பதற்கு வைத்தியசாலையில் இடப்பற்றாக்குறை நிலவுவதாகவும் வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (இ-3)

### குழந்தையின் கழுத்தில் கத்தியை வைத்து சங்கிலி அறுத்தவர் நாயின் உதவியுடன் கைது

பொகவந்தலாவ லெச்சுமி தோட்டப் பகுதியில் குழந்தையின் கழுத்தில் கத்தியை வைத்து தாயின் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்ற நபர் ஒருவரை, பொலிஸ் மோப்ப நாயின் உதவியுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர். நித்திரையில் இருந்த குழந்தையின் கழுத்தில் கத்தியை வைத்து அச்சுறுத்திய நபர் குழந்தையின் தாயினுடைய தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளார். இந் நிலையில் நேற்று முன்தினம் குறித்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (இ-3)

### குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் 30 தொழிலாளர்கள் வைத்தியசாலையில்

பொகவந்தலாவ கீழ்ப்பிரிவு தோட்டத்தில் தேயிலை மலையில் கொழுந்து பறித்து கொண்டிருந்த 30 பெண் தொழிலாளர்கள் குளவிக்கொட்டுக்கு இலக்காகி பொகவந்தலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். குறித்த சம்பவம் நேற்று முற்பகல் காலை 11 மணியளவில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-3)

### பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

வவுனியா விபுலாநந்த கல்லூரியின் பழைய மாண வர் சங்க பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11.30 மணிவரை நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் எஸ். அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளதுடன். காலை 9 மணிமுதல் பழைய மாணவர்கள் தங்கள் பதிவு மற்றும் அங்கத் து வத்தை உறுதிப்படுத்தி கொள்வதுடன் அதனைத் தொடர்ந்து புதிய நிர்வாக சபைத் தெரிவும் நடைபெறும். (2-250)

# வீட்டுத்திட்ட தேவைகளுக்கு வழங்காது கம்பனிகளுக்கு கல் வழங்குவதாகக் கூறி ஒட்டுசுட்டானில் நேற்று பாரிய ஆர்ப்பாட்டம்



மக்களின் வீட்டுத்திட்ட தேவைகளுக்காக கல் ஏற்ற வரும் தமக்கு கல் தராது கம்பனிகளுக்கு கல் வழங்குவதாக தெரிவித்து வாகன சாரதிகள் கல் அகழ்வில் ஈடுபட்டுள்ள கம்பனிக்கு எதிராக நேற்றுக் காலை நடத்திய வீதிமறியல் போராட்டத்தால் ஒட்டுசுட்டான் பகுதியில் பதற்றம் நிலவியது

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள கருங்கல் உடைக்கும் நிறுவனமாகிய WKK Lanka.co.(PVT) LTD நிறுவனமானது உள்ளூர் மக்களுக்கு குறிப்பாக முல்லைத்தீவு உட்பட வடமாகாணத்தின் மக்களுக்கான வீட்டுத் திட்டம் உள்ளிட்ட வேலைகளுக்காக கல் ஏற்றுவதற்காக வருகைதந்து காவல் நிற்கும் தமக்கு கல் வழங்காது கம்பனிகள் சிலவற்றிற்கு கல் வழங்குவதாகக் கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தாம் ஆறு, ஏழு நாள் காவல் இருப்பதாகவும் வெளிக்கம்பனிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் மேற்படி நிறுவனம் கல்லை வழங்குவதாகவும் நாட்கள் நிறைய செல்வதால் எமது உணவு உள்ளிட்ட செலவுகள் அதிகரிப்பதால் மக்களுக்கு குறைந்த விலையில் கல்லினை விற்க முடியாதுள்ளதாகவும் அவர்களிடம் முன்னுரிமை அடிப்படையில் கல்லை பெற்றுக் கொள்ளும் கம்பனிகள் சில தமது வாடிக்கையாளர்களுக்கே குறைந்த விலையில் கல்லை வழங்குவதாகவும் இதனால் தாம் பாதிப்படைவதாகவும் கவலை வெளியிடுகின்றனர்.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் சாரதிகளுடன் கலந்துரையாடி பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டு உரிய நிறுவன அதிகாரிகளுடன் சென்று கலந்துரையாடினார். எனினும் சாரதிகள் கம்பனிகளுக்கு ஒரு டிப்பர் ஏற்றிவிட்டால் அடுத்தது தமது ஒரு டிப்பர் என்ற அடிப்படையில் ஏற்றி விடுமாறு கேட்ட கோரிக்கைக்கு குறித்த நிறுவனம் உடன்படாததால் பெரும் பதற்றம் நிலவியது

குறித்த கம்பனி உடன் படாததால் சந்திப்பு தோல்வியடைய வீதிமறியல் போராட்டத்தில் தொடர்ந்து குதிக்க சாரதிகள் முற்பட்டனர். இந்தவேளையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மாகாணசபை உறுப்பினர், சாரதிகளுடன் கலந்துரையாடி அவர்களின் நியாயமான கோரிக்கையை ஏற்றுக் கொண்டு மூன்று நாட்கள் அவகாசம் தருமாறும் அதற்குள் உரியவர்களுடன் கதைத்து நல்லதொரு தீர்மானம் வழங்குவதாகவும் அவர்கள் அவ்வாறு உடன்படாவிட்டால் உங்களது போராட்டத்திற்கு ஆதரவு வழங்குவதாகவும் தெரிவித்தார்.

இதனையடுத்து சாரதிகள் ஆர்ப்பாட்டத்தை கைவிட்டு சென்றதோடு நாளை திங்கட்கிழமை தீர்வு எட்டப்படா விட்டால் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முதல் முற்றுமுழுதாக வீதியை மறித்து போராட்டத்திலீடுபடுவதாகவும் தெரிவித்தனர். (2-281)

## அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில்

# மணல் ஏற்றி பயணித்த உழவியந்திரம் சிக்கியது

## சாரதியும் கைதானார்



(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயப் பிரிவிற்குட்பட்ட முள்ளியவளை பொலிஸ் பகுதியிலுள்ள வற்றாப்பளை கிராமத்தில் அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றிப் பயணித்த உழவு இயந்திரம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதன் சாரதியும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் நேரடி வழி நடத்தலின் கீழ் சம்பவ இடத்திற்கு விரைந்த முல்லைத்தீவுமாவட்ட போதைப் பொருள்தடுப்புப்பிரிவுபொலிஸ் பொறுப்பதிகாரி கருணாரத்தினம் ஜெசிந்தன் தலைமையிலான பொலிஸ் அணியினரே மணல் ஏற்றி பயணித்த உழவு இயந்திரத்தை கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட உழவு இயந்திரமும் அதன் சாரதியும் மேலதிக விசாரணைகளுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர்காரியாலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)




## ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை இயங்குமாகில்

# வீட்டுத்திட்டங்களுக்கு குறைந்த விலையில் தரமான ஓடுகளை வழங்கியிருக்க முடியும்




(பனிக்கன்குளம்)

நீண்டகாலமாக இயங்காது காணப்படும் ஒட்டுசுட்டான்ஓட்டுத்தொழிற்சாலையை இயங்கவைக்கும்நோக்கோடு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட குழுவினர் நேற்று முன்தினம் ஓட்டுத் தொழிற்சாலையை பார்வையிட சென்றனர்.

வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்திசிறீஸ்கந்தராஜா, ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ய.அநிருத்தனன் மற்றும் அங்கு பணியாற்றிய சில உறுப்பினர்கள் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கோடு வருகைதந்த கம்பனி உறுப்பினர்கள் உள்ளிட்டோர் இக்குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

இதனை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராஜா,

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை உடனடியாக இயக்கப்படவேண்டுமென பாராளுமன்றத்திலும் தெரிவித்துள்ளதாகவும் இந்த ஓட்டுத்தொழிற்சாலை உடனடியாக இயக்கவேண்டுமென்று மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதனடிப்படையில் மேற்படி குழுவினர் வருகை தந்துள்ளதாகவும் இது உடனடியாக ஆரம்பிக்கப்பட்டு இப்பிரதேசத்தை சேர்ந்தவர்களுக்கு இங்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவேண்டுமென்றும் இதற்கு முரணாக எந்த செயற்பாடும் இடம்பெறக் கூடாது எனவும் தெரிவித்தார்.

யுத்தம் முடிவடைந்து ஏழு வருடங்கள் கடந்தும் இந்த தொழிற்சாலை ஆரம்பிக்கப் படாதுள்ளது.

இது ஆரம்பிக்கப்பட்டிருந்தால் இதுவரை கட்டப்பட்ட வீட்டுத்திட்டங்களுக்கு குறைந்த விலையில் தரமான ஓடுகளை வழங்கியிருக்க முடியும்.

ஆனாலும் இப்போதாவது ஆரம்பிக்கப்பட்டால் இப்போது வழங்கப்படுகின்ற வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.அதனைவிட பலருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கப் பெறும்.

இதனைவிட கடந்த வருட ஒதுக்கீட்டில் நிதி ஒதுக்கப்பட்டும் இந்த நிதியில் என்ன வேலைகள் நடைபெற்றது. என்ன ஆக்கபூர்வமான வேலைகள் இடம்பெறுகின்றன என்று எந்த தகவலும் இல்லை. எனவே இந்நிலைமாறி உடனடியாக இந்தத்தொழிற்சாலையை இயங்க வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். (2-281)




இலங்கையின் 455 ஆவது பொலிஸ் நிலையமாக வவுனியா ஈச்சங்குளம் பொலிஸ் நிலையம் நேற்று பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவினால் திறந்து வைக்கப்பட்டது. இந்து மத வழிபாட்டின் பின்னர் இடம்பெற்ற இந் நிகழ்வில் சர்வமத பிரார்த்தனைகளை அடுத்து பொலிஸ் அணிவகுப்பு இடம்பெற்றது. இதனையடுத்து பொலிஸ் நிலையம் திறந்து வைக்கப்பட்டதுடன் பதிவுப் புத்தகத்திலும் பொலிஸ்மா அதிபர் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஏ.ஜயதிலக மற்றும் இ.இந்திரராசா மற்றும் சுதந்திரக் கட்சியின் வன்னி அமைப்பாளர் வாசல ஆகியோர் கையொப்பமிட்டிருந்தனர். இந் நிகழ்வில் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஏ.சரத்குமார, வன்னி பிரதி பொலிஸ்மா அதிபர் டி.தென்னக்கோன், வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான இ.இந்திரராசா செ.மயூரன், ஏ.ஜயதிலக உட்பட சிவில் பாதுகாப்புக்குழுக்கள் எனப் பல தரப்பினர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள் :- குருமன்காடு செய்தியாளர்)

## தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி போட்டிகள்,நிகழ்வுகள் முன்னெடுப்பு

### மாந்தை கிழக்கு பிரதேச சபையின் செயலாளர்

(மல்லாவி)

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி மாந்தை கிழக்கு பிரதேசசபையின்பொதுசன நூலகத்தின்ஊடாகபல்வேறுவகையான போட்டிகள், நிகழ்வுகள் மக்களை விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகள் என்பன முன்னெடுக்கப்பட்டுவருவதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலக சபையின் செயலாளர் பா.சிவபாலராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி மக்களை விழிப்புணர்வூட்டும் வகையில் பதாகைகள் காட்சிப்படுத்துவதுடன் துண்டுப் பிரசுரங்கள் விநியோகம் உட்பட நூலக நடமாடும் சேவைகள் என்பன முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை பாடசாலை மாணவர்களுக்கு இடையில் கவிதை, கட்டுரை, சிறுகதை, பேச்சு, பண்ணிசை ஆகிய போட்டிகளும் முன்பள்ளி மாணவர்களுக்கிடையில்சொல்லாக்கம், சித்திரம் ஆகியபோட்டிகளும் நூலக வாசகர்களுக்கு இடையே குறுக்கெழுத்துப் போட்டி, பொது அறிவுப்போட்டி என்பனவும் நடத்தப்பட்டு வருகின்றன.

போட்டிகள் தொடர்பான வியாபாரங்களுக்கும் மற்றும் மேலதிக தகவல்களைப் பெறவும் 024 324 3663 எனும் தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்றுக் கொள்ளுமாறுஅவர் கேட்டுள்ளார்.(2-15)

## இரு பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட

# ஏழு கிராமங்கள் வரட்சியால் பாதிப்பு

## பௌசர் வண்டிகள் மூலம் குடிநீர் விநியோகம்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரைதுறைப்பற்று, மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச பிரிவுகளின் கீழ் 7 கிராமங்களைச் சேர்ந்த 73 குடும்பங்கள் வரட்சி காரணமாக பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் இக் குடும்பங்களுக்கான குடிநீர் தேவையை பௌசர் வண்டிகள் மூலம் பிரதேசசபைகள் ஊடாக வழங்கப்பட்டு வருவதாகவும் மேற்படி இரு பிரதேசங்களின் பிரதேச செயலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கரைதுறைப்பற்றுபிரதேச செயலாளர் எஸ்.குணபாலன் தெரிவிக்கையில்,

முள்ளியவளை மாமூலை கிராமத்தில் 29 குடும்பங்கள் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கான குடிநீர் தேவை கரைதுறைப்பற்று பிரதேச சபையின் ஊடாக பௌசர் வண்டிகள் மூலம் விநியோகிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பான விபரங்களை மாவட்ட அரச பாதுகாப்பு அமைச்சின் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் பாண்டியன்குளம் 50 வீட்டுத்திட்டத்தில் 10 குடும்பங்களும் விநாயகபுரம் கிராமத்தில் 10 குடும்பங்களும் கரும்புள்ளியான் கிராமத்தில் 15 குடும்பங்களும்பூவரசன்குளம் கிராமத்தில் 5 குடும்பங்களும் பொன்னகர், பாலிநகர் ஆகிய கிராமங்களில் தலா இரண்டு குடும்பங்கள் வீதமாக மொத்தம் 44 குடும்பங்கள் வரட்சியானால் பாதிக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள குடும்பங்களின் குடிநீர் தேவையையும் ஏனைய பாவனைக்கான நீரினையும் மாந்தை கிழக்கு பிரதேச சபையின்ஊடாக பௌசர் வண்டிகள் மூலம் நாளொன்றுக்கு 25 ஆயிரம் லீற்றருக்கு மேல் விநியோகிக்கப்பட்டு வருவதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் இ.ரமேஸ் தெரிவித்துள்ளார்.

மேற்படி இரு பிரதேச செயலக பிரிவுகளிலும் வரட்சி காரணமாக குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள குடும்பங்கள் தமது பகுதி கிராம அலுவலர் ஊடாகவோ அல்லது நேரடியாக பிரதேச செயலகத்திற்கு அறியத் தருவதன் ஊடாக குடிநீர் விநியோகத்தை மேற்கொள்ள முடியுமென மேற்படி பிரதேச செயலகங்களுக்கான பிரதேச செயலாளர்கள் அறிவித்துள்ளனர். (2-15)

ஆறு கடக்கும் மட்டும் அண்ணன் தம்பி
அப்புறம் நீ யாரோ? நான் யாரோ?

– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## 2016 டிசம்பர் இறுதியில் தீர்வு சாத்தியமற்றதால் தாளம் மாற்றுகிறது கூட்டமைப்பு

தமிழ் மக்கள் நம்பி வாக்களித்து பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைக்க அவர்களோ கர்வம் தலைக்கேறிவிட இனப்பிரச்சினை தொடர்பில் தாமும் அரசும் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் பற்றி எதுவும் தமிழ் மக்களுக்குத் தெரியப்படுத்தாத ஒரு நிலைமையே தற்போது காணப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் ஏற்பாட்டில் நான்கு அரசியல் கட்சிகளைக் கொண்ட அரசியல் அமைப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

ஆனால் இந்தக் கூட்டு என்பது வெறும் பெயரளவிலேயே உள்ளதைக் காண முடியும். விடுதலைப் புலிகளின் தோல்விக்குப் பின்னர் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் ஓரங்கட்டப்பட்டு தனித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருக்கக்கூடிய ஒரு சில தலைவர்கள் மட்டுமே அதிகாரம் செலுத்துவதென்ற அளவில் சர்வாதிகாரப் போக்கு கூட்டமைப்பை ஆட்டிப் படைக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போக்குடையவர்கள் கூட்டமைப்பை கைப்பற்றி வைத்திருப்பதன் காரணமாக அவர்களின் உறவு என்பது தமிழ் மக்களை முற்றாக ஓரங்கட்டி அரசுடன் நெருக்கமாகி விட்டது.

இத்தகைய போக்குகளால் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள்கூட கூட்டமைப்பின் அரசியல் தலைமைக்குள் என்ன நடக்கின்றது என்பதை அறிய முடியாமல் உள்ளனர்.

இது ஒருபுறமிருக்க, முன்னைய ஆட்சியில் நடந்த ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளும் குற்றம் இழைத்தவர்கள் என்ற பேரில் இடம் பெறும் கைதுகளும் தமக்குக் கவலை அளிப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரியின் மேற்கண்ட கருத்து அதிர்ச்சி அளிப்பதாக யாரேனும் கூறிக்கொண்டாலும் தமிழ் மக்களுக்கு இது எந்த வகையிலும் அதிர்ச்சியைக் கொடுக்காது.

ஏனெனில் முன்பு ஆட்சியில் இருந்தவர்கள், இருப்பவர்கள், இருக்கப்போகின்றவர்கள் பதவியில்லாத வரைக்கும் தமிழ் மக்களுக்காகக் கதைப்பார்கள். அவர்களின் ஆதரவைக் கோரி நிற்பார்கள்.

பதவி பெற்றதும் – அதிகாரம் கைக்கு வந்ததும் இனம் இனத்தோடு என்பது போல அவர்களும் ஏனையவர்கள் போலவே நடந்து கொள்வர்.

இந்த அனுபவம் கூட்டமைப்பை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் ஒரு சிலருக்கு புரியாமல் இருந்தாலும் அது தமிழ் மக்களுக்கு நன்கு புரியும்.

எனவேதான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறிய கருத்துக்கள் தமிழ் மக்களுக்கு எந்த வகையிலும் அதிர்ச்சியைக் கொடுக்க மாட்டாது.

இருந்தும் மைத்திரியை நம்பி அவருக்கு வாக்களித்த தமிழ் மக்கள் இவரும் இப்படியாகிவிட்டார் என்று கவலை மட்டுமே கொள்ள முடியும்.

என்ன செய்வது! மிகப்பெரிய ஒரு போர் நடந்து அதில் தமிழ் மக்கள் பல்லாயிரக்கணக்கில் அழிக்கப்பட்டு மிகப்பெரும் கொடூரம் நிகழ்ந்த பின்பும் சிங்கள ஆட்சிப்பீடம் மனம் மாறவில்லை எனும்போது நாம் என்ன செய்ய முடியும்? என்ற ஆதங்கம் ஏற்படுவது நியாயமே.

ஆயினும் எங்களுக்குக் கிடைத்த தமிழ் அரசியல் தலைமை ஒரு எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காக அனைத்தையும் விட்டுக் கொடுத்து தமிழ் இனத்துக்கு மிகப்பெரும் நாசகாரம் செய்யும் போது சிங்கள ஆட்சியாளர்களின் ஏமாற்று வித்தைகள் தொடர்பில் நாம் கவலை கொள்வது அர்த்தமற்றதாகி விடுகின்றது.

இதற்கு மேலாக இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதி மைத்திரியின் கருத்துக்கு எதிர்க் கருத்து கூறியுள்ளார்.

இதுதான் தமிழ் மக்களை ஆச்சரியப்படுத்துகிறது. என்ன அதிசயம்! தமிழ் மக்கள் பேரவை நடத்திய எழுச்சிப் பேரணியை தடை செய்யவும், தடுத்து நிறுத்தவும் பாடுபட்டவர் இப்போது ஜனாதிபதியின் கருத்தை கண்டிக்கிறார் என்றால் அதன் பொருள் 2016 டிசம்பர் மாத இறுதியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று தமிழ் மக்களுக்கு சம்பந்தர் வழங்கிய வாக்குறுதி நடக்கப் போவதில்லை என்பதால், அதற்குப் பரிகாரம் தேடவே இப்படியொரு இராஜ தந்திரம் நடக்கிறது என்பதை தமிழ் மக்கள் புரிந்து கொள்வர்.

# ஞாலத்தில் புதுமைபுகும் தாலம்

வடக்கின் மூலவளம் என எல்லோராலும் இலச்சினையில் பொறிக்கப்பட்டு, அடையாளப்படுத்தப்பட்டுள்ளது பனை. இதன் பயனின் பெருமையினை பொய்யா மொழிப் புலவர் திருக்குறளின் முப்பாலிலும் மூன்று குறள்களினால் வெளிப்படுத்தியுள்ளார். மரங்களில் உயரிய பலன்களை உருவத்தில் உயர்ந்த இப் பனைகள் வழங்கி வருகின்றன.

நம்பிக்கை நம் சொத்து. இதை நமக்குத் தருவது நாட்டுப் பற்று. ஒவ்வொரு நாட்டிலும் இறையருளால் பல விருட்சங்கள் படைக்கப்பட்டுள்ளன. தாலம் என மறு பெயர் பூண்ட பனை தனது முழுமையையும் மனிதன் மற்றும் உயிரினங்களின் வாழ்வுக்கு அர்ப்பணிக்குமாறு படைக்கப்பட்டுள்ளது. இப்படைப்பு ஊட்டம் மிக்க சத்துக்கள் உள்ள உணவுகளாகவும் பாதுகாப்புத் தரும் தண்டாகவும் நோய்களுக்கு மருந்தாகவும் விலங்கு தீவனமாகவும் சுயதொழில் ஊடான வருமானத்தினை பெறக்கூடியதாகவும் வழங்கி வருகின்றது.

இன்றைய வாழ்வில் எமது பிரதேசத்தில் உற்பத்தியாகும் தானியங்களை விடுத்து இறக்குமதி செய்யப்படும் வெள்ளைமா அனைத்துப் பண்டங்களிலும் சேர்க்கப்பட்டு, மக்கள் அதிகம் விரும்பியுண்ணும் வகையில் ஆக்கிரமித்துள்ளது.

பாவனைப் பொருட்கள் வரிசையில் பிளாஸ்ரிக் பொருட்கள் உலகை ஆக்கிரமித்து, சூழலை மாசடைய வைக்கின்றது. அன்று வாழ்ந்தவர்களுடன் இன்று வாழ்பவர்களை ஒப்பிட்டு நோக்குகையில் ஆயுள் குறைவாகவும் நோயுற்று அவதிப்படுபவர்களாகவும் காணக்கூடியதாகவுள்ளது. முன்னாள் பிரதமர் கலாநிதி தஹநாயக்க தமது உணவில் வெள்ளைச்சீனி, வெள்ளைமா, வெள்ளை அரிசி என்பவற்றை வெளியேற்றியதே 83 வயது வரை வாழ்வதற்கு முக்கிய காரணம் என்று அன்று தெரிவித்திருந்தார்.

இன்றைய காலத்தின் தேவைகருதி பனை அபிவிருத்திச் சபை எமது மண்ணின் அரிய பொக்கிசமான இவ் வளத்தின் பயன்பாட்டினை மக்களின் தேவைக்கேற்ப ஊட்டமிகு உணவுகளாகவும் (யோக்கட், ஐஸ் கிறீம், தொதல்) பாதிப்பற்ற பாவனைக்குரிய பொருட்களாகவும் (பைகள், கூடைகள், அலங்காரப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள்) புதிய வடிவங்களில், புதிய உத்திகளின் வெளிப்பாடாகவும், கண்கவர் வண்ணங்கள் இணைத்து யாழ்.மத்திய கல்லூரி அரங்கில் 21, 22, 23/10/2016ஆம் திகதிகளில் காட்சிப்படுத்தல் ஊடாக அறிமுகப்படுத்தப்படுகின்றது.

பனை ஊடாகபெறப்படும் செயற்பாடுகள் தொடர்பான ஆய்வரங்கு கண்காட்சியின் போது நடைபெறவுள்ளது. பனை தொடர்பான ஆராய்ச்சிகள் மக்களுக்கு தெளிவுபடுத்தப்படவுள்ளன. மக்கள் பார்த்தும் கேட்டும் அறிந்தவைகளை பெற்றுக் கொள்வதற்கு கற்பக விற்பனை நிலையங்கள் உள்ளன.

தாமதம் ஏன்? உங்கள் பிள்ளைகளுக்கு நல்வழி காட்ட புறப்பட்டு வாருங்கள்! வள உற்பத்திகளை பாருங்கள். தாலத்தாயவள் எம் மண்ணில் கோலம் போடும் விந்தையை அறியுங்கள். உங்களை நீங்கள் உணருங்கள்! வாருங்கள் வந்து பாருங்கள்!

கா.கோபாலகிருஷ்ணன்,
முகாமையாளர்
(விரிவாக்கம்)
பனை அபிவிருத்திச் சபை.

# சர்வதேச சிறுவர், முதியோர் தினம்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச சிறுவர், முதியோர், மாற்றாற்றலுடையோர் தின விழா நாளை மறுதினம் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் கரணவாய் மூத்த விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் நடை பெறும்.

கரவெட்டி பிரதேச செயலாளர் எஸ்.சிவஸ்ரீ தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் தி.விஸ்வரூபன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரி கே.யோகநாதன், கௌரவ விருந்தினர்களாக ஸ்ரீபரமானந்தா சிறுவர், முதியோர் இல்ல உப தலைவர் வே. விஸ்வலிங்கம், கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத் தலைவர் எஸ்.பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7-60)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.அச்சுவேலி இடைக்காடு மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் கே. வாகீசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு தேசிய வைத்தியசாலை வைத்தியர் செல்வகௌரி ஜதீசன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.சிவநேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6 மணி வரை யாழ் .பிரதேசத்தில வறுத்தலைவிளான், டச்சு வீதி தெல்லிப்பழை, காங்கேசன்துறை கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், காங்கேசன்துறை வடக்கு கடற்படை முகாம், பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், பலாலி இலங்கை விமானப்படை முகாம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம் (புதியது), பலாலி விமானப்படை ஓய்வு காலவிடுதி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் மடுக்கந்த ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும். (இ-9)

# காணாமற்போன கணவர்மார்களின் கைம்பெண்களுக்காக மனமிரங்குவோம்

இன்று எமக்கு தரப்படும் பைபிள் பகுதி நேர்மையற்ற நடுவரும் (நீதிபதி) - கைம் பெண்ணும் உவமைக் கதையை விளக்குகிறது. உவமையில் கூறப்பட்டுள்ள கைம்பெண்ணின் வழக்கு 'என் எதிரியைத் தண்டித்து எனக்கு நீதி வழங்கும்' என்பதே. அன்று இஸ்ரயேல் மக்கள் சமுதாயத்தில் வாழ்ந்த இக்கைம்பெண்கள் இழிவாக நடத்தப்பட்டனர், அவர்களுக்கு உரிய நீதி கிடைப்பதில்லை என்பது பைபிளில் அடிக்கடி சொல்லப்பட்டுள்ளது.

இஸ்ரயேல் மக்கள் மத்தியில் தலைவர்களாக பொறுப்பேற்றவர்கள் நீதிபதிகளே. அவர்களைப் பொறுத்த வரை, மக்களுக்கு நீதி வழங்குவதே தலைவனின்

### பரமபிதா காட்டிய பாதை

தலையாய பணி.

ஆண்களை மையப்படுத்தி அமைந்திருந்த இஸ்ரயேல் சமுதாயத்தில், கணவனை இழந்த கைம் பெண்கள், நிலம், சொத்து ஆகிய பிற உரிமைகளையும் இழந்தனர். சட்டப்படி உரிமை கள் அற்ற இவர்கள், கணவனின் குடும்பத்தினர் காட்டக்கூடிய கருணையை நம்பியே வாழ வேண்டியிருந்தது. இக்குடும்பத்தின் கருணை கிடைக்காதபோது கைம்பெண்ணின் போராட்டம் தொடங்கும். நீதி மன்றங்களில், நடுவர்கள் முன்னிலையில் இந்தப் போராட்டம் தொடரும். ஆனால் இந்த உவமையில் வரும் நடுவரோ நெடுங்காலமாய் எந்தத் தீர்ப்பும் அவளுக்கு வழங்காமல் காலத்தை கடத்திக் கொண்டே இருந்தார். இருந்த போதும் திரும்பவும் திரும்பவும் கைம்பெண் நடுவரை நாடி வந்தார். 'எறும்பு ஊர கல்லும் தேயும்' என்ற பழமொழி நாம் அறிந்ததே.

தன் மனவலிமையையும், இறைவனையும் மட்டுமே நம்பி இக்கைம்பெண் தனது இந்த முயற்சியையே தொடர்ந்தும் மேற்கொள்கிறார்.

நீதியும், பாதுகாப்பும் தங்களுக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நடுவர்களை நாடி வரும் கைம் பெண்களை நேர்மையற்ற நடுவர்கள் பலர் நசுக்குகின்ற அவலம் அன்று போல் இன்றும் தொடர்கிறது.

கணவனை இழந்த பெண். அவளுக்கு ஒரு பிரச்சினை. அவளுக்கு ஒரு எதிரி. அவளுக்கு ஒரு அநீதி நடந்து விட்டது. அவளுக்கு அநீதி செய்தவன், இவள் சார்பாக யார் வர முடியும்? என்ற மமதையோடு, நடக்கிறான். அந்தப்பெண், நடுவரிடம் நிச்சயம் செல்வாள் என்பது, அவளது எதிரிக்கு தெரிந்திருக்கும். இருந்த போதிலும், பணத்தைக் கொண்டு எதையும், சாதிக்கலாம் என்று, அவளுடைய எதிரி நினைத்திருந்தான். ஆனால், எளியவர்கள் சார பாக, கடவுள் எப்போதும் இருப்பார் என்கிற செய்தியை அவன் முற்றிலும் புறக்கணித்துவிட்டான். இதனால் அவனே தீர்ப்புக்கு உள்ளாக்கப்பட்டான்.

அன்று நடந்தது இன்றும் தொடர்கிறது. கணவன் இன்றி, குழந்தைகளின்



துணையும் இன்றி உள்ள கைம்பெண்கள் சந்திக்கும் துயரங்கள் மனித வரலாற்றில் நீண்டதொரு தொடர் கதை. இன்று காணாமற்போன கணவர்களின் நிலை என்னவென்று தெரியாது பல ஆண்டுகளாக நீதிவேண்டி நிற்கும் எம் தாய்மார்களின் ஏக்கங்களுக்கு உரியவர்கள் உடனடியாக தீர்வு கொடுக்க எம் சார்பாக இருக்கும் கடவுளிடம் நாம் எம் விண்ணப்பங்களை சமர்ப்பிப்போம்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

# இளம்பறவைகள் வி.கழக காலிறுதிப்போட்டி முடிவுகள்

சிலாவத்தை இளம் பறவைகள் வி.க. நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் காலிறுதிப் போட்டி முடிவுகள்.

நடைபெற்ற முதல் காலிறுதிப் போட்டியில் அளம்பில் இளந்தென்றல் வி.க. எதிர்த்து மன்னாகண்டல் வளர்மதி வி.கழகம் மோதியது. இதில் இளந்தென்றல் வி.க. 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரை இறுதிக்கு தெரிவாகியது.

நடைபெற்ற 2 ஆவது காலிறுதிப் போட்டியில் வவுனியா யுனிபைட் வி.கழகத்தை எதிர்த்து விக்னேஸ்வரா வி.கழகம் மோதியது.

இப்போட்டியில் யுனிபைட் வி.க. தண்ட உதை மூலம் வெற்றியைப் பெற்று அரையிறுதிப்போட்டிக்கு தெரிவாகியது.

தொடர்ந்து நடைபெற்ற முதல் காலிறுதிப்போட்டியில் முல்லைத்தீவு சென்.யூட் வி.க. எதிர்த்து உடுப்புக்குளம் அலை ஓசை வி.கழகம் மோதியது. இப் போட்டில் உடுப்புக்குளம் அலை ஓசை தண்ட உதை மூலம் வெற்றியைப் பெற்று அரை இறுதிப்போட்டிக்கு தெரிவாகியது.

நடைபெற்ற 2 ஆவது காலிறுதிப்போட்டியில் முள்ளியவளை வளர்மதி வி.க.எதிர்த்து கள்ளப்பாடு உதயம் வி.கழகம் மோதியது.

வளர்மதிவி.க.தண்டஉதைமூலம் வெற்றியைப் பெற்று அரையிறுதிப் போட்டிக்கு தெரிவாகியது. (க)

# கோல் மழை பொழிந்தது ஊரெழு றோயல் அணி

வலிகாமம் லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வட மாகாண ரீதியிலான அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான வடக்கின் வல்லரசன் தொடரில் அண்மையில் நடைபெற்ற லீக் சுற்றின் போட்டியில் நவிண்டில் கலைமதி மற்றும் ஊரெழு றோயல் அணிகள் மோதின.

ஆரம்பம் முதலே மிரட்டிய றோயல் அணிக்கு 11,18 ஆவது நிமிடங்களில் கோபன் இரு கோல்களையும் 19,22 ஆவது நிமிடத்தில் நிதர்சன் இரு கோல்களையும் பெற்றுக் கொடுக்க முற்பாதியில் 4:0எனறோயல்முன்னிலைவகித்தது.

தொடர்ந்த இரண்டாம் பாதியில் கலைமதியின் வியூகங்களை உடைத்து ஆட்டத்தை முற்றிலும் தம்வசப்படுத்திய றோயல் அணிக்கு கானுஜன் 28 ஆவது நிமிடத்திலும் கோபன் 32 ஆவது நிமிடத்திலும் நிதர்சன் 38,44 ஆவது நிமிடங்களிலும் சயந்தன் 40 ஆவது நிமிடத்திலும் கோல்களை பெற்றுக்கொடுக்க இறுதியில் றோயல் அணி 9:0 என்ற ரீதியில் வெற்றி பெற்றுக் கொண்டது.

அதிக பட்சமாக நிதர்சன்-4, கோபன் -3 கோல்களை பெற்றுக் கொடுத்தனர். போட்டியின் ஆட்ட நாயகனாக நிதர்சன் தெரிவானார். (க)



# சம்பியனானது யாழ்.பல்கலைக்கழகம்





யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டுப் பிரிவு நடத்திய, அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையில் 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி, 45 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்த சுற்றுப்போட்டியில் பற்றீசியன், சென்றலைட்ஸ், மானிப்பாய் பரிஸ், யூனியன்ஸ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகிய அணிகள் பங்குபற்றின. ஒவ்வோர் அணியும், 3 போட்டிகள் வீதம் விளையாடின. இதில், 3 போட்டிகளில் வெற்றியீட்டிய யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியும், 2 போட்டிகளில் வெற்றியீட்டிய சென்றலைட்ஸ் அணியும் இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றன.

கடந்த 9 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இறுதிப்போட்டி நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடி, 49.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து, 213 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஜெயபாலசிங்கம் ஜனந்தன் 55, ரவிராசா ருக்ஸ்மன் 49, பற்றிக் டிக்ஸன் 26, தாரக்க சோமதிலக 25 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணி சார்பாக மகேந்திரன் மயூரன், சிவபாதசுந்தரம் அலன்ராஜ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், ஜெரிக் துசாந்த், என். கிருபாகரன் இருவரும் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

214 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்றலைட்ஸ் அணி, பல்கலைக்கழக அணியின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல், 42.4 ஓவர்களில் 168 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில், ஞானசீலன் ஜெரிக் துசாந்த் 39, துரைராசா ஜேம்ஸ் ஜான்ஸன் 32, எட்வேர்ட் எடின் 22 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் பல்கலைக்கழக அணி சார்பாக சானக குருகுலசூரிய 4 விக்கெட்டுகளையும் ரவீந்திரன் லோகதீஸ்வர், ஜெயராமன் ஸ்ரீகுமரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் தொடர் நாயகனாகவும் பல்கலைக் கழக அணியின் ஜெயபாலசிங்கம் ஜனந்தன், சிறந்த பந்துவீச்சாளராகவும் இறுதிப்போட்டியின் நாயகனாகவும் அதே அணியின் சானக குருகுலசூரியவும் சிறந்த களத்தடுப்பாளராக சென்றலைட்ஸ் அணியின் ஐ.ஜெரிக் துசாந்தும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# "Northern king premier league" அடுத்த சுற்றில் வல்வை



கொம்மாந்தறை இளைஞர் விளையாட்டுக்கழகம் ஆண்டுதோறும் நடத்தும் அணிக்கு 11 வீரர்கள் 12 பந்துப்பரிமாற்றங்களை கொண்ட Northern king premier league சுற்றுப்போட்டியில் வல்வெட்டித்துறை வல்வை அணியினர் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

தமது முதல் ஆட்டத்தில் தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தை 03 இலக்குகளாலும் இரண்டாவது ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகத்தை 03 இலக்குகளாலும் வீழ்த்தியே வல்வை அணியினர் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

இச் சுற்றுத்தொடரில் அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டிகள் மின்னொளியில் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## சென்.லூட்ஸ் வெற்றி

யாழ்.லீக் அனுசரணையுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர் கிங் பட்டத்திற்கான உதைபந்தாட்ட போட்டியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற போட்டியில் சென்.லூட்ஸ் வி.கழகத்தை எதிர்த்து திருக்குமரன் வி.கழகம் மோதியது.

இப்போட்டியில் 3:1 என்ற கோல் கணக்கில்சென்.லூட்ஸ்அணிவெற்றி பெற்றது. தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் விண்மீன் வி.கழகத்தை எதிர்த்து அம்பாள் வி.கழகம் மோத விருப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அம்பாள் அணி போட்டிக்கு சமுகமளிக்காததால் விண்மீன் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (க)

## இன்றைய போட்டிகள்

யாழ்.லீக் அனுசரணையுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர் கிங் பட்டத்திற்கான உதைபந்தாட்ட போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகமும் மாலை 4.20 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் மன்னார் கில்லறி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

# ரதன் ஹெட்றிக் கோல் யங்கம்பன்ஸ் வெற்றி



மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் (13/10/2016) அன்று மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற உதைபந்தாட்ட போட்டியில் நக்கீரன் அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் அணி மோதியது. முதல் பாதியாட்டத்தின் 22 ஆவது நிமிடத்தில் ரதன் யங்கம்பன்ஸ் அணியின் முதல் கோலை பதிவு செய்ய முதல் பாதியாட்டம் 01:00 என்ற அடிப்படையில் நிறைவுற்றது.

இரண்டாவது பாதியாட்டத்தின் 35/43 ஆவது நிமிடத்தில் தொடர்ந்து இரண்டு கோல்களை போட்டு அசத்தினார் ரதன். அடுத்த 48 ஆவது நிமிடத்தில் தர்சன் கோல்போட்டார். இறுதியாட்ட நேர முடிவில் 04:00 என்ற ரீதியில் நக்கீரன் அணியை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது யங்கம்பன்ஸ் அணி. யங்கம்பன்ஸ் அணி சார்பாக ரதன் 03, தர்சன்-01 கோல் போட்டனர். (க)

## ஜனாதிபதியின்...

சிறிசேன வெளியிட்டிருந்த அதிருப்தியை தாம் வரவேற்பதாக தெரிவித்துள்ள முன்னாள பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, தற்போதேனும் ஜனாதிபதி உண்மையைப் புரிந்துகொண்டமை மகிழ்ச்சியளிக்கின்றது என குறிப்பிட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வுப் பிரிவு, நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவு, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு ஆகியன அரசியல் நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படுமாயின் அவை தொடர்பில் கடுமையான தீர்மானங்களை எடுக்க வேண்டிவரும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டிருந்த விடயம் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விவகாரம் குறித்து தாம் கடந்த வருடங்களில் தொடர்ச்சியாக கூறிவந்ததாகவும் அவர்கள் அரசியல் நிகழ்ச்சி நிரலின் கீழ் செயறபடுவதாக தாம் சுட்டிக்காட்டியதாகவும் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அவரது உத்தியோகபூர்வ முகப்புத்தகத்தில், பதிவேற்றப்பட்டுள்ள சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

**கேள்வி:** உங்களுக்கு எதிராக பாரதூரமான ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. அவை குறித்து விசாரணை செய்வது தவறான நடவடிக்கையா?

**கோத்தபாய:** நாம் எந்த ஒரு விசாரணையையும் புறக்கணிக்கவில்லை. எனினும் இரு வருடங்களாக நாம் கூறிவந்தோம் இந்த விசாரணைகள் எல்லாம் அரசியல் நிகழ்ச்சி நிரலின் கீழ் இடம்பெறுவதாக கூறினோம். தற்போது ஜனாதிபதியே இந்த விடயத்தை விளக்கப்படுத்துகின்றார். இதனையே நாம் இரு வருடங்களாக கூறிவந்தோம். தற்போதேனும் ஜனாதிபதி அது தொடர்பில் கருத்து தெரிவித்தமை மகிழ்ச்சி அளிக்கின்றது. முன்னாள் கடற்படை தளபதிகள் இருவர், முன்னாள் மேஜர் ஜெனரல் இருவருக்கு எதிராகவே இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இது குறித்து ஜனாதிபதி பேசியமை மகிழ்ச்சியளிக்கின்றது.

**கேள்வி:** இராணுவத்தின் உயர் அதிகாரிகளாக இருப்பினும் யுத்தத்துக்கு அவர்கள் பங்களிப்பு செய்திருப்பினும் கூட அவர்களுக்கு எதிரான விசாரணை ஒன்றுக்காக நீதிமன்று ஒன்றுக்கு அழைக்கப்படுவது தவறானதா என மக்கள் கேள்வி எழுப்புகின்றனரே?

**கோத்தபாய:** நீதிமன்றுக்கு அழைக்க முன்னர் நியாயமான விசாரணை ஒன்றினை நடத்த வேண்டுமல்லவா? இராணுவ வீரர்கள் 16 மாதங்களாக சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஜனாதிபதியே சுட்டிக்காட்டினார். விசாரணை ஒன்று நடத்த 16 மாதங்கள் செல்லுமா? இதுவா நியாயம். இது தொடர்பில் ஏன் அரச சார்பற்ற நிறுவனங்கள் கதைப்பதில்லை. அதனால் தான் ஜனாதி பதி இவ்வாறு பேசியுள்ளார். இதற்கு எதிராக சிலர் குரலெழுப்புவதாக இருப்பின் அவர்களுக்கு தேவையான முறையிலா ஜனாதிபதி செயற்பட வேண்டும்? ஜனாதிபதிக்கு சரி என தோன்றும் ஒன்று தொடர்பில் பேச முடியாதா?

**கேள்வி:** நீங்கள் முன்வைக்கும விடயங்கள் மற்றும் மக்கள் பேசிக் கொள்ளும் விடயங்கள் ஊடாக எமக்கு ஒரு விடயம் தொடர்பில் கேள்வி எழுகின்றது. அதாவது ராஜபக்ஷக்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையே ஏதோ ஒரு ஒப்பந்தம் இருக்கின்றதா அல்லது இந்த அரசாங்கத்துக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதா? உண்மையில் இது ஏற்கெனவே கலந்துரையாடப்பட்ட ஒரு விடயம் தொடர்பில் விடுக்கப்பட்ட அறிவிப்பா?

**கோத்தபாய:** உண்மையில் இவை ஏற்கெனவே செய்யப்பட்ட கலந்துரையாடல்களின் படி நடந்த விடயம் இல்லை. இரகசிய கலந்துரையாடல்கள் ஊடாக கூறும் விடயமும் இல்லை. குறிப்பாக இந்த விடயம் குறித்து என்னுடன் கலந்துரையாடவோ அல்லது இரகசிய ஒப்பந்தங்களை செய்துகொள்ளவோ இல்லை என நான் உறுதியாக கூறலாம்.

**கேள்வி:** தற்போது நீங்கள் தறபோதைய பாதுகாப்பு செயலாளருடன் வெளிநாட்டில் உள்ளீர். இதற்கு முன்னரும் அவருடன் இவ்வாறு வெளிநாடுகளில் சந்தித்துள்ளீர்கள். அது தொடர்பில் ஊடகங்கள் செய்தியும் வெளியிட்டன. இதனை மையப்படுத்தி ஒருவருக்கு சந்தேகம் வெளியிட முடியுமான சூழலும் உள்ளது அல்லவா?

**கோத்தபாய:** எனது வருகையும் தற்போதைய பாதுகாப்பு செயலாளரின் வெளிநாட்டு வருகைக்கும் இடையே எந்த சம்பந்தமும் இல்லை. அதறகு காரணம் என்னை சீனாவே அழைத்துள்ளது. தற்போது உள்ள பாதுகாப்பு செயலாளர் முன்னாள் ஜனாதிபதியுடன் சேவையாற்றிய நபர். அவரை தனிப்பட்ட ரீதியிலும் எனக்கு தெரியும். அதனை இணைத்துப்பார்க்க தேவையில்லை.

எது எப்படியாயினும் தற்போது ஜனாதிபதி நிலைமையை புரிந்து கொண்டுள்ளதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன். எனவே பல்வேறு நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படுவோரின் அழுத்தங்களுக்கு அடிபணியாது ஜனாதிபதி செயற்படுவார் என நான் நம்புகின்றேன் என கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.(செ-5)

## ஜனாதிபதிக்கு...

வித்துள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு ஜனாதிபதிக்கு நேற்று முன்தினம் அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் மூன்று ஆணையாளர்களின் கையெழுத்துடன் இந்தக் கடிதம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொழும்பிலுள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் ஆற்றியிருந்த உரை தென்னிலங்கை அரசியல் களத்தில் பெரும் குழப்பத்தை தோற்றுவித்திருக்கிறது.

குற்றப் புலனாய்வுப் பிரிவு, பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு ஆகியன அரசியல் நிகழ்ச்சி நிரலில் செயற்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி எச்சரித்திருந்தார்.

அத்துடன் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முன்னாள் கடற்படைத் தளபதிகள் மூவர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியமையும் ஜனாதிபதி விமர்சித்திருந்ததோடு, விசாரணைக் குழுக்கள் தமக்கு தெளிவுபடுத்தாமல் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதாகவும் கூறியிருந்தார்.

இந்த நிலையிலேயே இலஞ்ச ஊழல் ஆணைக்குழு ஜனாதிபதிக்கு இந்தக் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(செ-11)

## ராஜபக்ஷவினரு...

பிரதமர் உட்பட ஐக்கிய தேசிய கட்சியின் அமைச்சர்களுடன் கடந்த 13-ம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனை கூறியுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய ஜனாதிபதி, அரசாங்கம் என்ற வகையில் நான் என்னையும் இணைத்தே அனைத்தையும் கூறினேன். விசாரணை நடத்துபவர்கள் அவர்கள் மேற்கொள்ள போகும் நடவடிக்கைகளை எனக்கு அறிவிப்பதில்லை.

அமைச்சர் கார் ஒன்றை எடுத்துச் சென்றதாக கூறி வழக்கு தொடர்கின்றனர். அப்படியென்றால் அனைத்து அமைச்சர்களுக்கு எதிராகவும் வழக்கு தொடர வேண்டும்.

குறிப்பிட்ட அமைச்சரை ஏதோ பழிவாங்க நான் இதனை செய்கிறேன் என்று அவர் நினைக்கின்றார். கங்காராம விகாரையில் யானை ஒன்றை கைப்பற்ற நீதிமன்றத்தின் அனுமதியை பெற்றுக்கொண்டுள்ளனர். விகாராதிபதி என்னிடம் கேட்கும் வரையில் எனக்கு எதுவும் தெரியாது.

மூன்று கடற்படையினரை நீதிமன்றத்திற்கு கொண்டு சென்றமையை அவர்கள் படம்பிடித்து ஊடகங்களுக்கு வழங்கி அவர்கள் தமக்கு சாதகமாக அச் சம்பவத்தை பயன்படுத்தி கொள்ளப்பார்க்கின்றனர்.

இவர்களுக்கு பிணை வழங்கப்பட்டதும் வெளியில் வந்து நாம் படையினரை பழிவாங்குவதாக கூறுகின்றனர். இதனையே நான் கூறினேன். நான் கோத்தபாய ராஜபக்ஷவின் பெயரைக் கூட கூறவில்லை. இந்த அரசாங்கத்தை வீழ்த்த முடியாது என்று தான் நான் கூறினேன். இது வலுவான அரசாங்கம் என்றும் கூறினேன் என ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் பேச்சை கேட்டுக்கொண்டிருந்த பிரதமர் ரணில், தற்போது ஏற்பட்டுள்ள கருத்து மோதல் பாதிப்பை குறைத்து கொள்வது முக்கியமானது. நடத்தப்பட்டு வரும் விசாரணைகளை துரிதப்படுத்த வேண்டியதையே அனைவரும் செய்ய வேண்டும் என கூறியுள்ளார். இதற்கு ஜனாதிபதியும் இணக்கம் வெளியிட்டுள்ளார்.

இந்த சந்திப்பில் அமைச்சர்கள் மாங்கள சமரவீர, மலிக் சமரவிக்ரம, கபீர் ஹாசீம், அகிலவி ராஜ் காரியவசம், ரவிந்திர சமரவீர, சாகல ரத்நாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர். (செ-11)

## ஜனாதிபதி நேற்று...

இம்முறை BRICS மாநாட்டின் தலைமை மற்றும் உபசரிப்பு பொறுப்பு இந்தியாவுக்கு கிடைத்துள்ளதுடன், இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் விசேட அழைப்பின் பேரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

இம்மாநாடு இந்தியாவின் கோவாவில் நேற்றும் இன்றுமாக இருநாட்கள் நடைபெறுகிறது.

மத்தியதர வருமானம் பெறும் ஒரு நாடாக இலங்கை இந்த மாநாட்டில் இணைந்துகொள்ள சந்தர்ப்பம் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

BRICS மாநாட்டில் பங்குபற்றும் ஜனாதிபதி மாநாட்டில் பங்குபற்றும் பல்வேறு நாடுகளின் அரச தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடவுள்ளார்.

பிரதியமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வாவும் ஜனாதிபதியுடன் இப்பயணத்தில் இணைந்து கொண்டுள்ளார். (செ-11)

## வாகன விபத்து...

பஸ் சில்லுக்குள் சிக்குண்டு இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவரே உயிரிழந்தவராவர். இந்த விபத்து நேற்று மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொத்துவிலைச் சேர்ந்த எம்.ஐ.கால்டீன் என்ற விவசாயியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கண்டியில் இருந்து பொத்துவில் நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ்சை நிறுத்தி அவசரமாக ஏற முயன்றபோதே தவறி வீழ்ந்து பலியானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்புடைய மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

## மோசடியாளர்கள் உத்வேகம்!

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் வெளியிட்ட பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய கருத்து எந்த நபரையும் இலக்காக வைத்து வெளியிட்ட கருத்தல்ல எனவும், நிறுவனங்கள் சம்பந்தமாக மாத்திரம் கூறிய கருத்துக்கள் எனவும் ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

சிவில் அமைப்புகளின் ஒன்றியம் கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார். சில அரச நிறுவனங்கள் சட்ட ரீதியாக செயற்படுவதில்லை எனக் கூறி உண்மையை நாட்டுக்கு தெளிவுப்படுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முயற்சித்தார்.

ஜனாதிபதி வெளியிட்ட கருத்தை சிலர் அரசியல் இலாபம் பெற பயன்படுத்துவதை காணமுடிகிறது.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் பல்வேறு நிதி மோசடிகளில் ஈடுபட்ட கூட்டு எதிர்க்கட்சியில் இருக்கும் நபர்கள் ஜனாதிபதியின் கருத்தால் உத்வேகம் பெற்று, நல்லாட்சி அரசாங்கத்தில் பிளவு ஏற்பட்டுள்ளதாக நாடு முழுவதும் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர் எனவும் நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-5)

## கிராம சேவகர்கள் ஆஜராக வேண்டும்

குற்றவாளிகள் ஆஜராகாத வழக்குகள் மற்றும் பராமரிப்பு வழக்குகளில் கிராம சேவகர்கள் ஆஜராகி சாட்சியமளிக்க வேண்டும் என மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் மா.கணேசராஜா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

கிராம சேவகர்கள் தமது கிராம எல்லைக்குட்பட்ட எதிரிகள், பிரதிவாதிகளின் வதிவிட விபரங்களை வெறும் அறிக்கை மூலம் கடந்த காலங்களில் அனுப்பிவந்துள்ளனர்.

எதிர்வரும் காலங்களில் கிராம சேவையாளர்கள் வதிவிட அறிக்கைகளை வெறுமனே அறிக்கை மூலம் நீதிமன்றுக்கு அனுப்பாது, நீதிமன்றில் நேரடியாக ஆஜராகி சாட்சியமளிக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர்களுக்கும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் மா.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். (செ-5)

## ஜனாதிபதியின் நிலைப்பாட்டில் பிரதமர் ரணிலும் உள்ளார்!

## அமைச்சர் காசிம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களம் தொடர்பில் ஜனாதிபதியின் நிலைப்பாட்டிலேயே பிரதமரும் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான கபீர் காசிம் இதனை தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றின் போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், பிரதமர் மற்றும் ஜனாதிபதிக்கு இடையில் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பில் தாமும் இணைந்திருந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

போராட்டங்களை நடத்தி பெற்றுக் கொண்ட நல்லாட்சியை தக்க வைத்துக்கொள்வதற்கான பொறுப்பு ஜனாதிபதிக்கு மாத்திரமன்றி அனைவருக்கும் இருப்பதாக பிரதமர் தெரிவித்திருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

முன்னாள் இராணுவ தளபதிகள் மற்றும்



இராணுவத்தினரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு முன்னர் ஜனாதிபதிக்கோ அல்லது பிரதமருக்கோ அறிவிக்க வேண்டும் என்ற ஒரு சர்ச்சை அந்த இடத்தில் எழுந்திருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், ஜனாதிபதி மாத்திரமின்றி பிரதமரின் நிலைப்பாடும் ஒன்றாகவே காணப்படுகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-5)

# 105 கிலோ கேரள கஞ்சா மீட்பு...

கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட் பட்ட மாதகல் பகுதியில் படகில் வைத்தே கடத்தமுற்பட்ட மேற்படி கஞ்சாவை காங்கேசன்துறை விசேட போதைப்பொருள் ஒழிப்பு பொலி ஸார் கைப்பற்றியுள்ளனர். இந்த கைப பற்றல் நடவடிக்கையில் சந்தேகத் தின் பேரில் மூவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யபட்டவர் களில் ஒருவர் மாதகல் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் மற்றைய இருவரும் மன்னார் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் எம்.ஏ.ஏ.ரஞ் சித் மாசிங்க, இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி எஸ்.எம்.ஏ.ஆர்.சேனா நாயக்க, மற்றும் காங்கேசன்துறை உத விப் பொலிஸ் அத்தியட்சர் டி.கே. பிரியந்த ஆகியோரின் வழிநடத்த லில் காங்கேசன்துறை விசேட போதையொழிப்பு பொலிஸாரினால் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டுள்ளது

இவ்வாறு மீட்கப்பட்டுள்ள கஞ் சாவின் பெறுமதி ஒரு கோடியே 45 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாயென தெரிவிக்கும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை நேற்று முன்தினம் மாதகல் கடற்பரப்பினூடாக ஒரு கோடியே 30இலட்சம் பெறுமதியான கேரள கஞ்சா வெளி மாவட்டம் ஒன றுக்கு கடத்தப்பட இருந்த நிலை யில் அதனை புலனாய்வுத்துறை பொலிஸார் முறியடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4.60)

# ஜனாதிபதி...

இதனிடையே ஐக்கிய தேசியக் கட்சி ஒழுங்கு செய்திருந்த சகல ஊடக சந்திப்புகளையும் பிரதமர் இரத்துச் செய்துள்ளார்.

ஒழுங்கு செய்த ஊடக சந்திப்புகளை தான் நாடு திரும்பியதும் நடத்துமாறு பிரதமர், கட்சியினருக்கு அறிவித்துள்ளார்.

பிரசல்ஸ் சென்றுள்ள பிரதமர் ரணில் விக்ர மசிங்க எதிர் வரும் 21 ஆம் திகதி நாடு திரும்ப வுள்ள நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றையதினம் இந்தியா பயண மாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# போதைமாத்...

யாழ்.காரைநகர் கடற்பகுதியில் தடைசெய் யப்பட்ட போதை மாத்திரைகள், நாணயதாள் மற்றும் 35 கிலோ கஞ்சா ஆகியவற்றை இலங்கை விசேட அதிரடிபடையினர் மற் றும் கடற்படையினர் இணைந்து கைப்பற்றி யுள்ளதுடன் அதனை கடத்திவந்த இந்திய பிரஜைகள் உள்ளிட்ட மூன்று பேரையும் கைது செய்துள்ளனர்.

நேற்று அதிகாலை இந்தக் கைது இடம் பெற்றுள்ளது. சம்பவத்தில் தமிழகம் தங்கச்சி மடம் சூசைபுரம் பகுதியை சேர்ந்த லோறன்ஸ் மெரில்டன் (வயது 32) என்பவரும் மன் னார் பேசாலை பகுதியை சேர்ந்த இருவரும கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் 6 வகை பட்ட 411 பாலியல் உணர்வுகளை தூண்ட கூடிய குளிசை அட்டைகள் பணம் அச்சிடு வதற்காக பயன்படுத்தப்படும் அச்சுத் தாள்கள் மற்றும் 35 கிலோ கஞ்சா ஆகியன மீட்கப்பட் டுள்ளது.

மேலும் அவர்கள் பயன்படுத்திய ஒரு பட கும் (டிங்கி படகு) மற்றும் 25 குதிரை வலு இயந்திரம் ஆகியனவும் கைப்பற்றப்பட் டுள் ளது. இதேவேளை கைது செய்யப்பட்ட மன்னார் பேசாலை பகுதியை சேர்ந்தவர் களில் ஒருவருக்கு 25 வயது எனவும் மற்றைய வருக்கு 20 வயது எனவும் கூறப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டு வரும் நிலையில் கைது செய்யப்பட்ட வர்கள் ஊர்காவற்றுறை நீதவான் நீதி மன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளனர். (செ-4)


## கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி

ஜேர்மன்,சுவிஸ்,ஒஸ்ரியா ஆகிய நாடுகளுக்கான டொச் வகுப்புக்கள், அதாவது வெளிநாடு செல்பவர்களுக்கான A1 சான்றிதழுக்கு ஏற்ற வகையில் திரு.S. கோணேஸ்வரன் அவர்களால் கற்பிக்கப்படுகின்றது.

புதிய பிரிவுகள் வெகு விரைவில் ஆரம்பமாகவுள்ளது. உங்கள் பதிவுகளை முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

தொடர்பு கொண்ட பின்பு நேரில் வரவும்.

ஆறியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(புத்தர் விகாரைக்கு எதிரே 2ஆம் மாடி)

077 970 7322



## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு (Water Proofing)

உங்கள் இல்லங்கள் நிறுவனங்கள் போன்றவற்றிலுள்ள சீமெந்தி னாலான கட்டடங்கள், நீர்த்தாங்கிகள் மற்றும் மாடிக் கட்டடங்களில் உள்ள குளியல் அறைகள் என்பவற்றில் ஏற்படும் நீர்க்கசிவுகளை தடுத்து நிறுத்துவதுடன் உங்களின் வீட்டுச் சுவர்களில் ஏற்படும் நீர்க் கசிவுகளின் பாதிப்புக்களை உத்தரவாதத்துடன் சீர்செய்து தருவதோடு கோவில், வில்லு மண்டபம் கோபுரங்களுக்கிடையிலான நீர் கசிவுகளையும் நிறுத்தித்தருகிறோம்.

FINCO ஸ்தாபனத்தின் ஏக விநியோகஸ்தர்கள் ஆகிய எங்களிடம் ஒப்பந்தகாரர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும். (C-6127)

North and East Engineering
No.55 Stanly Road, Jaffna.
பீப்பிள் லீசிங்குக்கு முன்பாக
FINCO
021 222 2363, 077 524 4177, 077 232 3000



## வர்த்தக முகவர்/ விற்பனைப் பிரதிநிதிகள் தேவை




தமிழ் மக்களின் நன்மதிப்பைப்பெற்று விற்பனையில் முதலிடத்தில் இருக்கும்

சன்சக்தி பத்திகளுக்கு

யாழ்ப்பாணம் கிளிநொச்சி மன்னார் முல்லைத்தீவு வவுனியா

ஆகிய பிரதேசங்களுக்கு விற்பனை முகவர்கள், விற்பனைப் பிரதிநிதிகள் உடன் தேவை

எஸ்.எஸ்.ஸ்ரீ சன்சக்தி ரெடர்ஸ்

இல. 651, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (6339)

T.P :- 077 552 7099,021 221 7994

WWW.SUNSAKTHY.COM



## CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

அழையுங்கள் - 077 29 31 062

CNR World wide Express
No.401 Clock tower road, Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
(C-6124)



## அமெரிக்க லொத்தர் விசா

2018ல் நீங்களும் அமெரிக்காவில்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

அரிய வாய்ப்பு - சில தினங்களுக்கு மட்டுமே 0768226230

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்

சென்ற வருடம் (2015) எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் 19 பேர் அமெரிக்க விசாவிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|---|
| 0768226241 | 0768226240 | 0776699892 | 0768226237 | 0776697960 |

(C-6107)

மேலும் தகவல்களுக்கு--> www.facebook.com/v2tandt



## Study in Latvia ( Europe)

Schengen Visa( Valid for 26 Countries)



Why Study In Latvia?

Bachelors / Master / Doctoral Level
ஆங்கிலமொழி மூலம் கற்கைநெறி
IELTS அவசியமில்லை
இலகுவான விசா நடைமுறை
மிகக்குறைந்த கற்கைநெறி கட்டணம்
20 மணித்தியால பகுதிநேர வேலை

Admission open for FEB - 2017

iCS Forgine Study Service

Admission Help line
076 7013060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107, B 1/1 Galle Road,Colombo - 06
(C-6125)



## காணி விற்பனைக்கு

அரியாலையில் 3 3/4 பரப்பு வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :-

077 3297 689



## மாபெரும் மலிவு விற்பனையும் அதிரடி விலைக் கழிவும்.



தீபாவளியை முன்னிட்டு

மகா சில்க்ஸ், பியூட்டி சில்க்ஸ், கவுஸ் ஒவ் செலக்ஷன்

வாடிக்கையாளர்கள் நண்பர்களுக்கு வழங்கும் மகத்தான விலைக் கழிவும், மலிவு விற்பனையும்

15% முதல் 50% வரை விலைக் கழிவு



கவுஸ் ஒவ் செலக்ஷன்
இல. 225 பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7675

மகா சில்க்ஸ்
இல. 32,40 நவீனசந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.
021 222 7359

பியூட்டி சில்க்ஸ்
இல. 69,69A நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
021 222 7675

| | விலை | மலிவு விலை |
|---|---|---|
| பட்டு சாறி | 9000 | 3500 |
| நோமல் சில்க் சாறி | 1200 | 700 |
| கொட்டன் சாறி | 1550 | 1000 |
| கொட்டன் சாறி | 2700 | 1300 |
| ஸ்கேட் | 1200 | 500 |
| பிளவுஸ் | 650 | 300 |
| சல்வார் | 3500 | 1000 |
| சல்வார் | - | 500 |
| பேபி சூட் | - | 300 |
| பேபி பாட்டி பிறோக் | 2250 | 600 |
| Boys ரவுசர் | 1400 | 600 |
| Boys சேட் | 1200 | 600 |
| Boys T.சேட் | 1050 | 500 |
| ரவுசர் | 2400 | 1500 |
| மெடல் சேட் | 1600 | 1000 |
| T. சேட் | 1100 | 500 |
| சேட் | 1400 | 700 |
| புள் ஸ்கேட் பீஸ் | 3250 | 1500 |


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham
நாதம் 87
வள்ளுவர் ஆண்டு 2047 | 16.10.2016 | தொலைபேசி : 021 222 3378





# நல்லாட்சி இனி நகருமா?

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...





## வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



### ஜெயலலிதா நிலை என்ன?

### நம்ம மாகாண சபையினரும் நாடாளு மன்றத்தினரும் செய்யும் சேவை பற்றி?

### ரெமோ எத்தனை கோடி வசூல்? படம் எப்படி?

**கிரிஸ் கண்ணன்**

**நம்ம மாகாண சபையினரும் நாடாளு மன்றத்தினரும் செய்யும் சேவைபற்றி?**

மாகாணசபை எங்கள் ஆட்சி எமக்கான ஆட்சி. ஆனால் அதைக் குழப்புவதும் கூக்குரல் இடுவதும் முதல்வருக்கு எதிராய்ச் சதி செய்வதுதான் வேலை. பாராளுமன்றில் நாங்கள் எதிர்க்கட்சி. சபையில் என்ன நடந்தாலும், எது நடந்தாலும் (தமிழருக்கு எதிராய்) வாய் திறப்பதே இல்லை. ஆனால் நாங்கள் எதிர்க்கட்சியுங்கோ... கோ கோ...

**லக்ஷன் — நவாலி**

**முற்காலப் பெண்களுக்கும் இக்கால பெண்களுக்கும் என்ன வேறுபாடு?**

வள்ளுவரின் மனைவி வாசுகி ஒரு நாள் கிணற்றில் நீரள்ளிக்கொண்டிருந்தபோது வள்ளுவர் வாசுகியைக் கூப்பிட்டார். வாசுகி கணவனின் குரல் கேட்டதும் கிணற்றில் வாளியை அப்படியே விட்டுவிட்டு ஓடிவந்து கணவனுக்கு பணிவிடை செய்துவிட்டு மீண்டும் கிணற்றடிக்குச் சென்றாள். கிணற்றில் வாளி அந்தரத்தில் அப்படியே நின்றது. அதேபோல நானும் என் மனைவியை அடியேய்... என்று அழைத்தேன் மனைவி கிணற்றடியில் அந்தரத்தில் நின்றாள். வாளியும் கயிறும் பறந்து வந்து என் தலையைப் பதம் பார்த்தது.

**லயன்சன் — வளலாய்**

**எது நல்ல சினிமா?**

1960ற்கு உங்களைக் கூட்டிச்செல்வேன் பரவாயில்லையா.

**கஜன்**

**காதலிக்கும் மனைவிக்கும் என்ன வேறுபாடு?**

நெற்றியில் சிகப்பு எரிய உன்னுடன் கூடவர ஊர் உலகம் பச்சைக்கொடி காட்டினால் அது மனைவி. நெற்றியில் கறுப்பு எரிய உன்னுடன் கூடவர ஊர் உலகம் சிகப்புக்கொடி காட்டினால் அது காதலி.

**குணரத்தினம் — திருமுறிகண்டி**

**தமிழ் மக்கள் பேரவை வடக்கில் ஒவ்வொரு கிராமங்களாக அங்கத்தவர்களை சேர்க்கும் பணியை ஏன் இன்னமும் செய்யவில்லை?**

செய்யும். தமிழர்களின் உன்னத தலைவர்களாக மக்கள் ஏற்கும் முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனை இணைத் தலைவராகக் கொண்ட தமிழ் மக்கள் பேரவை அந்தப் பணியை காலம் தாழ்த்தாது செய்ய வேண்டும் என்பதுதான் எமது விருப்பமும் கூட.



**நந்தகுமார் — மானிப்பாய்**

**தமிழ் மக்களின் பறிக்கப்பட்ட காணிகள் திருப்பிக் கொடுக்கப்படமாட்டுதாமே?**

தமிழர்கள் எல்லாம் பௌத்தத்திற்கு மாறினால் எல்லாம் சுபம். எங்கள் ஒவ்வொருவருடைய காணிகளுக்குள்ளும் ஒரு விகாரை இருக்கும். நான் ஒரு வீட்டுக்கல்ல விகாரைக்குச் சொந்தக்காரன் என தமிழன் ஒவ்வொருவரும் மார்தட்டிச் சொல்லலாம்.

**ராதையன் — திருநெல்வேலி**

**உங்கள் கனவுகள் நனவானதுண்டா?**

என்மனைவியை ஒருநாள் அடிப்பதாய் கனவுகண்டேன் ம்ம்ம்...

கனவிலாவது நிறைவேறியதே என்ற பூரிப்பில் துள்ளிக்குதித்தேன். என்ன அதிசயம் அடுத்தநாளே என் மனைவியின் கன்னத்தில் ஒரு நுளம்பு. விடுவோமா? நீண்டநாள் என் கனவு நினைவானது.

**உங்கள் கேள்விகளை அனுப்புங்கள்**

**குறுந்தகவல் (SMS)**

**021 567 1532**

**ரதிகா — வத்தளை**

**தற்போதைய ஆண்களின் நிலை?**

ஓடுவதற்கு ஒரு மோட்டார் பைக். கடலை போடுவதற்கு ஒரு டச் போன். போட்ட கடலையை பொறுக்குவதற்கு ஒரு பெண். அந்தப் பெண்ணைப்பற்றி பேசுவதற்கு நான்கு பிறண்ஸ். தண்ணியடித்து தம்மடித்து சந்தியில் நின்று கெட்டுக்குட்டிச்சுவராய்ப் போவதுதான்.

**ஜீவன் — அல்வாய்**

**பணக்காரனின் அகந்தை பற்றி?**

அது எப்படியோ தெரியவில்லை ஏழையாய் இருப்பவனிடம் பணம் வந்ததும் அவன் எல்லாம் மறந்து பணக்காரருக்கே உரிய மமதையை பெற்றுவிடுகிறான்.

என்னிடம் ஆயிரம் ரூபாய் இருக்கிறது என்பதனால் அதே ஆயிரம் மற்றவனிடமும் இருப்பதென்று நினைக்கும் பக்குவத்தை எங்கிருந்துதான் பெற்றுக்கொள்கிறார்களோ இந்தப்பணக்காரப் பயலுகள். வாடும் பயிருக்கு தண்ணீர் இறையுங்கள். உங்களுக்கு இறைவன் உங்களுக்கு இறைப்பான்.

**ரஜீவா — அல்வாய்**

**குடிக்கிறவனின் வாழ்க்கை பற்றி?**

வீதியில் புகைத்துக்கொண்டிருந்த ஒருவனுக்கு வீதியால் நடந்துவந்த பெரியவர் ஒருவர் புகைத்தலின் தீமை பற்றியும் நீங்கள் இருபது வருடமாக புகைத்த பணத்தைச் சேமித்திருந்தால் ஒரு கார் வாங்கியிருக்கலாம். நான், என் பரம்பரையில் யாருமே புகைப்பதும் இல்லை, குடிப்பதும் இல்லை என்றார். அது சரி நீங்கள் குடிப்பதில்லை என்றால் நீங்கள் காரில் வராமல் ஏன் நடந்து செல்கிறீர்கள். உங்களுடைய கார் எங்கே? என கேட்டான் அந்த குடிகாரன். இப்படி தங்களின் தவறுகளை நியாயப்படுத்தக் கூடியவர்கள் குடித்த குடிகாரர்கள்.

**கமல் — வல்வெட்டித்துறை**

**ஜெயலலிதா நிலை என்ன?**

வைத்தியசாலை வட்டாரங்களிலும் தமிழக அரசினாலும் இதுவரை அவரின் உடல்நிலை குறித்து எதுவித கருத்தும் தெரிவிக்கவில்லை. ஈழத்தமிழன் நலன்சார்ந்து பலமுறை பல தீர்மானங்களை தமிழக சட்டசபையில் நிறைவேற்றியவர் ஜெயலலிதா. அவர் சுகம்பெற்று மீண்டும் முதல்வர் கதிரையில் அமர வேண்டும் என்பதே ஈழத்தமிழ் மக்களின் பிரார்த்தனை.

**ஜெயா — கொக்குவில்**

**இசை நிகழ்ச்சி பார்க்க மதுவில் வருபவர்கள் பற்றி?**

தண்ணியில் மிதந்துகொண்டு இசையில் மிதப்பது மனதுக்கு ஆறுதலாக இருக்கும் என்று ஒருவர் கூறக் கேட்டிருக்கிறேன்.

**தனு - கிரு - ஜெனா**

**உனக்காக உயிரைத் தருவேன் என்று சொல்பவர்கள் பற்றி?**

எங்கே தா பார்ப்போம் என்றபடி ஒரு சிறிய கத்தியை நீட்டிப் பாருங்கள். புடரியில் கால் அடிக்க ஓட்டம் பிடிப்பார்.

**ரஞ்சித் - அல்வாய் - மேரிரம்ஜா - பொலிகண்டி**

**ரெமோ எத்தனை கோடி வசூல்? படம் எப்படி?**

7ஆம் திகதி வெளியான படம் நான்கு நாட்களிலேயே 24 கோடி வசூல் செய்துவிட்டதென்றால் தற்போதைய கணக்கைப்பாருங்களேன். சிவகார்த்தியேனின் வளர்ச்சி தற்போது எல்லையின்றி சென்றுகொண்டே இருக்கிறது . வெல்டன்சிவா.

**தர்சன் — அச்சுவேலி**

**காதல் கத்தரிக்காய் என்றால் நட்பு புடலங்காயா?**

ஆமாம். அடியில் கல் கட்டாமல் விட்டால் சுருண்டு விடும்.

# facebook தலைவன்

மலையும், காடுகளும்நிறைந்த, நீர்வளமும் நிலவளமும் கொண்ட, அந்த நாட்டை கொங்கன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு வீரததிலும் தீரத்திலும், புத்திக்கூர்மையிலும், சிறந்த வீரத்தளபதி ஒருவர் இருந்தார். அவர் பெயர் அறிவுடைய நம்பி.

அறிவுடைய நம்பியின் புகழ், நாடு, நகரம் எங்கும் பரவியது. மக்கள் எல்லாம் இந்த கொங்க மன்னன் புகழுக்கு காரணமே, அறிவுடைய நம்பிதான். அவரின் வீரதீரம் கண்டுதான், எதிரி நாட்டார் கொங்க நாட்டின் மீது படையெடுக்க அஞ்சுகின்றனர் என தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

அரசன் கொங்கனுக்கு கூட, அந்த எண்ணமிருந்தது. தன்னைவிட எல்லாவிதத்திலும் சிறந்த அறிவுடையநம்பிதான் இந்த நாட்டை ஆள தகுதி வாய்ந்தவன். நாட்டாரும், நகரத்தாரும் அவன் அரசனானால் பெரிதும் மகிழ்வார் என எண்ணமிட்டார். இந்த விடயம் குறித்து அறிவுடைய நம்பி மனதில் என்ன இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள விரும்பினார்.

பின்பு குடுகுடுப்பைக்காரன் போல் வேடமிட்டுக் கொண்டு போய், அறிவுடையநம்பி வீட்டின் முன் நின்று கொண்டு, இராஜயோகம் வரப்போகிறது. இந்த வீட்டு ராஜாவுக்கு, நாட்டை ஆளும் எல்லாத தகுதியும் இருக்கிறது. கூடிய சீக்கிரமே இந்த நாட்டு ராஜா இவர் கையில் இராச்சியத்தை ஒப்புவிக்க போகிறார் என கூறினார்.

அதை கேட்டுக்கொண்டே வந்த அறிவுடைநம்பியின் மனைவி.

ஐயா, உன் பிரசங்கத்தை கொஞ்சம் நிறுத்து. நல்லவேளையாக அவர் வீட்டில் இல்லை. இருந்திருந்தால் உன் உயிருக்கு உத்திரவாதமில்லை. இந்தா இதற்காகத் தானே, இப்படி எல்லாம் கூவினாய், வாங்கிக்கொண்டு ஓடிவிடும் என சிலபடி அரிசியை போட்டு போகச் சொன்னாள்.

"ஆகா" நம்பியின் மனைவிக்கு ஏன் இப்படி கோபம் வருகிறது. நம்பி இல்லாத சமயம் பார்த்து வந்து விட்டோமே என புருவம் சுருக்கி மன்னர் நம்பி வீட்டின் உள்ளேதான் இருக்கிறார் என்பதை அறிந்து கொண்டு விசமப் புன்னகை புரிந்தபடியே. நம்பியின் மனைவியைப் பார்த்து "ஏனம்மா, நான் என்ன ஊரில் உள்ள அனைத்து வீட்டிற்குமா இப்படி பலன் சொல்கிறேன். உன் கணவருக்கு அரசாளும் தகுதி இருக்கிறதம்மா, அதனால்தான் சொல்கிறேன் என்றவர், ஏனம்மா உனக்கு இந்த நாட்டிற்கே ராணியாக வேணடும் என்ற ஆசையில்லையா? என்றார் நயமாய்.

"ஆகா" என் கணவருக்குத்தான கிரகபலன் சரியில்லை என்றால் உனக்கும் சரியில்லை போலிருக்கிறது. வம்பை விலை கொடுத்து வாங்காமல் ஓடிவிடு ஐயா. நம்பியின் மனைவி கையை பிசைத்தபடியே படபடத்தார்.

என்ன கிரகபலன் சரியில்லை, அவரின் ஜாதகம் கொண்டுவாம்மா நான் பார்த்துச் சொல்கிறேன் என்றபடியே அவர்கள் வீட்டுத்திண்ணையில் அமர்ந்து விட்டார்.

உடனே தலையில் அடித்துக் கொண்டே உள்ளே போன நம்பியின் மனைவி, புன்னகையுடன் ஒரு ஜாதகத்தை எடுத்துக்கொண்டு வந்தார்.

அதை புரட்டிப் பார்த்த குடுகுடுப்பை, ஆகா இது இராஜயோக ஜாதகம், கிரகபலம் எல்லாம் நன்றாக உள்ளன என பாராட்டிய படியே இந்தநாட்டு ராஜா கூடிய சீக்கிரமே. ஸ்தல யாத்திரை போகப்போகிறார், அதனால் உன் கணவனே இந்நாட்டு ராஜாவாய் நாட்டை ஆளப் போகிறான் என்றார் இரகசியக் குரலில்.

அதைக்கேட்டு புன்னகைத்த நம்பியின் மனைவி, அப்படியானால் ரொம்ப சந்தோஷம் ஐயா, இது நீங்கள் நாட்டை விட்டு ஸ்தலயாத்திரை போகப் போவதாய் சொன்ன நம் அரசரின் ஜாதகம். எங்கள் அரசரின் ஜாதகம்தான். இதிலிருந்து நீர் பொய்யான குடுகுடுப்பை என தெரிகிறது. உண்மையைச் சொல். உண்மையில் நீர் யார்?! எதிரி நாட்டு ஒற்றனா? நம்பியின் மனைவி தன் குரலை கம்பீரமாய் உயர்த்தினார்.



உடனே உருவியவாளுடன் வீட்டிற்குள்ளிலிருந்து ஒரு சிறுவன் ஓடிவந்து குடுகுடுப்பையின் மார்புக்கு நேரே வாளை நீட்டினான். அவன் நம்பியின் மகன் என்பதை அறிந்த மன்னர் அவசரமாய் தன் வேசம் களைத்தார்.

'ஆ' மகாராஜா என வியப்புடன் கூறியபடியே இருவரும் அவர் காலில் விழுந்தனர்.

"அம்மா" இங்கு இத்தனை நடக்கிறது. நம்பி எங்கே இன்னும் வெளிவரவில்லையே என்றார் ஆச்சரியமாய் அரசர். மகாராஜா அவர் உறங்குகிறார், உறங்கும் சமயம் அவரை யாராவது கொன்று போட்டாலும் அவருக்கு தெரியாது. அப்படி தூங்கும் பழக்கம் கொண்டவர். கும்பகர்ணனின் அடுத்தவாரிசு. உறங்கும் சமயத்தில் விழித்திருக்கும் ஆற்றல் வாய்ந்தவரே சிறந்த அரசனாக இருக்க முடியும். இப்படி தன்னை மறந்து தூங்கும் பழக்கம் உள்ளவரிடம் நாட்டை ஒப்புவித்தால் அந்த நாடு என்னத்திற்கு ஆகும்.

ஐயா கூடவே வீரமும் தீரமும் கொண்ட அவருக்கு பொறுமையும், சகிப்புத் தன்மையும் கிடையாது. கண்ணால் கண்டதையே உண்மை என நம்பக்கூடியவர். ஒரு நாட்டை ஆளும் மன்னனுக்கு பொறுமையும் சகிப்புதன்மையும் மிக அவசியம் இல்லையா.

"அப்பொழுதுதானே சிறந்த ஆட்சி நடக்கும்"

நீங்களே அத்தனை தகுதியும் கொண்ட சிறந்த மன்னர். உங்கள் நாட்டையே வேறு ஒருவருக்கு கொடுக்க சித்தமான உங்கள் பெருந்தன்மையே உங்கள் குலத்தின் புகழ்கூறும் என பலவாறு ராஜாவை புகழ்ந்தனர்.

இதையெல்லாம் கேட்ட அரசன் நம்பியின் இந்த குறைபாடு எனக்கு தெரியாமல் போய்விட்டது அம்மா. நல்ல சமயத்தில் என்னை விழிக்கச் செய்தாய். நான் வருகிறேன் என விடை பெற்றார்.

அவர் சென்று விட்டார் என்பதை உறுதி செய்து கொண்டபின் அறிவுடையநம்பி எழுந்து வெளியே வந்தார். இனி நம் அரசர் எந்த உறுத்தலும் இல்லாமல், நிம்மதியாய் ஆட்சி செய்வார் இல்லையா என மனைவியை பார்த்தார்.

உங்கள் புத்திசாலித்தனமே அலாதிதான் என அறிவுடையநம்பியை பாராட்டினார் அவர் மனைவி. ஆம் தன் அரசரின் மனதிலிருந்த உறுத்தலை விரட்டினான் அறிவுடையநம்பி. தன் மனைவியின் மூலம் அப்படி நாடகமாடச் சொன்னார். அதில் வெற்றியும் கண்டார்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 870

Search for people, places and things | Nagendram Home


### சங்கர்




### சிந்து




### தர்சிகா



### ராதை




### மகிமா

பிறர் அழகில்
மயங்காதே....!

அழகுல கிடைப்பது
சந்தோஷமல்ல....!
அன்புல கிடைப்பது தான்
உண்மையான சந்தோஷம்....!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# மூட ஆமையின் முடிவு



முன்னொரு காலத்திலே ஒரு அடர்ந்த காட்டின் நடுவே, அழகான ஒரு குளம் இருந்தது. அந்தக் குளத்தில் ஏராளமான மீன்களும் நண்டுகளும் வசித்து வந்தன. அவற்றுடன் கம்பா என்ற ஒரு ஆமையும் வசித்து வந்தது.

கம்பா ஒரு அழகான ஆமை. அந்தக் குளத்தில் வாழ்ந்த எல்லா ஜீவராசிகளுடனும் மிக்க அன்பாகப் பழகி வந்தது. அதன் ஒரேயொரு கெட்ட இயல்பு, அதன் கடும் கோபம்தான்.

அற்ப விடயங்களுக்கெல்லாம் அது கடுமையாகக் கோபித்துக் கொள்ளும். "அதிக கோபம் ஆபத்தை விளைவிக்கும்" என்ற பழமொழியை அது உணர்ந்து கொள்ளவில்லை.

அந்தக் குளத்துக்கு நாள்தோறும் இரண்டு கொக்குகள் தண்ணீர் குடிக்கவும், அந்தக் குளத்தில் வாழும் மீன்களைப் பிடித்துச் சாப்பிடவும் வருவது வழக்கம். அந்தக் கொக்குகளின் பெயர் சங்கடன், விகடன்.

நமது ஆமையார் அந்த இரண்டு கொக்குகளுடனும் பேசிப் பேசி, மிக நெருக்கமான நண்பனாகிவிட்டார். அவை மூன்றும், உயிர் நண்பர்களாகப் பழகி, ஒன்றாக உணவருந்தி, பலவிதமான வேடிக்கைப் பேச்சுகளைப் பேசி மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தன.

இவ்வாறு இருக்கும்போது, அந்தக் காட்டிலே ஒரு கொடுமையான கோடை காலம் வந்தது.

பல மாதங்களாக மழை பெய்யவில்லை. வெய்யில் கடுமையாகக் கொளுத்தியது. அதனால், கடும் வறட்சி ஏற்பட்டு ஆறுகள், குளங்கள், கிணறுகள் முதலிய யாவும் ஒரு சொட்டுத் தண்ணீரும் இன்றிக் காய்ந்து, வறண்டு போயின.

ஏராளமான ஜீவராசிகள் வாழ்ந்து வந்த அந்தக்குளம் ஒரு துளி தண்ணீர் கூட இல்லாமல் வற்றிப்போனது. அந்தக் குளத்தில் வாழ்ந்துவந்த மீன்கள், நண்டுகள் யாவும் குடிக்கத் தண்ணீர் இன்றி இறந்து விட்டன.

ஆமையின் நிலையும் மிகவும் பரிதாபமாகி விட்டது. குடிக்க ஒரு துளி தண்ணீர்கூட இல்லாததால் அது வாடி மெலிந்து இருந்தது.

அதன் நிலையைக்கண்ட இரு கொக்கு நண்பர்களும் மிகவும் கவலைப்பட்டன.

தங்கள் நண்பனான ஆமைக்கு உதவி செய்து, அதை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்று துடித்தன .

ஆனால், இரண்டு கொக்குகள் ஒரு ஆமைக்கு எப்படி உதவ முடியும்? கொக்குகள் பறவை இனத்தைச் சேர்ந்தவை. ஆமையால் பறக்க முடியாது.

அது நீரில் நீந்தும் இனத்தைச் சேர்ந்தது.

அந்த இரண்டு கொக்குகளும், பெரும் கவலையுடன் ஒருநாள் அந்த ஆமையிடம் வந்தன.

"நண்பனே, உனது நிலைமையைப் பார்க்கும்போது எங்களுக்கு மிகவும் கவலையாக இருக்கிறது.

உன்னுடைய கஷ்டத்தைப் பார்த்துக்கொண்டு, எங்களால் சும்மாயிருக்க முடியவில்லை" என்று கூறின.

"என்ன செய்வது, நண்பர்களே? இந்தக் குளம் வற்றியவுடன், குளத்திலிருந்த எல்லா ஜீவராசிகளும் இறந்து விட்டன.

நான் மட்டும்தான் எப்படியோ தப்பியிருக்கிறேன். என்னுடைய வாழ்நாளும் இன்னும் கொஞ்ச நாட்கள்தான்" என்று ஏக்கப் பெருமூச்சுடன் ஆமை பதில் கூறியது.

"நண்பனே, நாங்கள் பறந்து வரும்போது, சற்றுத் தூரத்திலுள்ள ஒரு காட்டிலே ஒரு பெரிய ஏரியைப் பார்த்தோம். அந்த ஏரி நிறையத் தண்ணீர் இருக்கிறது.

ஆனால், அது இங்கிருந்து தூரத்தில் இருக்கிறது. நீ அங்கே வந்தால், வாழ்நாள் முழுவதும், உணவுக்கும் தண்ணீருக்கும் பஞ்சமில்லாமல் மகிழ்ச்சியாக இருக்கலாம்" என்று ஒரு கொக்கு கூறியது.

அப்போது, மற்றைய கொக்குக்கு ஒரு புத்திசாலித்தனமான யோசனை உண்டாகியது.

"எனக்கு ஒரு நல்ல யோசனை வருகிறது, நண்பனே! நாங்கள் இருவரும் ஒரு தடியை எங்கள் வாய்களால் இறுகப் பிடித்துக்கொண்டு பறந்து செல்வோம். நீ அந்தத் தடியை உன் வாயால் இறுக்கமாகக் கவ்விப் பிடித்துக் கொண்டேயிருந்தால், சிறிது நேரத்தில் உன்னை அந்த ஏரியில் இறக்கி விட்டுவிடுவோம்" என்று அந்தப் புத்திசாலிக் கொக்கு கூறியது.

"ஆனால் ஒரு விடயம். நண்பா, நீ நல்லவன். ஆனால் உன்னிடம் உள்ள ஒரே குறை, உனக்கு முன்கோபம் அதிகம். விளைவுகளை யோசித்துப் பார்க்காமல் கடுமையான கோபம் கொள்ளுவது உனக்கு வழக்கம். நாம் செய்யப்போவது மிகவும் ஆபத்தான முயற்சி.

ஆகவே, நாங்கள் தடியைத் தூக்கிக் கொண்டு பறக்கும்போது, நீ எக் காரணம் கொண்டும் வாயைத் திறக்கக் கூடாது, பேசக்கூடாது. உன் வாயால் தடியைக் கவ்விக்கொண்டே இருக்க வேண்டும்" என்று மற்றைய கொக்கு எச்சரிக்கை செய்தது.

"அப்படியே செய்கிறேன், நண்பர்களே" என்று ஆமை சம்மதித்தது.

இரண்டு கொக்குகளும் பறந்து சென்று, சுற்றும் முற்றும் தேடி, மெல்லிய, ஆனால் உறுதியான தடியொன்றைக் கொண்டு வந்தன.

ஆமை அந்தத் தடியின் நடுப்பகுதியில் தன் வாயால் பலமாகக் கவ்விக் கொள்ள,............

கொக்குகள் இரண்டும் அந்தத் தடியின் இரண்டு முனைகளையும் தங்கள் வாயால் பிடித்துக்கொண்டு,............

மேலே, மேலே பறந்தன.

கொக்குகள் வானத்தில் உயரமாகப் பறந்தன. ஆமை தான் சொன்னபடியே, மௌனமாக அந்தத் தடியைக் கவ்விக்கொண்டு தொங்கியது.

இவ்வாறு அவை மூன்றும் பல மலைகளையும், பள்ளத்தாக்குகளையும், கிராமங்களையும், வயல்வெளிகளையும், சமவெளிகளையும், காய்ந்துபோன பல குளங்களையும் கடந்து பறந்தன. அப்போது அவை ஒரு சிறிய நகரத்தின் மேலாகப் பறந்து சென்றன.

அந்த நகரத்து வீதிகளில் சென்ற மக்கள் அந்த அதிசயக் காட்சியைப் பார்த்து வியப்புடன் திகைத்து நின்றனர்.

ஓர் ஆமை வானத்தில் பறக்கும் சம்பவம் அவர்களுக்கு வியப்பாகவும், வேடிக்கையாகவும் இருந்தது.

ஆமை வானத்தில் பறக்கும் செய்தி நகரெங்கும் ஒரே நொடியில் பரவியது. மக்கள் கூட்டம் கூட்டமாகக் கீழே நின்று அந்தக் காட்சியைப் பார்த்து ரசித்தார்கள்.

சிலர் கைதட்டினார்கள், சிலர் உரக்கச் சிரித்தார்கள். மேலும் சிலர், "ஓஹோஹோ, ஆமை பறக்குதுடா" என்று கேலி செய்தார்கள்.

அறியாத மக்களின் வீண் சிரிப்பையும், கேலிப் பேச்சுகளையும் பார்த்து, ஆமைக்குக் கடும் கோபம் வந்தது. என்ன செய்தாலும் கோபத்தை அடக்க முடியவில்லை.

ஆத்திரம் தீர அவர்களை நன்றாகத் திட்ட வேண்டும் என்று நினைத்து, தனது நிலையை ஒரு கணம் மறந்து, "ஏ, மூடப் பயல்களா" என்று திட்டுவதற்காக, ...............

வாயைத் திறந்தது.

அவ்வளவுதான்.

ஆமை பேச நினைத்த வார்த்தைகள் வெளியே வரவில்லை.

அது தன் வாயைத் திறந்த அதே நொடியிலே,.................

தடியைக் கவ்வியிருந்த பிடிப்பு நழுவி..............

கீழே,..............

கீழே,..........


வேகமாக வீழ்ந்தது.

பரிதாபமாக இறந்தது.

தமது நண்பனின் மூடத்தனத்தையும், அதன் விளைவையும் எண்ணி வருந்தியபடியே, கொக்குகள் இரண்டும் பறந்து சென்றன.

ஐந்தறிவு ஜீவன்களிடத்திலும் மனித நேயம் இருக்கின்றது என்பதை இந்தச் சம்பவம் உணர்த்துகிறது. அதேநேரம் மனிதர்களிடம் உள்ள கர்வம் விலங்குகளிடமும் இல்லாமலில்லை.

# உயிர் எங்களுக்கு சாதாரணமப்பா!









சாதாரண ரோட்டில் நாம் பைக்கில் குறுக்கே போகும் போது லேசா எமதர்மன் எட்டிப் பார்ப்பார்! அமெரிக்காவைச் சேர்ந்த கென் பிளாக, எமதர்மன் கூடவே போய் விளையாடிவிட்டு வருகிறார். புரியலையா? கார் ஸ்டன்ட்தான்.

டோநட் செய்வதில் செம எக்ஸ்பெர்ட் - கென் பிளாக். நீங்கள் நினைப்பது போல், இது சாப்பிடும் டோநட் அல்ல இவர் டோநட் செய்வதும் பேக்கரியிலோ அவனிலோ அல்ல. ஒரு 4 வீல் டிரைவ் கார் இருந்தால் போதும்... தரையில் 360 டிகிரியில் சுழன்று அம்சமாக டோநட் மாதிரியே செய்து அசத்தி விடுவார் கென் பிளாக். சாதாரணமா சொன்னா காதலன் படத்தில் பிரபுதேவா, நம்மாவோட உருவத்தை காலாலேயேவரைவார்இல்லையா, அதே டைப்பில் ஒரு 4 வீல் டிரைவ் காரைக் கொண்டு என்ன வேண்டுமானாலும் செய்கிறார் கென் பிளாக்.

நேரான பாதையில் கார் ஓட்டும்போதே யார் மேலயாவது இடிச்சு திட்டு வாங்கிக் கொண்டிருக்கும் நமக்கு எல்லாம், அவர்களுக்கு மத்தியில், 'கரணம் தப்பினால் மரணம்' வகை ஸ்டன்ட்களை எந்த வித பிசகும் இல்லாமல், எந்தனை தடவை வேண்டுமானாலும் செய்து காட்டுவது கென் பிளாக்கின் ஸ்டைல்.

காரின் பின் சக்கரங்களை வெறும் 10 மிமீ கேப்பில் வைத்து ஏரியில் விழாமல் பாலத்தின் விளிம்பில் யு-டர்ன் அடிப்பது, விமானத்துக்குக் கீழேயே போய், மகளை அப்பா ஸ்கூல்ல டிராப் பண்றது மாதிரி ப்ளைட் டேக் ஆஃப் ஆகும் வரைக்கும்கூடவே போவது. இரண்டு பாலங்கள் மூடப் போகும் கடைசி நொடியில் காரைச் செலுத்துவது. ரயில வரும்போது ரயில்வே டிராக்கில் மயிரிழையில் அசால்ட்டாக காற்றில் பறந்து திரும்புவது. இரண்டு சக்கரங்களை வைத்து மெயின் ரோட்டில் போவது, காரில் வீலிங் பண்ணுவது, 'ஆம்பளை' விஷால் மாதிரி ஆகாயத்தில் பறப்பது போன்றவற்றை நிஜத்தில் பண்ணிக் காட்டுகிறார். இப்படி ரிஸ்க் எடுப்பதெல்லாம் கென் பிளாக்குக்கு பிஸ்கோத்து விடயம். 'ஃபாஸ்ட் அண்ட் ஃப்யூரியஸ்' பட யூனிட், கார் ஸ்டன்ட்களுக்கு முதலில் வந்து நின்ற இடம் கென் பிளாக்கின் ஜிம்கானா விளையாட்டு மைதானத்துக்குத்தான்.

பிளாக்கின் என்னும் வெப்சைட்டுக்கு இப்போது 10 மில்லியன் சந்தாதாரர்கள் இருக்கிறார்கள். கென்னின் ஸ்டன்ட்களைக் கேள்விப்பட்டு தினம் தினம் இந்த வெப்சைட்டுக்கு வாடிக்கையாளர்கள் அதிகமாகிக் கொண்டே போகிறார்கள்.

"புரூஸ்லீ ஒரு நாளைக்கு எப்படி 20 மணி நேரம் பயிற்சி எடுத்தாரோ, அது போல் தான் நானும்! ஒரு நாளைக்கு எனக்குத் தூக்கமே 3 முதல் 4 மணிநேரம தான். மிச்ச எல்லா நேரங்களிலும் கார் ஓட்டும் பயிற்சி தான். டயர்கள் எந்த இடத்தில முடியும், பானெட் எங்கே உரசும் போன்றவற்றை எல்லாம் கனகச்சிதமாகப் படிக்க வேண்டும். கார் ஓட்டும்போது கவனத்தை எங்கேயும் சிதறவிடக் கூடாது!" என்று சொல்லும் கென் பிளாக்கின் காயின் ஸ்டன்ட்தான் செம ஹைலைட். அதாவது, ஒரு கோனின் மேலுள்ள நாணயத்தை, சரியாக தனது காரின் பின் டயர்கள் கொண்டு சிதற விட்டதெல்லாம் வியக்க வைக்கிறது.

ஹமாரா ஆங்கிளுக்காக எத்தனை டேக்குகள் வேண்டுமானாலும் முகம் சுளிக்காமல் மறுபடியும் உயிர் பயமில்லாமல் ரீப்பீட் செய்வாராம் கென். ஃபோர்டு ஃபோகஸ், ஃபோர்டு ஃபியஸ்டா, முஸ்டாங் போன்ற கார்களில் தான் பெரும்பான்மையாக இவரது ஸ்டன்ட் அமைந்திருக்கின்றன. ஃபார்முலா-1 கார்களுக்கு இணையாக இருக்கும் இந்த காரின் ஸ்டியரிங் வீல் விலை மட்டும் 8 முதல் 10 இலட்ச ரூபாயாம்!

# உடலோவியம்







உடலை ஓவியமாக வர்ணிப்பது கவிதை. நிஜமாகவே உடலில் ஓவியங்கள் வரைவது உண்மையில் ஒரு தனிக் கலை. முகம் முதல் பாதம் வரை அங்க அவயங்களை கேன்வாஸ்போல பாவித்து வரைவதே இந்த "பொடிஆர்ட்".

உலகப்புகழ் பெற்ற ஜப்பானிய ஓவியரான ஹிகாரு சோ (Hikaru cho), Musashino Art university மாணவி. சயின்ஸ் ஃபிக்ஷன் கதைகளில் வருவதுபோல மேஜிக்கலான காட்சிகளை உடல்களில் கொண்டுவந்துவிடுகிறார். 'சர்ரியலிசம்' எனச் சொல்வார்களே அல்லவா. இவருடைய ஓவியங்களை அந்த வகைக்குள்ளும் அடக்கலாம்.

கடந்த வருடம் ஆம்னஸ்டி இன்டர்நஷனல் அமைப்புக்காக இவர் வரைந்த `My Body My Rights' என்னும் உடலோவிய வரிசை உலகம் முழுக்க உள்ள கலை ஆர்வலர்களின் கவனம் பெற்றவை. அவை, பெண் உடல்களின் மீதான வன்முறைக்கும் அதிகாரத்துக்கும் எதிரான பதிவுகளாக உலகம் எங்கும் பார்க்கப்பட்டன. "உடல் சார்ந்த வன்முறைகளுக்கு எதிரான உரையாடலாக இந்த ஓவியங்கள் இருக்க வேண்டும்" என்கிறார்.



# கவிதைக் கலசம்

## என் அவள்

நான் தோன்றும் முன்னரே
எனக்காக தொழுதவள்!
தொலைந்து விடுவேனோ
எனக்கூட்டத்தில் மார்பில்
அணைத்துக்கொண்டவள்!
தோல்வியைக் கண்டு
நடுங்கையில் வெற்றியின்
முதல் படி என்றவள்!
உறவுகள் வெறுத்தும்
உனக்காக நான் என்று
உள்ளங்கையில் தாங்கியவள்!
தவறுகள் பல செய்தும்
தன்னலமற்று என்னை
மன்னித்தவள்
நான் வெறுக்கும் சில
நொடிகளிலும் என்னை
நேசிக்கும் உள்ளம் கொண்டவள்

சி.சாமந்தி
பளை

## துளிர்த்த காதல்

மறைந்து பார்க்கும்
உன் அழகிய பார்வையும்
பற்ற வைக்கும் தீயைப்போல்
பண்பான உன் பேச்சும்
சட்டென நீ துள்ளி எழுந்து
நடிக்கும் அவ் ஆற்றல்
மறைமுகமாய் செய்தி சொல்லும்
அழகிய உன் உதடுகள்
பார்த்தும் பார்க்காத உன்–கண்கள்
கற்பனையில் வாழ்கிறேன்–பெண்ணே
நிஜத்திலும் வாழத் தோனுதடி
வரமொன்று தருவாயோ
உன் நிழலாய் நான்
வலம் வர

இ.ஜெனோசன்
இளவாலை

## உடையும் தடைகள்

காவிய நாயகன் என்று
கதைகள் பல பேசி
காலத்தை வீணே
கழித்தது போதும்
கோழைகள் வாழ்வு
கொடுமை என்று
வாழையின் வாழ்வு
உனக்குரைத்தது நன்று
உள்ளத்துடிப்போடு
உண்மையைப் பேசி
உலகம் செழிக்க
உழைக்க வா
வீணே நீ கழிக்கும்
விலைபோகாப் பொழுது
நல்ல சேவையில்
நாளும் நீ ஈடுபட்டால்
நீயும் நலம்பெற
ஊரும் வளம் பெறும்
ஊமைகள் வாழ்வும்
உன்னால் மலரும்
உறுதி உனதானால்
உடையும் தடைகள்

க.சிவகுமார்
சுழிபுரம்

## இறைவா நீயும் அவர் பக்கமா?

வீதியில் விடப்பட்ட
நாய்கள்தான் தமிழினம்
விதி தெரியாது
வீதிவழி திரிகிறது
நாதியற்று
. . . . . . . . . . .
ஈரமில்லா இதயத்தார்
எம் இனத்தை
கொன்று குவித்து
அந்தக் குவியலில் நின்று
வெற்றி கொண்டாடினர்
. . . . . . . . . . .
வஞ்சகம் செய்த உலகு
போர்க்குற்ற பத்திரிகையை
தரம் குறைத்து
தமிழரின் நீதியில்
விளையாடியது
. . . . . . . . . . .
வென்றுவிட்டோம் என்பதெல்லாம்
தமிழரைக் கொத்தாய்
கொன்றுவிட்டோம் என்று
விருந்துவைத்தவர்களோ இன்று
வீடுகளில் சுதந்திரமாய்
. . . . . . . . . . .
தந்தையையும் தாயையும்
தங்கையையும் தமயனையும்
இழந்து தவிக்கும் பிஞ்சுகளோ
சிறுவர் இல்லத்தில் கிடந்து
சித்திரவதைப் படுகிறார்
. . . . . . . . . . .
இறைவா!
என்னவென்று சொல்ல இதை
எம்மை நீ வஞ்சிக்க
நாம் என்ன பிழை செய்தோம்
ஓ... நீயும் அவர் பக்கமோ?

மாவை. நா.கஜேந்திரன்



# மௌனத்தின் தேடல்– 323

## முதுமையிலும் சுமை

இயலாத தன் வயதினிலும்
இயலுமெனும் துணிவுடன்
இயல்பிழந்த சிறுமிக்கு
உதவிடவாய்
முதுகினிலே சுமந்திடும்
முதுமையின் துணிச்சலிது

தங்கத்தமிழன்
காரைநகர்

## சுதந்திர சுமைகள்

இரத்தங்கள் ஒன்றிட வேண்டுமையா
இராஜாங்கம் புரிந்திட்ட சிறப்பிதுவே
தீயினில் ஒளிர்ந்திட செய்திடப்பா
சுமையதை வெற்றிகள் ஆக்கிடப்பா
தாவிடும் அலைகள் நாமாக
தவங்கள் புரிந்திடும் வரமாக
தாயின் சுமையை தழுவிடலாக
தர்துணை உரிமை காத்திடவே

சு.சுருத்திகா
யா.வ.ம.க.

## வறுமையிலும் வலிமை உண்டு

காயம்தான் பட்டதுவோ
காய்ச்சல் கூடியதோ
காலிலே ஊனமுண்டாகியதோ
உப்புமூடை ஏறியே
உகந்த பாதுகாப்பு பயணமிது
வயதுதான் போனாலும்
வலிமை ஏதும் குறையவில்லை
வறுமை நிலை காரணத்தால்
வண்டி வழி தேடவில்லை
வைத்தியம் பெறுவதற்கு
வாய்த்த வழி இதுதானே

அணிஞ்சில், புவபாலன்

## முதல்படி முதலிற் படி

அகரம் கற்று
சிகரம் தொட்டு
ஏற்றம் காண
ஏறும் படிகளில்
தலை நரை முடியேனும்
தளரா முயற்சிகளோடு
வாழும் மூதாதையரின்
வாழ்க்கை அனுபவங்கள்
ஏற்றத்தின் முதல்படி
அதையே ஏற்று
நீயும் முதலிற்படி

சி.யர்மலா, பெரியவிளான்

## முந்தி சுமந்த சுமை

முதுமையானாலும்
முதுகுவளையாது–வாலிப
முறுக்கோடு திடமாய்
முந்தி நடக்கும் முதியவரே
முந்தி சுமந்த சுமை
முடிந்து போன கதை
முடிந்த காலம் இங்கு
மீள வருமோ என்று
பசுமை தந்த நினைவு
உடலில் வந்த துடிப்பு
மீண்டும் இங்கு வந்ததோ
அந்த உணர்வின் வேகம்
இந்த சுமையும் பாரமன்று
முதுகில் சுமந்த பிள்ளை
தந்த அன்பின் தொல்லை
பேரன் என்றாலும் நீ
பொறுப்புள்ள பெரியவன்

சி.திவ்வியா, யா.ப.மெ.ம.வி

## சுமை தாங்கி

இளமைக் காலத்தில் உன்
அம்மாவை சுமந்தேன்
இளஞ்சிங்கம் போல் நடை
நடந்து இரதம் காட்டினேன்
உன் அம்மாவை முதுகில் நுற்றி
அம்புலி காட்டி
முழுமதியை இரசித்தேன்
இன்று நான் உன்னைச்
சுமக்கின்றேன்
போரின் கொடுமையால்
பெற்றோரை இழந்தாய்
முதுமைக்காலத்தில் சுமை இல்லை
ஆனால் நான்
உன்னை உயிராக நேசித்து
முதுகில் சுமப்பேன்

பா.கலாதேவி
சண்டிலிப்பாய் மேற்கு

## பாசப்பிணைப்பு

கொடிக்கும் மரத்துக்கும்
காய்கள் சுமையில்லை
மடிதாங்கிப் பெற்ற பிள்ளை
தாய்க்குச் சுமையில்லை
மகள் பெற்ற செல்லக் குழந்தை
மகிழ்ச்சி பொங்கத் தாத்தாவின்
முதுகில் தாவிக்
கழுத்தைப் பிடிக்க
தாத்தா பேர்த்தியை
பாசத்தோடு தாங்கி
விளையாட்டு காட்டுகின்றார்
குடும்பத்தில்
அன்புறவு பொங்கினால்
கெடும் துன்ப துயரமெல்லாம்

துரை
தென்மட்டுவில்

# மௌனத்தின் தேடல் –324



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல.3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 19.10.2016ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -



# உங்களை என்றும் மறவேன்

சிறுகதை

சுதர்மன் இப்போதுதான் தன்னுடைய எதிர்காலத்தை நினைத்து கவலைப்படுகின்றான்.தான் ஒரு குறிக்கோளும் இல்லாமல் அந்தப் பயிற்சி நெறி இந்தப் பயிற்சி நெறி என்று படிக்கத் தொடங்கி ஒன்றையும் முடிக்காமல் இப்போது வேலையில்லாமல் இருப்பதையிட்டு கவலைப்படுகின்றான். அவனுடைய நெருங்கிய நண்பர்கள் வேலை செய்வதற்காக வெளி ஊர்களுக்கும் வெளிநாடுகளுக்கும் சென்றுவிட்டார்கள்.இந்தப் பூமியிலே தான் தனித்து விடப்பட்டவன் போல உணருகின்றான்.

சுதர்மனின் தந்தை சீனிவாசகத்துக்கு படிப்பைப் பற்றி எதுவும் தெரியாது. அவன் கேட்கும் போதெல்லாம் பணத்தை கொடுப்பார் அவர் பிள்ளைகள் மீது அதிகளவு பாசம் கொண்டவர். அவர் விவசாயம் செய்பவர்.மற்றவர்களோடு சேர்ந்து பழகவும் உதவி செய்வதிலும் விருப்பம் கொண்டவர்.அதனால் அவரிலே மற்றவர்களுக்கு விருப்பம்.

சுதர்மனிடம் எந்த தீய பழக்கமும் இல்லை.கடவுள் நம்பிக்கை அதிகம். இப்போது அவனுக்கு மன ஆறுதல் அளிக்கும் இடமாக அவனுடைய ஊர்க்கோயில் இருக்கிறது.மாலை ஐந்து மணியளவில் நடந்து கோயிலுக்குச் செல்வான். வெகு நேரம் அங்கே இருந்துவிட்டு வீடு திரும்புவான்.அந்தக் கோயில் மண்டபத்தில் பூசை முடிந்த பிற்பாடும் சிலர் இருந்து கதைத்துக் கொண்டிருப்பார்கள்.அவனும் ஒரு தூணோடு சாய்ந்த வண்ணம் அந்த மண்டபத்தில் உள்ள சுவாமிகளின் சிற்பங்களை மாறிமாறி பார்த்தவண்ணம் இருப்பான்.இப்போது அவர்கள் தான் அவனுடைய நண்பர்களாக மாறிவிட்டார்கள்.

ஒரு வயதுபோன பெரியவர். நரைத்த தலை மயிரும் நீண்ட தாடியும் கொண்டவர். நெற்றியில் விபூதி பளிச்சிடும் கனிவான முகம். தெய்வீக ஒளி வீசும் கண்கள், அவர் அந்த மண்டபத்தில் தனிமையில் இருப்பார். ஒருநாள் அவர் சுதர்மனை கைகாட்டி அழைத்தார். அவனும் எழுந்துபோய் அவருக்கு முன்னால் சப்பாணி கட்டி அமர்ந்தான். தம்பி சில நாட்களாக உன்னை கவனித்துப் பார்க்கிறேன். எவரோடும் பேசாமல் உட்கார்ந்து இருந்துவிட்டு போகிறீர். படிக்கிறீரா அல்லது வேலை செய்கிறீரா?

சுதர்மன் தன்னுடைய கதையை எடுத்துக் கூறினான்.அவரும் அவனுடைய பேச்சில் குறுக்கிடாமல் புன்முறுவலுடன் கேட்டுக்கொண்டிருந்தார். அவன் சொல்லி முடிந்ததும் அவர் தம்பி நான் ஒரு ஓய்வு பெற்ற அதிபர் அடுத்த ஊரிலே வசிப்பவர்.நான் இரண்டு பாடசாலைகளில் அதிபராக இருந்திருக்கிறேன். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பிரார்த்தனை முடிய நற்சிந்தனை வழங்குவேன். அதை ஒரு தெய்வீகப் பணியாக செய்து வந்தேன். காரணம் சின்னஞ்சிறிசுகள் கள்ளம் கபடம் அற்றவை. அவர்களுடைய மனதிலே நல்ல எண்ணங்களை விதைக்கும் இடம் பாடசாலை ஒன்றுதான். அவர்களை நல்வழிப்படுத்தாவிட்டால் அவர்களுக்குச் செய்யும் மாபெரும் துரோகம் அதுவாகும்.

இதை நான் ஏன் கூறினேன் என்றால் உமக்கும் மன ஆறுதல் அளிக்க வேண்டி ஏதாவது சொல்ல வேணும் போலிருக்கிறது.

கடந்த காலம் கடந்ததுதான். நாம் அறியாத் தனத்தால் கடந்த காலங்களில் பல தவறுகளை விட்டிருக்கிறோம். அவைகளிலிருந்து பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டுமே தவிர அவைகளை எண்ணி எண்ணிக் கவலைப்படுவதால் எந்தப் பிரயோசனமும் இல்லை. இப்போது நீர் என்ன தொழில் செய்யக் கூடியதாக இருக்கிறது என்று நினைத்துப்பாரும் ஏதோ பிறந்து விட்டோம் இருக்கும் வரை வாழத்தானே வேண்டும். கடவுளை நம்பும் உமக்கு அவர் நிச்சயம் உதவி செய்வார்.சரி நான் வரப்போறன். அவர் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்தார். சுதர்மனும் வீடு போவதற்காக எழுந்தான்.

சுதர்மன் வீட்டுக்கு வந்த போது பக்கத்து வீட்டு சிவராசா அங்கே இருந்தார். தம்பி உன்னைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்றாள் தாய்.சுதர்மன் முன்னால் கதிரையை போட்டுவிட்டு உட்கார்ந்தான். தம்பி என்னுடைய நண்பர் ஒருவர் கிளிநொச்சியில் ஒரு அரிசி மிளகாய் அரைக்கும் ஆலை ஒன்று வைத்திருக்கிறார். வருமானம் பரவாயில்லை. இவ்வளவு காலமும் அதற்கு பொறுப்பாக இருந்தவர் வெளிநாட்டுக்குப் போகிறாராம். ஒரு நம்பிக்கையான ஆளை பிடித்து தரும்படி நண்பர் என்னைக் கேட்டார். உம்மை எனக்குத் தெரியும். உமக்கு விருப்பம் என்றால் சொல்லும் யோசித்துப் போட்டு நாளைக்கு முடிவைச் சொல்லும் சிவராசா எழுந்து வீட்டுக்குச் சென்றார்.

சுதர்மன் பலவாறு சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தான். அவன் தன்னுடைய சம்மதத்தை அடுத்த நாள் காலை சிவராசாவினுடைய வீட்டுக்குச்சென்று தெரிவித்தான். தான் தன்னுயை நண்பருடன் கதைத்துவிட்டு வந்து இரவு முடிவு சொல்வதாக சிவராசா அவனிடம் தெரிவித்தார்.

அன்று இரவு சிவராசா சுதர்மனுடைய வீட்டுக்கு வந்திருந்தார்.தன்னுடைய நண்பர் சம்மதம் தெரிவித்து விட்டார் என்றும் திங்கட்கிழமை வேலையை பொறுப்பேற்க வேண்டும் என்றும் கூறினார்.அவர் ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு உங்களுடைய வீட்டுக்கு வந்து உம்மை கூட்டிக்கொண்டு போவார். நீர் தங்கியிருப்பதற்கேற்ற ஒழுங்குகளை அவர் செய்து தருவார். சரிதானே! என்று சிவராசா கேட்டார். அவனும் சரியென்று கூறிவிட்டு வீட்டுக்கு வந்தான்.

அன்று மாலைநேரம் சுதர்மன் அந்தப் பெரியவரை கோயிலில் சந்தித்தான்.தனக்கு வேலை கிடைத்த விடயத்தை அவரிடம் கூறினான். அவர் புன்னகைத்தவாறு கூறினார். தம்பி கடவுள் எந்த நேரம் எப்படிச் செய்வார் என்று எவருக்கும் தெரியாது. ஆங்கிலத்தில் ஒரு பழமொழி இருக்கிறது. கடவுள் ஒவ்வொரு குருவிக்கும் உணவு அளிக்கிறார். ஆனால் கூட்டுக்குள்ளே கொண்டுபோய் போடுவதில்லை என்று. இப்படித்தான் கடவுள் ஒவ்வொருவருக்கும் ஏதோ விதத்தில் உதவி செய்துகொண்டுதான் இருக்கிறார்.

ஒரு முக்கியமான விடயத்தை உமக்கு சொல்ல வேணும். எந்தச் சந்தர்ப்பத்திலுமெ உன்னை நம்பினவருக்கு துரோகம் செய்யாதே. நேர்மை உன்னை எந்தநேரத்திலும் பாதுகாக்கும். உன் குடும்பத்தை உயர்த்தும். மனநிம்மதியை வழங்கும்.இதை எப்போதும் மனதில் வைத்துக்கொள்.சரி என்னுடைய ஆசீர்வாதமும் உன்னோடு இருக்கும்.

சுதர்மனுக்கு அந்த இடம் பிடித்துக்கொண்டது.எங்கே பார்த்தாலும் உயர்ந்த மரங்கள் தோப்பாக நிற்கின்றன. அமைதியான சூழல், ஆடம்பரமற்ற மக்களின் வாழ்க்கை முறை பசுக்கள் கூட்டம் கூட்டமாகச் செல்வதும் பறவைகளின் கீதங்களும் அவனுடைய மனதுக்கு ஆறுதலை வழங்கின.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. நாளுக்கு நாள் முதலாளிக்கும் சுதர்மனுக்கும் இடையே இருந்த உறவு பலமடைந்து வந்தது. அவன் அங்கே வேலைக்கு வந்த பிற்பாடு அந்த ஆலையின் வருமானமும் அதிகரிக்கத் தொடங்கியது.

கணக்குகளில் எந்தக் குளறுபடியும் இல்லாமல் இருக்கிறது. மூன்று மாதங்கள் சுதர்மன் தன்னுடைய வீட்டுக்குச் செல்லவில்லை. அவன் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஊருக்குச் செல்ல ஆயத்தமானான். அவன் புறப்படும் போது தன்னுடைய அன்பளிப்பு என்று கூறி முதலாளி அவனிடம் ஒரு தபால் உறையை நீட்டினார்.

ஒரு நல்ல செய்தியையும் கூறினார்.அடுத்த மாதத்திலிருந்து என்னுடைய பல சரக்கு கடைக்கு உம்மை மனேஜராக போடப்போறன்.

சுதர்மன் வீட்டுக்கு வரும் போது தன்னுடைய பெற்றோர்கள்,சகோதரங்களுக்கு உடுப்புக்கள் வாங்கி வந்தான். அன்று மாலைநேரம் அந்தப் பெரியவரிடம் கொடுப்பதற்காக தான் வாங்கி வந்த அப்பிள், தோடம்பழங்களை ஒரு பையில் போட்டு அந்தக் கோயிலுக்குச் சென்றான். அங்கே அந்தப் பெரியவரைக் காணவில்லை.அங்கே இருந்தவர்களிடம் விசாரித்தான். அவர் இறந்து விட்டார். போன புதன்கிழமை தான் அவருடைய வீட்டுக்கிருத்திய நிகழ்வு நடந்தது பதில் வந்தது.

சுதர்மனுக்கு இரத்த மெல்லாம் உறைவது போலிருந்தது. அந்தப் பெரியவர் உட்காரும் இடத்துக்கு முன்னாலிருந்த தூணோடு சாய்ந்த வண்ணம் அந்தப் பெரியவரைப் பற்றிய நினைவுகளை ஓடவிட்டான்.நான் உண்மையாக அந்தப் பெரியவரிடம் அன்பு வைத்திருந்தால் அந்தப் பெரியவரின் அறிவுரைகளை மதித்து நடக்க வேண்டும் என்ற உறுதியான எண்ணத்துடன் வீடு செல்வதற்காக எழுந்தான்.

க.தர்மலிங்கம்
48, புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்

# நல்லாட்சி இனி நகருமா

# தமிழருக்கு நீதி கிடைக்கு

நல்லாட்சிக்குள் தற்போது பாரிய முரண்பாடு ஏற்பட்டுள்ளமை பட்டவர்த்தனமாகியுள்ளது.

கொலை, ஊழல், மோசடி போன்ற பாரிய குற்றச்சாட்டுக்களைச் சுமக்கும் தரப்பை ஆட்சியாளர்கள் பாதுகாக்க முற்பட்டதே இந்த முரண்பாட்டுக்கு



முக்கிய காரணமாக மாறியுள்ளது.

ஆட்சி அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னரும் ஆட்சிக்கு வந்த பின்னர் அதைத் தக்க வைக்கும் சூழ்நிலை உருவாக்கப்படுவதற்கு முன்னரும் சரியென்று தோன்றிய ஒரு முக்கிய விடயம் தற்போது பிழையாகப் பார்க்கப்படுகிறது.

ஒரு குடும்பம் நாட்டின் ஒட்டுமொத்த வளத்தையும் சுரண்டியது. பாரிய ஊழல் மோசடியில் ஈடுபட்டது என்றெல்லாம் குற்றச்சாட்டுக்களை அடுக்கிய தரப்பே சட்ட நடவடிக்கைக்கு தடை போடும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை, நல்லாட்சி அரசாங்கத்தைக் கவிழ்க்க முடியாது. இந்த ஆட்சி 2020 வரை நீடிக்கும் என்று மிகுந்த நம்பிக்கையோடு கருத்துரைத்தவர்கள் எல்லாம் கதிகலங்கும் வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அண்மைய கருத்துக்கள் அமைந்துள்ளன.

ஊழல், மோசடி அரசியல்வாதிகளை அகற்றி நீண்டு நிலைத்திருக்கக்கூடிய சமாதானச் சூழ்நிலையுடன் கூடிய ஆட்சியை ஏற்படுத்தப் போகின்றோம் என்று கூட்டணியமைத்து நல்லாட்சி என்று கூறும் இந்த அரசை உருவாக்கியவர்கள் நம்பிக்கையீனத்தை மட்டுமே சுமக்கும் நிலைக்கு ஜனாதிபதியின் அண்மைய கருத்துக்கள் இழுத்துச் சென்றுள்ளன.

குற்றச்சாட்டுக்குள்ளான படையினர் மீது ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ள பரிவு நல்லாட்சியை கேள்விக்குட்படுத்தியுள்ளது.

படையினராகயிருந்தாலும் பதவியிலுள்ளவர்களாக இருந்தாலும் நல்லாட்சியில் எல்லோருக்கும் ஒரே நீதி. குற்றம் செய்தால் தண்டனை நிச்சயம் என்ற சூழல் துளிர்விட்டு நம்பிக்கை ஒளி ஏற்றப்பட்ட வேளையில் ஜனாதிபதியின் கருத்துக்கள் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் மீது முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணை நடவடிக்கைகளை நீர்த்துப்போக வைக்கும் நோக்கோடு படையதிகாரிகள் மீது வைத்த பாசம் ஜனாதிபதியை இவ்வாறு பேச வைத்திருக்கலாம்.

அதேவேளை இறுதிப் போர் இடம்பெற்ற காலப்பகுதியில் படையினருடன் நெருங்கிய தொடர்புடைய அமைச்சராகப் பணிபுரிந்தாலும் ஜனாதிபதிக்கு அக்கறை அதிகரித்திருக்கக் கூடும்.

ஜனாதிபதி மைத்திரி தான் காப்பாற்ற முற்பட்டுள்ள படையதிகாரிகளால் - ஊழல் அரசியல் வாதிகளால் மிகுந்த சிரமங்களுக்கும் பாதிப்புக்கும் உள்ளாக மக்களை சினமடைய வைத்துள்ளார் என்பதை உணர்தல் அவசியம்.

பிரகீத் எக்னெலிகொட, லசந்த விக்கிரமதுங்க போன்றோரின் கடத்தல்- கொலைக் குற்றச்சாட்டு, அவன்காா்ட் ஆயுதக் கப்பல் மோசடி உள்ளிட்ட பல்வேறு பாரிய குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்களைப் பாதுகாக்க ஜனாதிபதி ஏன் முற்பட வேண்டும் என்ற கேள்வி மக்கள் மத்தியில் சந்தேகத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சி.ஐ.டி. எப்.சி.ஐ.டி. மற்றும் இலஞ்ச ஊழல்கள் எதிர் ஆணைக்குழு ஆகியவை தொடர்பில் வெளியிட்ட கருத்துக்களை சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் வன்மையாக கண்டித்துள்ளனர்.

நீதிக்கான இயக்கம் மற்றும் பிரஜைகள் முன்னணி, காணாமற்போனவர்களை கண்டறியும் குழு, கபே உள்ளிட்ட அமைப்புக்கள் ஜனாதிபதியின் கருத்துக்களை வெளிப்படையாகவே கண்டித்துள்ளன.

ஜனாதிபதியின் கருத்துக்கள் சுயாதீன விசாரணைகளில் தலையீடு செய்வதாக அமைந்துள்ளன என்றும் அந்த அமைப்புக்கள் குற்றம்சாட்டியுள்ளன.

ஊழல், மோசடி குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இடம்பெறும் விசாரணைகள் குறித்து ஜனாதிபதிக்கோ பிரதமருக்கோ அறிவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவ்வாறு அறிவித்தால் அது அரசியல் தலையீட்டுக்கு வழிவகுக்கும் என்று சுட்டிக்காட்டிய சிவில் அமைப்புக்கள் அவன்காா்ட் ஆயுதக்கப்பல் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய மற்றும் முன்னாள் முப்படைத் தளபதிகள் ஆகியோர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் முறைப்பாட்டின் பேரில் நீதிமன்றத்தினால் அழைக்கப் பட்டமையானது என்ன நடந்தது என்று அறிந்து கொள்வதற்கே எனவும் சுட்டிக்காட்டியுள்ளன.

இதில் ஜனாதிபதி தலையீடு செய்தமையானது குறித்த சுயாதீன ஆணைக்குழுவின் எதிர்கால செயற்பாட்டை பாதிக்கும் என்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எடுத்துரைத்துள்ளனர்.

இது ஒருபுறம் இருக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு இடையில் அரசியல் ரீதியான திருமணமானது பலமான ஒன்று என அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

குறித்த இருவரையும் விவாகரத்துக்கு அழைத்துச்செல்ல கூட்டு எதிர்க்கட்சி முயற்சிப்பதாக குறிப்பிட்டுள்ள அவர் அது ஒரு பகல் கனவாகும் எனவும் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கிடையில் குழப்பத்தை ஏற்படுத்த கூட்டு எதிர்க்கட்சி முயற்சிக்கின்றது.

மேலும் இருவரையும் பிரித்து இருவருக்கிடையில் கருத்து முரண்பாட்டைத் தோற்றுவித்து விரிசலை ஏற்படுத்தி நல்லாட்சி அரசாங்கத்தைக் குழப்புவதற்கு முடியும் என அவர்கள் கனவு காண்கின்றனர்.இது கூட்டு எதிர்க் கட்சியினரின் பகல் கனவாகும். எவ்வாறாயினும் அவர்களின் திட்டம் ஒரு போதும் நிறைவேறாது என்று கூட்டு எதிர்க்கட்சி தான் இக்குழப்பத்துக்கு முழுக்காரணம் என்றால் போல் சஜித் கூறியுள்ளார்.

ஒருவேளை அமைச்சர் சஜித் கூறுவதைப்போன்று ஜனாதிபதியை இவ்வாறு பேசுமாறு கூட்டு எதிர்க்கட்சி தூண்டிவிட்டிருக்க வாய்ப்புள்ளது.

எதுவாயினும் நல்லாட்சிக்குள் கருத்து முரண்பாடுகள் உள்ளதை சஜித் ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதை அவருடைய கருத்துக்கள் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார்.

எழுக தமிழ் எழுச்சிப் பேரணியின் பின்னராக காலப்பகுதியில் தென்னிலங்கையில் அரசியல் ஆர்ப்பாட்டங்கள், பொதுக் கூட்டங்கள், தென்னிலங்கை சிங்களப் பேரினவாதிகளின் கண்டனங்கள் , வடக்கு மாகாண முதலமைச்சரை சிறையில் அடைக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் எல்லாம் விடப்பட்டன.

அதேவேளை மகிந்த ஆட்சிக் காலத்தில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட அரசியல்வாதிகளுக்கு எதிரான வழக்கு விசாரணைகள், கைது நடவடிக்கைகள் இரகசியச் சந்திப்புக்கள், புதிய அரசியல் கட்சி என ஏராளமான விடயங்களுடன் கொழும்பு அரசியலில் பரபரப்பாக காணப்பட்ட சூழ்நிலையில் ஜனாதிபதி- பிரதமர் ஆகியோருக்கு இடையிலான பனிப்போரும் கொழும்பு அரசியலை இன்னும் பரபரப்பாக்கியுள்ளது.

ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு இடையில் கருத்து முரண்பாடு காணப்படுவதாக கொழும்பு அரசியலில் பேசப்பட்டு வந்த நிலையில் ஜனாதிபதி அண்மையில் வெளியிட்டிருந்த கருத்துக்கள் அதனை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.

கடந்த ஆண்டு இடம்பெற்ற பொதுத் தே
போதும் ஜனாதிபதி தேர்தலின் போதும் மகிந்
பக்ஷ ஆட்சியில் இடம்பெற்றதாக கூறப்படும்
மோசடிகள் கண்டுபிடிக்கப்படும் என தற்பே
ஆட்சியாளர்கள் வாக்குறுதி வழங்கியிருந்த

இவ்வாறான நிலையில் தேர்தலில்
பெற்ற பின்னர் புலனாய்வுப் பிரிவு, நிதி
விசாரணைப் பிரிவு, இலஞ்ச ஊழல் மோசடி
பிரிவு உள்ளிட்ட சுயாதீன ஆணைக்
ஏற்படுத்தி கடந்த அரசாங்கத்தில் இ
மோசடிகள் குறித்து விசாரிக்கப்பட்டு வந்தன.

இந்த விசாரணை நடவடிக்கைகளின் போ
ந்த அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் கைது
பட்டதுடன் சிலருக்கு எதிராக நீதிமன்றத்தில்
கும் தாக்கல் செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்

முன்னாள் அமைச்சர்களான பசில் ராஜ
மகிந்தானந்த அலுத்கமகே மற்றும் நாடாளு
உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, முன்னாள் பா
புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, கட
வீரர் யோஷித ராஜபக்ஷ உள்ளிட்ட பிரப
சிறை சென்று பிணையில் வெளிவந்துள்ள

இவர்கள் எல்லாம் கைது செய்யப்படுவா
இவர்களை சட்டம் நெருங்குமா? என்று எ
கொண்டிருக்கையில் தென்னிலங்கையில்
மாற்றங்கள் இடம்பெற்றிருந்தன.

இந்நிலையில் மகிந்த ஆட்சிக்காலத்தில்
பதவிகளில் இருந்தவர்கள் மீது சுயாதீன
ணைக்குழுக்கள் அரசியல் நிகழ்



படையில் செயற்படுவதாக சந்தேகம் வெ
டுள்ள ஜனாதிபதி இவ்வாறு இடம்பெற்றால்
ஆணைக்குழுக்களுக்கு எதிராக நடவடிக்கை
கப்படும் என்று எச்சரித்துள்ளார்.

அதேவேளை பிரதமருடன் இணைந்து
மற்றும் ஒழுங்கு அமைச்சு அரசியல் பழிவா
நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதா? எ
ஏற்படுத்தும் வகையில் ஜனாதிபதி
யினை நிகழ்த்தியிருந்தார்.

இவ்வாறு ஜனாதிபதி கருத்து வெளியி
தொடர்ந்து ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கும்
யில் பனிப்போர் மற்றும் அதிகாரப் போட்டி
தற்போது வெளிப்படையாகியுள்ளன.

இந்த விடயம் இருவருக்கும் இடையி
பனிப்போரை மட்டும் எடுத்துக்காட்டவில்லை.
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு காத்திரு

# ?

# குமா?

் தேர்தலின்
மகிந்த ராஜ
படும் ஊழல்
தற்போதைய
ருந்தனர்.
பில் வெற்றி
நிதி மோசடி
ாசடி தவிர்ப்பு
[redacted] ரிய
ந்தன.
ன் போது கட
கைது செய்யப்
த்தில் வழக்
வருகின்றன.
ல் ராஜபக்ஷ.
நாடாளுமன்ற
ள் பாதுகாப்
ஷ, கடற்படை
பிரபலங்கள்
துள்ளனர்.
படுவார்களா?
து எண்ணிக்
கையில் பல

த்தில் முக்கிய
ாதீன விசார
[redacted] ப்



வெளியிட்
ற்றால் அந்த
க்கை எடுக்

ந்து சட்டம்
பழிவாங்கல்
[redacted] தை
உரை

ளியிட்டதை
க்கும் இடை
ட்டி என்பன

டையில்லான
லை. மாறாக
த்திருக்கும்



பேராபத்தையும் சேர்த்தே எடுத்துக் காட்டியுள்ளது.

பிரதமருக்கே ஆபத்தாக மாறக்கூடிய இந்த நிலையில் அரசியல் தீர்வை எதிர்பார்த்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கனவும் கானல் நீராகிப்போகலாம் என அரசியல் அவதானிகள் கூறியுள்ளனர்.

எந்தவித நிபந்தனைகளும் இன்றி ஜனாதிபதித் தேர்தலின் போது ஐ.தே.க. தலைமையிலான கூட்டணியின் பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவை நிறுத்தியபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளித்திருந்தது.

அதேவேளை மகிந்த ராஜபக்ஷ நிறைவேற்று ஜனாதிபதியாக மூன்றாவது முறையும் ஆட்சி அதிகாரத்தில் அமரும் ஆசையில் மண் அள்ளிப்போடும் வகையில் தமிழ் மக்கள் வாக்களித்து மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கி நல்லாட்சியின் பங்காளர்களாக மாறினர்.

ஆனால், இதையெல்லாம் ஒரு பொருட்டாக கருதாத ஜனாதிபதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்தும் முயற்சியிலும் ஊழல்,மோசடிக் குற்றம் சாட்டப்பட்டவர்களைப் பாதுகாக்கும் முயற்சியிலும் தீவிரம் காட்டுகின்றார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியின் கருத்து தனக்கு ஆச்சரியமளிக்கிறது என்று கூறுகிறார். முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதிக்கும் ராஜபக்ஷக்களுக்குமிடையில் இரகசிய ஒப்பந்தம் எதுவுமில்லை என்கிறார்.

மேலும் ஊழல், மோசடி விசாரணைகளுக்கும் பிரதமருக்கும் எதிரான வகையில் ஜனாதிபதி வெளியிட்டிருந்த கருத்துக்களுக்கு கூட்டு எதிர்க்கட்சியினர் ஆதரவு தெரிவித்திருந்த நிலையில் ஜனாதிபதிக்கு பக்க துணையாக இருக்க போவதாகவும் கூறியுள்ளனர்.

மகிந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் சட்ட விரோத ஆயுத வியாபாரம் தொடர்பாக கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் விசாரிக்கப்பட்ட நிலையில் கடந்த வாரம் நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கோத்தபாய நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டமையை சுட்டிக்காட்டியே ஜனாதிபதி கருத்து வெளியிட்டிருந்தார். இந் நிலையில் புலிகளை தோற்கடித்த தமக்கு கிடைத்த பரிசு என இந்த விடயத்தினை கோத்தபாய கூறியிருந்தார்.

இது இவ்வாறிருக்கையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைச்சராக இருப்பதற்கு சுதந்திரக் கட்சியினர் விருப்பம் கொண்டிருக்கவில்லை என அண்மைய நாட்களாக கொழும்பு அரசியலில் பேசப்பட்டு வந்தன.

இதன் காரணமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஓரம்





கட்டிவிட்டு மைத்திரி தலைமையில் ஆட்சி அமைக்கலாம் என ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 2002ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க செய்ததைப் போன்று தனது அதிகாரத்தை கொண்டு ரணில் தலைமையிலான அரசாங்கத்தை வீழ்த்தி தேர்தலுக்கான நிலையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உருவாக்க விரும்பியிருக்கலாம் எனவும் அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அவ்வாறான ஒரு நிலை ஏற்படும் பட்சத்தில் பிரதமர் ரணிலுடன் இணக்க அரசியலில் ஈடுபட்டு வரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு 2016ஆம் ஆண்டின் இறுதியில் அரசியல் தீர்வு என கண்டிருக்கும் கனவு கானல் நீராகிப் போய்விடும் என்பது மட்டும் நிச்சயம். இதையெல்லாம் தீர்க்க தரிசனமாகக்கொண்டு தான் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், 2016 ஆம் ஆண்டுக்குள் தீர்வு கிடைக்கும் என்பது எனது கணிப்பு மட்டுமே என்று கூறினாரோ தெரியவில்லை.

ஆனாலும ஜனாதிபதியின் நிலைப்பாட்டுக்கு எதிரான போக்கையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டுள்ளது என்பதை அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் வெளிப்படுத்தியுள்ளார்.

சட்டம் எல்லோருக்கும் பொதுவானது. இராணுவத்தினருக்கு ஒரு சட்டம் பொதுமக்களுக்கு ஒரு சட்டம் என்று இருக்க முடியாது.

16 மாதங்கள் இராணுவப் புலனாய்வாளர்கள் சிறைவைக்கப்பட்டிருக்கின்றனர் எனக்கூறும் ஜனாதிபதி 16 வருடங்களுக்கு மேலாக தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் வாடுவதை பற்றி ஏன் சிந்திக்கவில்லை என்று அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

மைத்திரி - ரணில் இணைத் தலைமையில் இலங்கையில் நல்லாட்சி எனக்கூறப்படும் இந்த ஆட்சி ஏற்படுத்தப்பட்ட நாளிலிருந்து இதுவரை காலமும் அமைதியான முறையிலேயே அரசாங்க நடவடிக்கைகள் நகர்ந்து சென்றன.

ஆனால் ஜனாதிபதி மைத்திரி அண்மையில் வெளியிட்ட கருத்துக்கள் அரசாங்கத்திற்குள் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. அதேவேளை இனி அமைதியான முறையில் ஆட்சி தொடர வாய்ப்பில்லை என்பதையும் இது வெளிப்படுத்தியுள்ளது.

தேசிய பத்திரிகை ஒன்றின் ஊடகவியலாளர் மற்றும் ஜனாதிபதி இணைப்புச் செயலாளர் ஒருவர் வழங்கிய தகவல்களே நிதி மோசடி விசாரணைப் பிரிவு, குற்றப் புலனாய்வு பிரிவு மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு ஆகிய ஆணைக்குழுக்களின் செயற்பாடு குறித்து ஜனாதிபதி கடுமையாக விமர்சிக்க மூலகாரணம் என்றும் கூறப்படுகிறது.

அதேவேளை ஜனாதிபதிக்கு எதிராகவும் சுதந்திரக்கட்சிக்கு எதிராகவும் ரணில் தலைமையிலான ஐ.தே.க. செயற்படுகிறது என புலனாய்வுப் பிரிவினர் அறிக்கையளித்துள்ளதாகவும் இந்த அறிக்கையின் பிரகாரமே ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுக்களுக்கு எதிராக கருத்துரைத்ததாகவும் நம்பப்படுகிறது.

கொழும்பிலுள்ள இரவு நேர களியாட்ட விடுதியில் அண்மையில் நடைபெற்ற தாக்குதல் சம்பவத்துடன் ஜனாதிபதியின் மகனுக்கு தொடர்பு உள்ளதாக பல்வேறு ஊடகங்களில் தகவல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

அந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக பிரதமர் ரணிலிடம் முழுமையான அறிக்கையளிக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்ட நிலையில் குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியும் உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கு எதிரான இவ்வாறான நடவடிக்கையின் பின்னணியில் ஐக்கிய தேசிய கட்சி தொடர்புபட்டுள்ளதாக ஜனாதிபதியுடன் தாய்லாந்து விஜயம் மேற்கொண்டிருந்த குறித்த ஊடகவியலாளர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி தாய்லாந்து விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதும் அவரின் இணைப்புச் செயலாளரும் இந்த விடயத்தை ஜனாதிபதியிடம் உறுதி செய்துள்ளார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி வழங்கிய உத்தரவினை ஏற்று பொலிஸார் செயற்படவில்லை எனவும் பிரதமரின் தலையீடே அதற்குக் காரணம் எனவும் தெரிவித்துள்ள னர்.

அதேவேளை ஆணைக் குழுக்களுக்கு எதிராக ஜனாதிபதி கடுமையான உரையாற்றுவதற்கு முன்னரே அவரால் என்ன விடயங்கள் பேசப்படவுள்ளன என்பது தொடர்பில் குறித்த ஊடகவியலாளரும் இணைப்புச் செயலாளரும் தமது நட்பு வட்டாரங்களுக்கு தெரிவித்துள்ளனர் என்றும் ஒரு கதையடிபடுகின்றது.

ஜனாதிபதி - பிரமருக்கு இடையில் முரண்பாடான நிலை தோற்றுவித்த போதும் அவர்கள் இருவருக்கும் இடையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற நீண்ட நேர பேச்சுவார்த்தையின் மூலம் சுமுகநிலை எட்டப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

இருப்பினும் அந்த சுமுக நிலை எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது பெரும் கேள்விக் குறியாகவே மாறியுள்ளது. அது மட்டுமன்றி ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்களுக்கு இலக்காகியுள்ளவர்களே சிறை செல்வதை விரும்பாத ஜனாதிபதி மைத்திரி தலைமையிலான நல்லாட்சி என்று சொல்லப்படும் இந்த ஆட்சியாளர்களிடமிருந்து தமிழர்கள் நீதியைப் பெற்று விட முடியுமா?

தமிழினத்துக்கு எதிராக போரில் இழைக்கப்பட்ட கொடூரங்கள், போர்க்குற்றங்கள், மனிதவுரிமை மீறல்கள் குறித்து சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும்.

உள்நாட்டு விசாரணை ஊடாக போர்க்குற்றங்கள் மற்றும் தமிழினத்துக்கெதிரான அநீதிகளுக்கு நீதி கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஊழல்,மோசடி விசாரணைகளுக்கு முட்டுக்கட்டை போடும் ஜனாதிபதி போர்க்குற்ற விசாரணைக்கு உடன்படுவாரா? அவ்வாறு விசாரணை முன்னெடுக்கப்பட்டாலும் சர்வதேச விசாரணைக்கு ஒருபோதும் வாய்ப்பளிக்க முற்படமாட்டார்கள். சர்வதேச விசாரணைக்கு சந்தர்ப்பம் கிடைக்காத பட்சத்தில் தமிழருக்கு நீதிகிடைக்க வாய்ப்பேயில்லை.

மகிந்த ஆணைக்குழுக்களை அமைத்து காலத்தை இழுத்தடித்தது போன்று மைத்திரி ஆணைக்குழுக்களின் விசா ரணைகளுக்கு தடையாகயிருந்து குற்றவாளிகளைக் காப்பாற்ற முற்படுவார். தமிழ்த் தலைமைகளோ நல்லாட்சி அரசும் நம்பவைத்துஎங்களை ஏமாற்றி விட்டதுஎன்று கவலை வெளியிட்டு அடுத்த தேர்தலுக்கு தயாராகுவார்கள்.

காணாமற்போனவர்களின் உறவினர்களும் தமிழ் . அரசியல் கைதிகளின் பெற்றோரும் கண்ணீருடன் காலத்தைப் போக்குவார்கள். போர்க் குற்றங்களுக்கு இலக்கான தமிழினம் நீதிக்காகவும் நிரந்தரத் தீர்வுக்காகவும் ஏக்கத்துடன் காத்திருக்கும் நிலைநீடிக்கும்.

**எஸ்.ஆர்.கரன்**

# தெரிந்த மனிதர்கள் தெரியாத தகவல்கள்...!


சார்லஸ் டிக்கன்ஸ்

சேக்ஸ்பியருக்கு 18 வயதிலேயே திருமணம் முடிந்து விட்டது.எட்டுவயது வித்தியாசத்தில் ஆனி ஹேதன் என்னும் 26 வயதுப் பெண்ணை அவர் திருமணம் செய்து கொண்டார்.

சார்லஸ் டிக்கன்ஸ் எழுதிய நூல்களை மக்கள் மத்தியில் அவரே படித்து நடித்துக் காட்டுவாராம்.

கார்ள் மார்க்ஸ் தன் மகள் பிறந்த போது அவளுக்கு பால் வாங்கித் தர பணமில்லாமல் வறுமையில் வாடினார். அதே மகள் இறந்த போது அவளை நல்லடக்கம் செய்ய மார்க்ஸி


ஜோன் கெனடி

டம் பணம் இல்லை. அவளுக்கு சவப்பெட்டி வாங் சுக் கூட மிகவும் கஷ்டப்பட்டார். தன்னிடமிருந்த ஒரேயொரு கோட்டை விற்றுத் தான் சவப்பெட்டி வாங்கினாராம்.

மருத்துவத்தின் தந்தை எனப்படும் ஹிப்பாகிரட்டீஸ் மருத்துவம் குறித்து அந்தக் காலத்தில் 70 நூல்கள் எழுதியுள்ளார்.

ரோம் நகரம் பற்றி எரியும் போது பிடில் வாசித்த நீரோ மன்னன் இனிமையாகப் பாடுவாராம்.தனது இனிமையான குரல் வளர்ச்சி பெற நீரோ


ஆபிரகாம் லிங்கன்

தினமும் உணவில் வெங்காயம் சேர்த்துக் கொண்டார்.

விஞ்ஞான மேதை கலிலியோவின் காலத்தில் காலத்தைக் காட்டும் கடிகாரங்கள் நடைமுறைக்கு வரவில்லை. கலிலியோ தம்முடைய ஆராய்ச்சிகளின் போது கால அளவை நிர்ணயிப்பதற்கு தம்முடைய கைகளின் நாடித்துடிப்பை அளவுகோலாக கொண்டார்.

லியனார்டோ டாவின்சி தனது இடது கையில் காகிதத்தில் வலமிருந்து இடமாக எழுதினார். அவரது ஆராய்ச்சி நூல்களை முகம் பார்க்கும்


கார்ள் மார்க்ஸ்

கண்ணாடியின் உதவியால் மட்டுமே படித்துப் பார்க்க முடியும்.

ஆச்சாய வினோபா பாவே தன் வாழ்நாளில் ஓட்டுப் போட்டதே இல்லை.

எந்தப் பள்ளியிலும் படிக்காத சி.ஆ.பெ.விஸ்வநாதன் இரண்டு பல்கலைக்கழகங்களில் டாக்டர் பட்டம் பெற்றார்.

ஜோன் கெனடி இறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்னால் பிற்பாடு அவர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் சிறிது நேரம் அமர்ந்திருந்தாராம்.

சேர் ஐசக் நியூட்டன் தனது கணிதப் பிரச்சினைகளுக்கெல்லாம் வழி கண்டுபிடித்தது அவரது கனவுகளில் தானாம்.


பாரதியார்

பெர்ட்ரண்ட் ரஸல் தனது வாழ்வில் நான்கு முறை திருமணம் செய்து கொண்டார். அவரது நான்காவது திருமணம் 80வயதில் நடந்தது.

ஜேர்மன் தத்துவஞானி நீட்சே, பல ஆண்டுகள் மனநோய் மருத்துவமனையில் இருந்தார். கடைசிவரை அவர் வைத்தியம் தெளியவே இல்லை. மனநோயாளியாகவே இருந்து இறந்த நீட்சேயில் கடைசி வாசகம் என்ன தெரியுமா? நான் கூட சில நல்ல புத்தகங்களை எழுதியிருக்கிறேன் போலிருக்கிறதே...!

ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த காலம் முழுவதும் அவரது



ஹிட்லர்

சப்பாத்தை அவரே துடைத்துக் கொண்டாராம்.

மகாகவி பாரதியார் தன் வாழ்நாளில் அதிகம் உபயோகப்படுத்தியது பென்சில் மட்டுமே. அதுவும் அவர் காலத்தில் மிகப் பிரபலமாக இருந்த பெருமாள் செட்டி நிறுவனம் தயாரித்த பென்சிலைத்தான் அவர் மிகவும் விரும்பிப் பயன்படுத்தினாராம்.

நாத்திகவாதியான இங்கர்சால் தன் மகள் மாடிப்படியில் இருந்து கீழே விழுந்த போது ஓமை காட் என்று கத்தியுள்ளார்.

மாவோ தனது இளம் பருவத்தில் அருகில் உள்ள மலைக் குன்றுகளிலேயே எப்போதும் அலைந்து திரிந்து கொண்டிருப்பாராம். இந்தப் பயிற்சி தான் அவருக்கு பின்


சேர் ஐசாக் நியூட்டன்

னாளில் தன் பெரும் படையுடன் 1600 மைல் மலைகளிலேயே நீண்ட பயணம் போக உதவியது.

சர்வாதிகாரி ஹிட்லர் ஒரு ஓவியர். ஹிட்லர் இளைஞனாக இருந்த போது வியன்னா ஓவியக்கல்லூரியில் சேர விரும்பினார். ஆனால் இடம் கிடைக்கவில்லை. ஆனால் அவர் சுய முயற்சியால் ஓவியம் வரையக் கற்றுக் கொண்டார். 1911 முதல் 1914 வரை வரைந்த வாட்டர் கலர் ஓவியங்கள் 80000 டொலருக்கு விலை போனது.

உகண்டாவை ஆண்ட சர்வாதிகாரி இடி அமீன் ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள்



ஒபாமா

கூட்டத்துக்கு ஒருமுறை பல்லாக்கு போன்ற வாகனத் தில் போனார்.

அவரை சுமந்து சென்றது 4 ஐரோப்பிய வெள்ளையர்கள். கறுப்பினத்த வரை வெள்ளையர்கள் அடிமையாக நடத்தியதற்கு இது பதிலடி என்றார் அவர்.

சமூக வலைத்தளமான டுவிட்டரில் இணைத்த முதல் உலகத் தலைவர் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா. அவர் 2007 ஆம் ஆண்டிலேயே டுவிட்டர் எக்கவுன்ட் ஆரம்பித்து விட்டார்.






நம்ம டான்ஸ் போட்டிக்கு ஒரு
நிஜ நீதிபதியை நடுவரா போட்டது
தப்பாப் போச்சு...?
ஏன் என்னாச்சு?
போட்டி முடிஞ்சதும் முடிவைச்
சொல்லாம தீர்ப்பு திகதி குறிப்பிடப்படாமல்
ஒத்தி வைக்கப்படுகிறது என்று அறிவிச்சுட்டாரே...!



கல்யாண மண்டபத்துல எதுக்கு
ஏகப்பட்ட அடியார்கள் சுத்றாங்க...?
மொய்ப் பணம் வசூலிக்கத்தான்
இந்த ஏற்பாடு...!




ஊழல் வழக்குல தலைவர்
வீட்டு நாயோட பேரையும் ஏன்
சேர்ந்திருக்காங்க...?
ஊழல் பணத்துலதான் தலைவர்
அந்த நாய்க்கு பிஸ்கெட்
வாங்கிப் போட்டாராம்...!



அந்த பல் டாக்டர்
ரொம்ப மோசம்...!
ஏன் என்ன செய்யிறார்?
பணத்தை வாங்கும் போது
கூட மயக்க
மருந்து கொடுக்கிறாரு...



புடைவையை துவைச்சதுக்கா
உங்க மனைவி
உங்க கன்னத்தில் அறைஞ்சாங்க..
அநியாயமா இருக்கே?
நான் துவைச்சது எதிர்
வீட்டுக்காரியோட புடைவை!



ஏன் டாக்டர் அந்த
பேஷன்ட்கிட்ட
அப்படி கோபப்படுறீங்க...?
புடைவைக்கு பொருத்தமான
கலர்ல மாத்திரை
கேட்கிறாங்கய்யா...!



அதிர்ச்சியான விடயம் எதையும்
பேஷன்ட்டுக்கு
சொல்லக்கூடாது...அவருக்கு
ஆபரேஷன் என்கிற விடயத்தை
அவருக்கே சொல்லைன்னா
எப்படி டாக்டர்...?



தலைவருக்கு கதகளி
தெரியும்னு சொல்
றாங்களே... உண்மையா?
நீ வேற ... அவருக்கு
தெரிஞ்சதெல்லாம்
வெறும்
களி மட்டும் தான்!




உங்களை செக்கப் செஞ்சு
பார்த்திட்டு அரண்மனை
வைத்தியர் என்ன சொன்னார்
மன்னா..?எனக்கு ஊட்டச்சத்து
ரொம்பக் குறைவா
இருக்குதுன்னு சொன்னார்
அமைச்சரே!





கட்சி ஆபீஸ்ல
எதுக்கு குற்றவாளிக்
கூண்டு இருக்கு...?
மகளிரணித் தலைவி கூட
யார் பேசினாலும்
தலைவர் அவங்களை
அதுல ஏற்றித்தான்
விசாரிப்பார்.!



# ஹெட்போன்களின் வரலாறு



அண்மையில் வெளிவந்த ஐபோன் 7இல் ஹெட்போன் சொக்கெட்டுகளை அப்பிள் நிறுவனம் அகற்றி அடுத்த புரட்சியைத் தொடங்கியுள்ளது. 10 ஆயிரத்து 584 எனும் சல்லிசான விலையில் வயர்லஸ் ஏர்பாட் ஹெட்போனை அறிமுகப்படுத்தியுள்ளது. இனிமேல் இப்படித்தான் என அப்பிள் சிக்னல் காட்டிவிட்டது. வயர் இல்லாத இந்த ஏர்பாட் ஹெட்போனை காதில் மாட்டியதுமே இதில் இருக்கும் இன்ஃப்ரா ரெட் சென்ஸார் இசையைத் தேடி நம் காதுகளில் கொண்டு வந்து கொடுக்கும். கேட்டு முடித்து காதிலிருந்து இதை அகற்றியதுமே இசை நின்றுவிடும்

பல்வேறு ஆண்டுகளில் மாற்றம் பெற்று வந்த ஹெட்போன்களின் வரலாறு சுப்பரான நாஸ்டால்ஜிக் ரீவைண்டிங்காக நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்துமே! லைட்ஸ் ஆன்... பயணிப்போமா?

**ஸ்டெலஸ்கோப்**

இதில் பாடல் கேட்க முடியாதுதான். ஆனால் ஹெட்போன் கருவிகள் உருவாக ஊக்கம் தந்தது ஸ்டெலஸ்கோப்தான். 1850 களில் கண்டுபிடிக்கப்பட்ட ஸ்டெலஸ்கோப் நோயாளிகளின் இதயத்துடிப்பு மற்றும் நுரையீரல் செயற்பாடு பற்றி வைத்தியர் அறிய பயன்படுத்தப்படுகிறது. தோமஸ் அல்வா எடிசன் ஸ்டெலஸ்கோப்பை தன்னுடைய போனாகிராப் மெஷினுடன் இணைத்துப் பயன்படுத்தினார்.

**1880முதல் ஹெட்போன்**

1880களில் கண்டுபிடிக்கப்பட்ட முதல் ஹெட்போன் இன்றைய ஹெட்போன்களுக்கு முப்பாட்டன். இந்த ஹெட்போன்களை முதலில் பயன்படுத்தியது டெலிபோன் ஆப்பரேட்டர்கள்தான். தோள்களில் தாங்



கியபடி ஒற்றைக் காதில் பயன் படுத்த வேண்டும். எடைதான் சற்று அதிகம். ஜஸ்ட் 5 கிலோதான். 1890 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஒபாரநடன அரங்குகள் மற்றும் தியேட்டர்களில் திரையிடப்படும் நாடகங்களை பார்வையாளர்கள் ரசிக்க வசதியாக இதனை வழங்கினர்.

**1910 காப்பர் வயர் ஹெட்போன்**


1910ஆம் ஆண்டு நதானியேல் பால்ட்வின் என்ற ஆராய்ச்சியாளர் அமெரிக்க கடற்படையின் உதவியுடன் ஒலியைப் பெறும் இரு ரிசிவர்களுடன் உள்ள முதல் ஹெட்போனைக் கண்டு பிடித்தார். இதுவே இரண்டாம் உலகப்போரின் போது மின்சாரமில்லா டெலிபோனை கண்டுபிடிக்க ஆதாரமாய் அமைந்தது.



1958ஆம் ஆண்டு ஜாஸ் பாடகர் ஜான் சி கோஸ், மார்ட்டின் லாஎன்ஞ் ஜுனியர் என்ற எஞ்சினியருடன் இணைந்து போர்டபின் போனோகிராப் எஸ்பி 3 ஸ்டீரியோபோன் பிளேயரை கண்டுபிடித்தார். பக்கவாட்டில் ஸ்பீக்கர்கள் கொண்ட இந்த ஹெட்போனில் பிரைவசி சுவிட்சை அழுத்தினால் புற வெளி இரைச்சலின்றி ஸ்டீரியோ போனிலிருந்து துல்லிய தரத்தில் நமது தனியுலகில் பாட்டை ரசிக்க முடியும்.

**1979-எம்டிஆர் -3L2 ஹெட்போன்**


1979ஆம் ஆண்டு ஜூலை 1 அன்று சோனி கம்பனி வோக்மனைக் (கேசட் பிளேயர்) கண்டுபிடித்தது. கூடவே 3.5 எம் எம் ஹெட்போன்களும் இணைந்தால் என்னாகும்? பாக்ஸ் ஆ பீஸ் கிட்டானே. இதுவரை 38 கோடியே 50 இல



ட்சம் வோக்மேன்கள் பரபரவென விற்றுத் தீர்த்துள்ளன என்பதிலிருந்தே இதற்கான வரவேற்பை அறியலாம். சோனியை முந்திக் கொண்டு பிலிப்ஸ் கசட் பிளேயரை அறிமுகப்படுத்தி சந்தையில் இருந்தாலும் அதைத் தாண்டி சோனி தன் வோக்மனை போணி செய்தது எப்படி? அதனுடைய தரமான துல்லிய இசை தரும் ஹெட்போன்களின் நிகரற்ற பாடல் அனுபவம்தான் காரணம். வோக்மனில் பாடல் கேட்பதை இளைஞர்களின் இன்றைய கால நாகரீகமாகவே மாற்றியதில் இருக்கிறது சோனியின் வெற்றி.

**1989 இரைச்சல் குறைக்கும் ஹெட்போன்**


இந்திய வம்சாவளியைச் சேர்ந்த எலக்ட்ரிக்கல் எஞ்சினியரான டாக்டர் அமர்கோபால் போஸ் (1929-2013) ஹெட்போனில் இரைச்சலைக் குறைக்கும் டெக்னோலஜியைக் கண்டுபிடித்து அறிமுகப்படுத்தினார். விமானம் சார்ந்த பயணங்களில்



எழும் சத்தத்தை குறைக்க இந்நுட்பம் முதலில் பயன்பட்டது. போஸ் கார்ப்பரேஷன் உருவாக்கிய ஹெட்போன்கள் சந்தையில் உன்னத தரத்துக்கு அடையாளம் ஆகின.

**2001 அப்பிள் ஐபாட் ஹெட்போன்கள்**

2001 ஒக்டோபர் 23அன்று ஐபாட் எனும் மீடியா பிளேயரை அறிமுகப்படுத்தி அப்பிள் நிறுவனம் ஹெட்போன்களின் போட்டியை



வேறு லெவலுக்கு கொண்டு சென்றது. 2-128 ஜிபிகள் வரைஇதன் சேமிப்புத்திறனை அதிகரித்துக்கொள்ள முடியும். இன்றுவரை 30 கோடி ஐபாடுகளை அப்பிள் நிறுவனம் ஏகபோகமாகவிற்றுள்ளதற்கு அதன் ஹெட்போன்களின் அசத்தல் தரமும் தனித்துவ வடிவமைப்பும் முக்கிய காரணமாகும்.

**டேஷ் இயர்போன்**

2016ஆம் ஆண்டு ஜேர்மனியைச் சேர்ந்த பிராகி எனும் நிறுவனம் இந்த வயர்லெஸ் ஸ்மார்ட் இயர்போன்களை அறிமுகப்படுத்தியது. புளூடூத் மூலம் 4 ஜிபி சேமிப்புத் திறன் இரைச்சலை குறைக்கும் திறன் கொண்ட இயர்போன்களை எங்கேயும் எப்போதும் இசையில் விழுந்து புரள பயன்படுத்த முடியும். அப்பிள் ஆண்ட்ராய்டு விண்டோஸ் என எதிலும் திரைரெனசிம்மும் போனும் போல இணைத்துக் கொள்ளலாம்.

**எல்ஜி வயர்லெஸ் ஸ்டீரியோ ஹெட்செட்**

தென்கொரிய நிறுவனமான எல்.ஜி தயாரித்துள்ள டொன் இன் ஃபினிம்வயர்லெஸ் ஹெட் செட்டில் இரு கருவிகளை ஒரே சமயத்தில் இணைத்துக் கொள்ள முடியும். போன் அழைப்புகள் மெசேஜ்கள் வருவதை உணர்த்த சிறிய அதிர்வுகளைத் தரும். 2மணி நேரம் சார்ஜ் செய்தால் 14 மணி நேரம் இசைக்கடலில் மூழ்கி முத்துக் குளிக்கலாம்.

**ரோம் ரோப்ஸ் இயர் போன்கள்**

கழுத்தில் நெக்லஸ் போல் அணிந்து வயர்லெஸ் இயர் போன்களை காதில் பொருத்தி இஷ்டப்படி பாடல்களை ரசிக்கலாம். அத்துடன் இதன் நீளத்தை சுருக்கிக் கொள்ளவும் பெரிதாக்கிக் கொள்ளவும் முடியும். இதிலுள்ள ரோம் இக்யூ ஆப் மூலம் போனில் உங்களுக்குத் தேவையான இசையை நீங்களே வடிவமைத்துக் கொள்ளலாம். பாட்டு கேட்கவில்லையென்றாலும் பாஸ் போல கழுத்தில் அணிந்தால் அழகாக அம்சமாக ஆபரணமாகவே இருக்கும்.



**2008 த்ரில்லர் ஹெட்போன்ஸ்**

2008 நவம்பர் மாதம் நோக்கியா நிறுவனம் நடத்திய ஹெட்செட் டிசைன் போட்டியில் 7 ஆயிரத்து 500 பேரை பின் தள்ளி முதல் பரிசு வென்ற ஹெட்போன் இது. ஜானி லைட் ஹெண்ட்ஸ் என்பவரால் வடிவமைக்கப்பட்டு அடொம் கிரியேட்டிவ் சொல்யூஷன் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது.கல்லறை சிலுவை, மஞ்சள்நிற ஓநாய், தலைகீழாக ஸோம்பி மனிதன், இலைகளற்ற மரத்தில் பறவை என மைக்கேல் ஜாக்சனின் த்ரில்லர் இசை அல்பத்தில் வரும் பல பொருட்களைக்



கொண்டு கிரியேட்டிவாக உருவாக்கப்பட்டுள்ளது இந்த ஹெட்செட்.

**வைர இயர்போன்**

பெல்ஜியம் நாட்டின் காசாஜி என்ற நகை தயாரிப்பாளர் வடிவமைத்து உருவாக்கிய 18 கரட் தங்கம் இழைத்த வைர இயர் போன் இது. இடது, வலது என இரு இயர் போன்களிலும் தலா 59 தரமான வைரங்கள் என மொத்தம் 118 வைரங்கள் இதில் பொருத்தப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளன. ஒரே ஒரு செட் மட்டுமே தயாரிக்கப்பட்ட இந்த இயர்போன் பிரிட்டனில் 2 இலட்சத்து 32 ஆயிரத்து 557 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. 18 கிராம் எடை கொண்ட இந்த இயர்போன் இசையின் தரத்தில் குறை வைக்காமல் துல்லியமாக ஒலிக்கிறது.

**வைர ஹெட்போன் கடிகாரம்**




பாடகர் வில்வேய்ன். சமீபத்தில் லொஸ்ஏஞ்சல்சில் நடந்த ஒரு கூடைப்பந்து போட்டியைப் பார்க்க வந்திருந்தார். அப்போது அவர் காதில் இருந்த ஹெட்போனில் 1 மில்லியன் டொலர் மதிப்பு மிக்க வைரங்கள் பொருத்தப்பட்டுள்ளதைப் பார்த்து பலரும் வியப்பில் திறந்த வாயை மூடவில்லை.

**தங்க இறக்கை ஹெட்செட்**

2009ஆம் ஆண்டு ஐ பிலீவ் ஐ கேன்ஃப்ளை என்ற ஆர் கெல்லியின் பாடலில் ஈர்க்கப்பட்ட ஆன ரோட்சாகர் என்ற கண்டு பிடிப்பாளர் நோக்கியா நிறுவனத்தின் ஹெட்செட்போட்டியில் உருவாக்கிய ஹெட்செட் தான் இது. இங்கு ஒவ்வொரு இடது, வலது ஹெட்செட்களிலும் வெள்ளை மற்றும் தங்க இறக்கைகள் வடிவமைக்கப்பட்டிருந்தன.





## கறுப்புப் பெட்டி

விமான விபத்து ஏதேனும் நிகழ்ந்தால் கறுப்புப் பெட்டியைத் தேடுகிறார்கள் என செய்தி வரும். விமானிகளுக்கும் தரைக் கட்டுப்பாட்டு மையத்துக்கும் நடக்கும் உரையாடல்கள் இதில் பதிவாகும் அதைவைத்து விபத்துக்கான காரணத்தை அறியலாம். கடந்த 1950 முதல் இப்போது வரை இந்தப் பெட்டி பெற்றிருக்கும் தொழில்நுட்ப மாற்றங்களைக் காட்டும்படம் இது. ஆரம்பத்தில் டேப் ரெகோர்டர் போல இருந்த இவற்றில் இப்போது டிஜிட்டல் சிப்கள் உள்ளன. இவை மோசமான விபத்திலும் நொறுங்காது. இந்தப் பெட்டிகள் வெளியிடும் சிக்னலை வைத்து இவற்றின் இருப்பிடம் அறிய லாம்.



## குட்டியூண்டு ஆயுதங்கள்!

துப்பாக்கி போன்ற கொலை ஆயுதங்களை உள்ளங் கைக்குள் வைத்து மூடிக் கொள்கிற மாதிரியான மிகச் சிறிய அளவில் செய்வதும், அவற்றை வாங்கி வீடுகளில் சேகரித்து வைப்பதும் அமெரிக்காவின் பலரது பொழுது போக்காக இருக்கிறது. இவை சாதாரண ஆயுதங்களின் செயற்பாடுகள் இதில் இருக்காது. ஆனால் ஒரிஜினல் ஆயுதம் எப்படி இருக்குமோ, அதே வடிவத்தில் இருக்கும். இந்த சேகரிப்பாளர்கள் இணைந்து மினியேச்சர் ஆயுத சங்கம் என்ற அமைப்பை உருவாக்கியிருக்கிறார்கள். ஆண்டுதோறும் மாநாடு நடத்தி, தங்களுக்குள் ஆயுதங்களைப் பரிமாறிக் கொள்கிறார்கள்.

# காலத்தால் அழியாத கானங்கள் ...

அன்றொரு நாள் இதே நிலவில்
திரைப்படம்: நாடோடி
இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்
இசை: எம்.எஸ். விஸ்வநாதன்
பாடியோர்: டி.எம். சௌந்தரராஜன், பி. சுசீலா




அன்றொரு நாள் இதே நிலவில்
அவர் இருந்தார்
என் அருகே
அன்றொரு நாள் இதே நிலவில்
அவர் இருந்தார் என் அருகே
அன்றொரு நாள் இதே நிலவில்
அவர் இருந்தார் என் அருகே
நான் அடைக்கலம் தந்தேன் என் அழகை
நீ அறிவாயே வெண்ணிலவே

அந்த ஒரு நாள் ஆனந்தத் திருநாள்
இன்று நினைத்தால் என்னென்ன சுகமோ?
பாதி விழிகள் மூடிக் கிடந்தேன்
பாதி விழிகள் மூடிக் கிடந்தேன்
பாவை மேனியிலே
நீ பார்த்தாயே வெண்ணிலவே

அன்றொரு நாள் இதே நிலவில்
அவள் இருந்தாள் என் அருகே நான்
அடைக்கலம் கொண்டேன் அவள் அழகை
நீ அறிவாயே வெண்ணிலவே

வானும் நதியும் மாறாமல் இருந்தால்
நானும் அவளும் நீங்காமல் இருப்போம்
சேர்ந்து சிரிப்போம் சேர்ந்து நடப்போம்
சேர்ந்து சிரிப்போம் சேர்ந்து நடப்போம்
காதல் மேடையிலே நீ
சாட்சியடி வெண்ணிலவே

அன்றொரு நாள் இதே நிலவில்
அவர் இருந்தார் என் அருகே நான்
அடைக்கலம் கொண்டேன் அவள் அழகை
நீ அறிவாயே வெண்ணிலவே

ஆடும் கனியை ஆடாமல் எடுத்தான்
வாடும் மலரை வாடாமல் தொடுத்தான்
ஆடும் கனியை ஆடாமல் எடுத்தான்
வாடும் மலரை வாடாமல் தொடுத்தான்
சூடிக் கொடுத்தான் பாடி முடித்தான்
பாவை மேனியிலே நீ
பார்த்தாயே வெண்ணிலவே
ஆஆஆஆஆஆ

அன்றொரு நாள் இதே நிலவில்
அவர் இருந்தார் என் அருகே
நான் அடைக்கலம் கொண்டேன் அவள் அழகை
நீ அறிவாயே வெண்ணிலவே

# கனவுகளும் பலன்களும்



### கனவுகளுக்கான பரிகாரங்கள்

பொதுவாக ஒருவருக்கு இத்தனை விதமான கனவுகள்தான் ஏற்படும் என்பதற்கு எந்தவிதக் கணக்கும் இல்லை. எத்தனையோ விதமான கனவுகள் ஒருவருக்கு ஏற்படலாம். இருப்பது, இல்லாதது, நடந்தது, நடக்காதது, நடக்க முடியாதது ஆகியவையெல்லாம் ஒருவருடைய கனவில் தோன்றலாம்.

பொதுவாக நல்ல பலன்களைச் செய்யும் கனவுகள் நல்ல கனவுகள் என்றும் கெட்ட பலன்களைச் செய்யும் கனவுகள் கெட்ட கனவுகள் என்றும் அழைக்கப்படுகின்றன.

நல்ல கனவுகளைக் காணும் போது மகிழ்ச்சி அடைகிறோம். கெட்ட கனவுகளைக் காணும் போது மனம் வேதனைப்படுகிறது.

சில கெட்ட கனவுகளை நாம் எளிதாக மறந்து விடுகிறோம். ஆனால் வேறு சில கெட்ட கனவுகளை அதுபோல நம்மால் மறக்க முடிவதில்லை. அவை மனதில் ஒரு நெருடலாக இருந்து கொண்டு நிம்மதியை இழக்கச் செய்துவிடுகின்றன.

அதுபோன்ற சமயங்களில் அந்தக் கனவுகளுக்கான பரிகாரங்களைச் செய்தால் மனம் அமைதி பெறும்.

இதுபோலக் கனவுகளுக்கான பரிகாரங்களைச் செய்வதற்கு மந்திரவாதிகளைத் தேட வேண்டியதில்லை. அதிக பணச் செலவும் சிரமமும் இல்லாமலேயே கெட்ட கனவுகளுக்கான பரிகாரங்களைத் தேடிக் கொள்ளலாம்.

வீட்டிலேயே இறைவனை வழிபடுவதுதான் கெட்ட கனவுகளுக்கான பரிகாரம். ஆனால் ஒவ்வொரு வகைக் கனவுக்கும் ஒவ்வொரு தெய்வத்தை வழிபட வேண்டும்.

### காரியத்தடை

நம்முடைய காரியங்கள் தடைபடக்கூடிய கனவுகளைக் கண்டால் விக்கினங்களைக் களையும் விநாயகரை வழிபட வேண் டும். விநாயகருக்கு அர்ச் சனை செய்யலாம். அல்லது விநாயகர் அகவலைப் படிக்கலாம்.

### பண நட்டம்

நம்முடைய கைப்பொருட்களை இழக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தும் கனவுகளைக் கண்டால் மகாலட்சுமியை துதிக்க வேண்டும்.அதோடு கனகதாரா ஸ்தோத்திரத்தையும் உச்சரித்து வரலாம்.

### தெய்வங்கள்

பொதுவாகத் தெய்வங்களைக் கனவில் கண்டாலோ அல்லது குறிப்பிட்ட தெய்வம் நமக்கு நினைவூட்டுவதற்காக நம்முடைய கனவில் தோன்றினாலோ அந்தத் தெய்வத்தை வழிபட வேண்டும்.

### பாம்பு

பாம்புகள் கனவில் வந்து பயமுறுத்தினால் பாம்புப் புற்றுக்கு பால் வார்க்கலாம் அல்லது நாகராஜா கோயிலுக்குச் சென்று வழிபடலாம். அல்லது சிவபெருமானை வழிபடலாம்.

### வியாதிகள்

சில நோய்கள் ஏற்படுவதற்கான எச்சரிக்கையாகவும் கனவுகள் தோன்றலாம். ஒவ்வொரு வியாதியும் ஒவ்வொரு கிரகத்தின் ஆதிக்கத்தினால் ஏற்படுகின்றன.

எனவே நோய்கள் வருவதற்கான கனவுகளைக் கண்டால் நவக்கிரக வழிபாடு சிறந்த பலன் தரும். நவக்கிரக ஸ்தோத்திரம், கோளாறு பதிகம் ஆகியவற்றையும் உச்சரித்து வரலாம்.

### பயமுறுத்தும் கனவுகள்

கனவில் பேய்,பிசாசுகள் தோன்றிப் பயமுறுத்தினால் சிவபெருமானை வழிபட்டால் அந்தக் கனவுகள் வருவது நிற்கும்.

### பலவீனம்

உடல் பலவீனம் ஆவதைக் குறிக்கும் கனவுகளைக் காண்பவர்கள் உடல் பலம் பெற ஆஞ்சநேயரைத் துதிக்க வேண்டும். அதே போல தடைகளைக் கடந்து வெற்றி பெறவும் அனுமனை வழிபடலாம்.

### கவலை

கவலையை ஏற்படுத்தும் கனவுகளைக் காண்பவர்கள் துர்க்கையை வழிபடலாம். துர்க்க நிவாரண அஷ்டகத்தை பாராயணம் செய்து வரலாம்.

### பகைவர்களை வெல்ல

பகைவர்களின் தொல்லைகளை அதிகரிக்கச் செய்யும் கனவுகளைக் காண்பவர்கள் அவர்களுடைய தொல்லைகள் குறைய மகா விஷ்ணுவை வழிபடலாம். விஷ்ணு சகஸ்ரநாமத்தைப் பாராயணம் செய்து வரலாம்.

### கல்வி பெற

குழந்தைகளின் படிப்பு தடைப்படுவதாக கனவு கண்டால் சரஸ்வதி, தட்சிணாமூர்த்தி ஆகியோரை வழிபடலாம்.

### இறந்தவர்கள்

இறந்த பெற்றோர் கனவில் தோன்றி அழுவது போலக் கனவு கண்டால் ஏகாதசி விரதம் இருக்க வேண்டும்.

அதனால் அவர்கள் துன்பம் நீங்கி சொர்க்கம் அடைவார்கள்.

இறந்த தாய்,தந்தை, சகோதரன், சகோதரி ஆகியவர்களில் யாராவது அடிக்கடி கனவில் தோன்றினால் திதியை ஒழுங்காகச் செய்யவில்லை என்று பொருள். அதுபோன்ற நிலையில் கோயிலின் பொங்கல் நிவேதனம் செய்து அனைவருக்கும் விநியோகித்தால் நல்ல பலன் கிடைக்கும்.

(அடுத்த வாரம் தொடரும்)

# தாமரைப்பூ தந்த ஏரி



புனித பூமிகளின் ராஜா என்று அழைக்கப்படும் சிறப்பு பெற்ற திருத்தலம் ஆஜ்மிருக்கு அருகில் உள்ள 'புஷ்கர்' என்ற திருத்தலமாகும். இங்கு நிர்மாணிக்கப் ட்டுள்ள ஜகத்பீட பிரம்மா மந்திர் என்ற இடம் மட்டும்தான் பிரம்மாவிற்கென அமைக்கப்பட்டிருக்கும் தலம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒருமுறை பிரம்மதேவர் யாகம் செய்வதற்காக தகுந்த இடம் தேடிக்கொண்டிருந்தார். அப்போது அவரது கையில் இருந்து தாமரைப் பூ, பூமியில் விழுந்து, அந்த இடத்தில் நீர் ஊற்று உண்டானது.

அதுவே 'புஷ்கர்' என்று அழைக்கப்பட்டது. அந்த நீரே ஏரியாக அமைந்து விட்டதாக கூறுவர். இந்த 'புஷ்கர்' ஏரியைச் சுற்றி தற்போது ஆயிரம் கோவில்கள் அமைந்துள்ளன.

சினிமா செய்தி



# அம்மணி

## திரைவிமர்சனம்



தமிழ் சினிமாவில் எப்போதாவது தான் தரமான படங்கள் எட்டிப்பார்க்கும், அந்த வகையில் தொடர்ந்து தரமான படங்களாக இயக்கி வருபவர் லட்சுமி ராமகிருஷ்ணன். பாக்ஸ் ஆபிஸ் வசூல் என்பதை மீறி நல்ல படைப்பு என்று சொல்வதே ஒரு கலைஞனுக்கான மரியாதை, அந்த வகையில் லட்சுமி ராமகிருஷ்ணன் இந்த அம்மணியை எப்படி கொண்டு வந்துள்ளார் என்பதை பார்ப்போம்.

லட்சுமி ராமகிருஷ்ணன் அரசு மருத்துவமனையில் வேலைப்பார்க்கிறார். இவருக்கு இரண்டு மகன்கள், ஒரு மகள், ஒரு மகன் குடிகாரன், மற்றொரு மகன் ஆட்டோ ஓட்டுநர். மகள் ஓடி போய்த்திருமணம் செய்து விடுகிறாள்.

லட்சுமி தன் பணிக்காலம் முடிந்து ஓய்வு எடுக்கும் நிலையில் அவருக்கு குறிப்பிட்ட தொகை பணமாக வருகிறது, இதை அறிந்து மகன்கள், பேரன் என அனைவரும் அவரிடம் அன்பு காட்ட நெருங்க, பிறகு என்ன ஆனது என்பதை மிகவும் உணர்ச்சிபூர்வமாக காட்டியிருக்கிறது இந்த அம்மணி.



லட்சுமி ராமகிருஷ்ணன் ஒரு இயக்குநராக படத்திற்கு படம் மெருகேற்றுகிறார், அவர் நடிப்பு நாங்கள் சொல்லி தெரியவேண்டியது இல்லை, ஒரு குப்பத்தில் எப்படி இருப்பார்களோ, அவர்களின் வாழ்க்கையை நம் கண்முன் கொண்டு வருகிறார்.

பணத்திற்காக நடிக்கும் மகன்களையும், பேரனையும் காட்டிய விதம் இன்றைய தலைமுறையில் நடக்கும் பல நிகழ்வுகளை கண்முன் கொண்டு வருகிறது, இவர் நடத்தும் தொலைக்காட்சி ஷோ கண்டிப்பாக உதவி இருக்கும் போல.

சரி, அம்மணி என்று ஏன் படத்திற்கு டைட்டில் வைத்தார்கள்? என்று நீங்கள் கேட்பது புரிகின்றது, லட்சுமி ராமகிருஷ்ணன் வீட்டிலேயே அம்மணி என்ற ஒரு பாட்டி குடியிருக்கிறார், சொந்தங்களால் துரத்தி விடப்பட்ட இவர் லட்சுமி வீட்டில் தான் குடியிருக் கிறார்.

கிட்டத்தட்ட அம்மணி தான் லட்சுமியின் ரோல் மொடல், எந்த கவலையும் இல்லாமல், இந்த வயதிலும் அவர் சந்தோஷமாக தன் காலங்களை கழிக்கின்றார் என்பதை மிக அழகாக காட்டியுள்ளனர், இதை ஒரு காட்சியில் லட்சுமி அவரிடம் கேட்கும் போது கூட 'வெளிச்சம் சென்று விட்டால் நம் நிழல் கூட நமக்கு சொந்தமில்லை' என்று அம்மணி சொல்வது கவித்துவமான உண்மை.

படத்தின் ஒளிப்பதிவு இம்ரான் மிகவும் கவர்கிறார், "கே"வின் இசையும் கவனிக்க வைக்கின்றது, அதை விட நெஜித்தின் எடிட்டிங் படத்திற்கு என்ன தேவையோ அதை அளவாக கொடுத்துள்ளார்.

நடிகர்கள், நடிகைகளின் யதார்த்த நடிப்பு, குறிப்பாக அம்மணி பாட்டியின் துறுதுறு நடிப்பு, படத்தின் வசனம் ரசிக்க வைக்கின்றது. படத்தின் இடைவேளை வரை கதைக்குள் நாம் செல்ல கொஞ்சம் நேரம் எடுக் கின்றது.

## மகனை பிரபலமாக்கிய பிரபலங்கள்!

இன்று சினிமாவில் இருக்கும் நிறைய நடிகர்கள் சினிமா பின்னணியில் இருந்து வந்தவர்கள். அவர்களது பெற்றோர் அல்லது உறவினர்கள் சினிமா துறையை சேர்ந்தவர்கள். அவர்களில் முக்கியமானவர்கள் இதோ.

### விஜய்

விஜயின் அப்பா இயக்குநர் மற்றும் தயாரிப்பாளர் எஸ்.ஏ.சந்திரசேகர் எடுத்த நாளைய தீர்ப்பு என்ற படத்தின் மூலம் 1992 இல் குழந்தை நட்சத்திரமாக நடிக்க துவங்கினார். இவருடைய இயக்கத்திலேயே 10 படங்கள் வரை நடித்துள்ளார்.

### சூர்யா

இயக்குநர் வசந்தின் ஆசை படத்தில் நடிக்க கிடைத்த வாய்ப்பை விட்டு விட்டு மீண்டும் 1997 இல் நேருக்கு நேர் படத்தின் மூலம் சினிமாவிற்கு காலடி எடுத்து வைத்தவர் சூர்யா. இவருடைய தந்தை நடிகர் சிவகுமார் ஒரு அனுபவம் வாய்ந்த முன்னணி நடிகர் என்பது எல் லோருக்கும் தெரிந்திருக்கும். தனது தம்பி கார்த்தியும் வெளிநாட்டில் படித்து விட்டு சினிமாவிற்கு வந்துள்ளார்.

### சிம்பு

சிம்பு என்றதுமே உடனே ஞாபகம் வருவது டி.ராஜேந்தி ரன். இவர் நடிப்பு, பாடல், அடுக்கு மொழி வசனம் என சினிமாவை கலக்கி ஒரு சில படங்களும் எடுத்து தன்னு டைய மகன் சிம்புவை 1984 இல் உறவை காத்த கிளி திரைப்படத்தில் குழந்தை நாயகனாக அறிமுகப்படுத்தினார்.

### அருண் விஜய்

பிரபல நடிகர் விஜய குமார் நடிப்புக் கென்று தனி இடம் பிடித்த இவர் தனது மகன் அருண் விஜயை 1995 இல் முறை மாப்பிள்ளை படம் மூலம் சினிமாவில் இறக்கி விட்டார்.

### தனுஷ்

2002 இல் துள்ளுவதோ இளமை படத்தின் மூலம் இளம் நடிகனாக முகம் காட்டியவர் தனுஷ். இந்த படத்தின் இயக்குநர் கஸ்தூரி ராஜா அவரின் அப்பா என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இவரது குடும்பத்தில் அண்ணன் செல்வராகவனும் இயக்குநர் தான்.

### ஜீவா

தயாரிப்பாளர் ஆர்.பி.சவுத்ரி தன்னுடைய ஆசை ஆசையாய் படத்தின் மூலம் 2003 இல் மகன் ஜீவாவை நடிகராக அடையாளம் காட்டினார். இவரின் இன்னொரு மகன் ஜித்தன் ரமேஷ் சினிமாவில் நடித்து வருகிறார்.

### ஜெயம் ரவி

தென்னிந்திய சினிமாவின் பிரபலமான எடிட்டர் மோகன் தன் இரு மகன்களுக் கும் சினிமாவை காட்டிவிட்டார். ஒருவர் ஜெயம் ரவி, மற்றொருவர் இயக்குநர் மோகன் ராஜா. ஜெயம் ரவியும் குழந்தை யாகவே தெலுங்கு சினிமா மூலம் அறி முகமானார்.

### விக்ரம் பிரபு

இவரை பற்றி சொல்ல வேண்டும் என்றால் இவருடைய அப்பா பிரபுவையே இந்த லிஸ்டில் சேர்த்து விடலாம். அவரும் நடிகர் திலகத்தின் மகன் தானே. கும்கி படம் மூலம் சினிமாவில் தரிட் ஓப்பனிங் கொடுத்த விக்ரம் பிரபு அடுத்தடுத்து படங்களில் நடித்து வருகிறார்.

### சிபிராஜ்

இவரது முகத்தை பார்த்தாலே கண்டு பிடித்துவிடலாம் இவருடைய தந்தை பிரபல நடிகர் சத்யராஜ் என்று. 2003 இல் ஸ்டுடென்ட் நம்பர் வன் படத்தின் மூலம் முகம் காட்டிய சிபி இதுவரை 10 படங்களில் நடித்துள்ளார்.


### கௌதம் கார்த்திக்

நவரச நாயகன் கார்த்திக் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் இவருடைய மகன் தான் கௌதம் என்பது ஒரு சிலருக்கு மட்டுமே தெரியும். 2013 இலிருந்து இதுவரை 5 படங்களில் நடித்துள்ளார்.

இத்தனை பேர் சினிமா பின்னணியிலி ருந்து வந்திருந்தாலும் தனது உழைப்பால் தனித்து நிற்பவர்கள் ஒரு சிலரே.

# டோனியா-கோலியா சிறந்த டெஸ்ட் கப்டன்?




நியூசிலாந்தை வாஷ் அவுட் செய்த இந்தியாவின் வெற்றி ஒருபுறம் கொண்டாடப்பட்டு வந்தாலும் மறுபுறம் சிறந்த கப்டன் யார்? டோனியா, கோலியா? என விவாதங்கள் நடந்த படி உள்ளன. சரி யார் சிறந்த கப்டன் என்பதை தரவு மூலம் தேடும்போது தான் சில விடயங்கள் தெரியவந்தது.

**முழு நேர டெஸ்ட் கப்டன்**

டோனி மற்றும் கோலியின் டெஸ்ட் கப்டன் என்ட்ரியில் இவர்களது ஒற்றுமை தொடங்குகிறது. இருவருக்குமான டெஸ்ட் கிரிக்கெட் பயணம் பார்டர் கவாஸ்கர் கோப்பை தொடரில் இருந்து அடுத்த கட்டத்துக்கு முன்னேறிச் செல்கிறது. 2008 தென்னாபிரிக்காவுடனான தொடரில் ஒரு போட்டிக்கு மட்டும் டோனி கப்டனாக இருந்தார். அதுவே டெஸ்ட் கப்டனாக டோனிக்கு முதல் போட்டி.

2008 ஒக்டோபர் - நவம்பரில், அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இந்தியாவில் நடந்த பார்டர் கவாஸ்கர் கோப்பை தொடரில், அப்போதைய கப்டன் கும்ளேவுக்கு காயம் ஏற்பட்டது. அதனால் அந்தத் தொடரில் இரண்டு போட்டிகளில் தற்காலிக கப்டனாக டோனி களம் இறங்கினார். அந்த தொடரோடு அனில் கும்ளே கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற தற்காலிக கப்டனாக இருந்த டோனி, அன்று தொடங்கி 2014 வரை டெஸ்ட் கப்டனாக நீடித்தார்.

2014-15 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவுடன் நடந்த பார்டர் கவாஸ்கர் கோப்பை தொடரில் இரண்டு போட்டிகளில் கோலி கப்டனாக இருந்தார். அந்த தொடரோடு டோனி டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற, முழு நேர கப்டனானார் கோலி. அன்று தொடங்கியது கோலியின் கப்டன் கிராப்.




**முதல் 5 டெஸ்ட் தொடர்கள் என்ன ஆனது?**

சொல்லி வைத்தாற்போல, இருவரும் கப்டனாக விளையாடிய முதல் 5 தொடர்களின் முடிவுகளும் ஒரே மாதிரியாக அமைந்துள்ளன.

பங்களாதேஷுக்கு எதிராக 2015 ஜூன் 10 ஆம் திகதி நடந்த டெஸ்ட் போட்டி தான், கோலி முழுவதும் கப்டனாக விளையாடிய முதல் தொடர். இதுவரை கோலி தலைமையில் இந்திய அணி 5 தொடர்களை விளையாடியுள்ளது. அதில் 4 வெற்றிகளும், ஒரு தொடர் சமநிலை செய்துள்ளது.

அப்படியே டோனியின் ரெக்கோர்டை பார்ப்போம். டோனி முழுவதும் கப்டனாக விளையாடிய முதல் தொடர், 2008/09 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக நடந்த டெஸ்ட் தொடர். இந்த தொடரையும் சேர்த்து டோனி தலைமையிலான முதல் 5 டெஸ்ட் தொடர்களில் 4 வெற்றிகளையும் 1 தொடரை சமநிலையும் செய்துள்ளது இந்திய அணி.

முதல் 5 டெஸ்ட் தொடர்களில், எந்த தொடரையும் இவர்கள் நழுவ விட்டதே இல்லை என்பது கூடுதல் சிறப்பு.

**வெற்றி சதவிகிதத்தில் என்ன ஒரு ஒற்றுமை**

கப்டன் தலைமை ஏற்று இதுவரை கோலி விளையாடிய போட்டிகள் 17. இந்த 17 போட்டிகளில் 10 வெற்றி, 2 தோல்வி, 5 சமநிலை என கோலியின் வெற்றி சதவிகிதம் 58.8%.

அப்படியே டோனி பக்கம் வாங்க. டோனி கப்டனாக விளையாடிய தனது முதல் 17 போட்டிகளில் 10 வெற்றிகள், 2 தோல்விகள், 5 சமநிலை என இவரின் வெற்றி சதவிகிதமும் 58.8%.

கோலி தலைமையில் பங்களாதேஷ் உடனான ஒரு போட்டி கொண்ட தொடர், மழை காரணமாக கைவிடப்பட்டது. இப்போட்டியில் இந்தியாவுக்கான வெற்றி வாய்ப்பு அதிகமாக இருந்தது. மழை குறுக்கிடாமல் இருந்திருந்தால் கோலி-டோனியை ஓவர்டேக் செய்திருக்கலாம்.

இதிலையிருந்து என்ன தெரியுது. கோலியா? டோனியா? இரண்டு பேரும் சமநிலைதான்.

கோலிக்கு இன்னொரு சவால் இருக்கிறது. டோனி முழு நேர கப்டனாக பதவி ஏற்ற பின் நடந்த முதல் 10 தொடர்களில் ஒரு தொடரைக் கூட தோற்காமல் இந்திய அணியை வழி நடத்தியுள்ளார். இவையே இந்திய அணி தோல்வி இல்லாமல் தொடர்ந்து விளையாடிய அதிக டெஸ்ட் தொடர்கள். இந்த ரெக்கோர்டை உடைப்பாரா கோலி? பார்ப்போம்.

**அஷ்வினுடன் டோனி, கோலி**

டோனி, கோலி இருவருக்கும் முக்கிய பலம் அஷ்வின். கோலி மற்றும் டோனி தலைமையில் அஷ்வினின் சுழல் ஜாலத்தை பார்க்கலாம். 2011 நவம்பரில் டெஸ்ட் போட்டிகளுக்குள் நுழைந்த அஷ்வின், இதுவரை பெற்ற தொடர் நாயகன் விருதுகள் 7. இதுவே இந்தியர் ஒருவர் பெற்ற அதிகபட்ச தொடர் நாயகன் விருதுகள். அஷ்வின் டெஸ்ட்டுக்குள் நுழைந்த காலம் தொட்டு இதுவரை எந்த நாட்டு வீரரும் 7 தொடர் நாயகன் விருதுகளை வென்றதில்லை என்பது சிறப்பான பதிவு. (க)

# குற்றம் குற்றமே!

நாமெல்லோரும் தினமும் பத்திரிகைகள் படிக்கின்றோம். பொதுவாக பத்திரிகைகளின் முதல் பக்கத்தில் தலைப்புச் செய்திகள் அரசியல்சார்ந்த விடயங்களாக வெளிவருவதுண்டு. அத்துடன் பல்வேறு தரப்பட்ட அம்சங்களைக் கொண்ட புதினங்கள் வெளியாகினாலும் அவைகளில் முக்கியமான இடத்தைக் குற்றவியல் செய்திகளும் ஆக்கிரமித்துக் கொள்கின்றன. முன்னைய காலங்களிலும் குற்றச் செய்திகள் பிரசுரமாகியிருந்தாலும் இப்போதைய காலம் போல் தலைப்புச் செய்திகளுடன் போட்டியிட்டுப் பிரசுரமாயிருக்கவில்லை. இவைகளுக்கு இத்தனை முக்கியத்துவம் கொடுப்பதற்குரிய காரணத்தை ஆராய்ந்து பார்த்தாலும் சமகாலத்தில் குற்றச் செயல்கள் மிகவும் அதிகரித்திருக்கின்றமை நன்கு புலப்படும்.

அன்றைய காலங்களில் கொலை, களவு, வன்புணர்வு போன்ற குற்றங்கள் இடம்பெறாமலில்லை. மிக அரிதாகவே இங்கொன்றும் அங்கொன்றும் நடந்திருந்தன. எனினும் இவைகள் மக்கள் மனங்களில் பெரும் தாக்கத்தினை உண்டு படுத்தியிருந்தன. ஆனால் இப்போதெல்லாம் வெளியாகும் குற்றச்செய்திகளைப் படித்துவிட்டு அந்த வேளையில் மட்டும் உணர்ச்சிவசப்படுவோம். நாளடைவில் அவைகள் மறக்கப்பட்டு விடும். அதனைத் தொடர்ந்து மற்றுமொரு பாரிய குற்றப்புதினத்தைத் தாங்கி மறுநாள் பத்திரிகை பிரசுரமாகும். இவ்வாறு குற்றச் செய்திகள் நீட்சியாகிக்



கொண்டிருப்பதால் அவைகளின் தாக்கங்களை எங்களால் நின்று நிதானிக்க முடிவதில்லை.

சுமார் கடந்த ஐம்பதாண்டுகளுக்கு முன்பு வன்னிப் பிரதேசத்தில் ஒரு கொலை! ஒரு குடும்பப் பெண் தனது இரண்டு நண்பர்களின் ஒத்துழைப்புடன் கட்டிய கணவனை வெட்டிச் சாணிக்குவியலில் புதைத்து விட்டாள்.

இது எமது மக்கள் மனங்களில் ஒருவித கொதி நிலையையும் அச்சத்தையும் ஆச்சரியத்தையும் உண்டாக்கியிருந்த இந்தச் செய்தியைப் போட்டிபோட்டுப் பத்திரிகைகள் பிரசுரமாக்கின. அதிலும் குறிப்பிட்ட ஒரு உள்ளூர்ப் பத்திரிகை இக்கொலை சம்பந்தமான விடயங்களைச் சற்று விலாவாரியாக வெளிக்கொணர்ந்தது. அத்துடன் நீதிமன்ற வழக்கு விசாரணைகளையும் சுடச் சுடத் தந்ததுடன் தனது வெளியீட்டினை விசேட பதிப்பாக மாலையிலும் பிரசுரமாக்கித் தன்னுடைய சேவையை விரித்துக் கொண்டது.

இதன் பயனாக அப்பத்திரிகை மிகப் பெரியளவில் மக்கள் அபிமானத்தைப் பெற்றிருந்தது. எல்லாமே இந்தக் கொலை வழக்கை மையமாக வைத்திருந்ததன் பயனாகவே அப்படி ஒரு எழுச்சி.

இப்போதைய காலகட்டத்தில் இரட்டைக் கொலை முக்கொலைகள், கூட்டு வன்புணர்வுகள், பயங்கரக் கொள்ளைகள் என்று ஏதேதோ எல்லாம் நடந்துகொண்டிருக்கின்ற இன்று வந்த செய்தியைப் பற்றி விவாதித்து முடிப்பதற்குள் மறுநாள் மற்றுமொரு புதிய செய்தி வந்து விடும். இதன் விளைவாக யாருமே இவைகளைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. சரி இது புறமிருக்க மேற்படி குற்றங்களைப் புரியும் சூத்திரதாரிகளின் பின்னணிகளையும் சற்று ஆராய்வது பொருத்தமானது. இவர்கள் குற்றங்களைப் புரிந்து விட்டுத் தலைமறைவாகத் திரிபவர்கள், விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பவர்கள் அல்லது பிணையில் விடுதலை செய்யப்பட்டவர்களாகவேயிருப்பர்.

ஒரு பொது மனிதனை யாருமே குற்றவாளியென அடையாளப்படுத்த முடியாது. அவன் நீதிமன்றத்தினால் தீரவிசாரணை செய்யப்பட்ட பின்பு தான் அவனைக் குற்றவாளியென அழைக்கமுடியும். அதுவரைக்கும் அவன் ஒரு சந்தேக நபர் தான். ஒருவேளை அவன் குற்றமற்ற ஒரு அப்பாவியாகவும் இருக்கலாம். அதேவேளை ஒரு கொலைக் குற்றவாளி தான் கொலை செய்யப் பயன்படுத்திய ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டால், கொள்ளை அடித்தவன் கையும் மெய்யுமாக பிடிபட்டு விட்டால், வன்புணர்வு செய்த காமப் பேய்கள் வசமாகச் சிக்குண்டு விட்டால் அவர்களை எல்லாம் குற்றவாளிகள் என்னும் ஒரே பட்டியலில் துணிந்து சேர்த்துக்கொள்ளலாம். இவர்களை ஊடகங்கள் வாயிலாக பொதுமக்களுக்கு அறியத்தரலாம்.

ஏலவே அவர்களை பற்றிய தரவுகள் ஏதாவது தெரிந்திருப்பின் அவைகளை பொலிஸாருக்கு தெரியப்படுத்தி மேலதிகமாக உதவலாம். இவை மட்டுமன்றி குற்றத்தில் ஈடுபட்டவர்கள் சமூகத்திற்கு தங்களை இனங்காட்டிக்கொள்ள விரும்ப மாட்டார்கள். அவமானம், வெட்கம் போன்ற காரணிகளால் இனியும் குற்றம் புரியாது நல்லவர்களாக மாறிக்கொள்ளலாம். எனவே குற்றத்தைக் கண்டுபிடித்து, குற்றவாளிகளை கைது செய்த பொலிஸார் சான்றுப் பொருட்களுடன் குற்றவாளிகளையும் சேர்த்து அவர்களும் இணைந்து நின்று புகைப்படங்களை தோன்றினால் பயன் உள்ளதாய் இருக்கும்.

எத்தனை சிரமங்களை அனுபவித்து தமது உயிரை துச்சமாக மதித்து குற்றவாளிகளை கைது செய்த பொலிஸார் நிச்சயமாக பொதுமக்களுக்கு அறியப்பட வேண்டியவர்கள். அவர்களின் தியாகங்களை, வினைத்திறன்களை மக்கள் பாராட்ட வேண்டும். அப்போதுதான் இனிவரும் காலங்களிலும் கடமை உணர்வுடன், பெரும் அர்ப்பணிப்புக்களுடன் உத்வேகமாக அவர்களும் தம் கடமைகளை செய்வர். எனவே அவர்களின் புகைப்படங்கள் நிச்சயமாக பிரசுரிக்க வேண்டியவைகளே என்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமேயில்லை. கூடவே இனங்காணப்பட்ட உண்மையான குற்றவாளிகளின் புகைப்படங்கள் மற்றும் விபரங்களை சமூகத்திற்கு அறியத் தருவது மிகமிகப் பிரயோசனமானதாக இருக்கும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மங்கை மணாளன்,
மீசாலை.



# எந்திரக்காரன்

நீங்க "டிரான்ஸ் பார்மர்" படம் பார்த்திருக்கீங்களா? அதான் பாஸ்... காரை அப்படியே மெகாசைஸ் ரோபோவாக உருமாற்றி அதை வெச்சு சண்டை போடுவாங்களே! அதே படம்தான். அந்தப் படத்தில் வரும் கார்கள் ரோபோவாக மாறும்போதும், பறக்கும்போதும், சண்டையின் போதும் "ச்சே நம்மகிட்ட இப்படி ஒரு கார் இருந்தால் நல்லாருக்கும்" னு ஆழ் மனசுல ஆசை றெக்கை கட்டிப் பறந்திருக்கும். ஆனால் அடுத்த நொடியே நிஜத்தில் இதெல்லாம் நடக்கவா போகுதுனு அந்தப் பட்டாம்பூச்சியைப் பறக்கவிடாமல் உள்ளே ஓரமா படுக்கப் போட்டிருப்போம். இனி நீங்க பட்டாம்பூச்சியைப் படுக்கப்போடத் தேவையில்லை. தாராளமாகப் பறக்கவிடலாம்.



யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 55

# எந்த எண்ணெய் பாதுகாப்பானது?

சமையலுக்கு பாவிக்கப்படும் எண்ணெய் வகைகளில் எது பாதுகாப்பானது என்பது சம்பந்தமான புரிதலில் ஒரு பெரும் குழப்பநிலை காணப்படுகிறது.

நல்லெண்ணெய் நல்ல எண்ணெயா? தேங்காய் எண்ணெயை பாவிக்கலாமா? ஒருமுறை பொரித்த எண்ணெயை வெளியே ஊற்றுவதா?



இது கட்டுப்படியாகுமா? உடல் நிறையை குறைப்பதற்கு எந்த எண்ணெய் பொருத்தமானது.மீன் எண்ணெய் குளிசைகளை பாவிப்பது பயன் தருமா? தாவரக் கொழுப்பு, விலங்கு கொழுப்பு என்பவற்றின் வேறுபாடுகள் என்ன? என்பது சம்பந்தமான ஒரு தெளிவு பயனுடையதாக அமையும்.

**பொதுவாக எல்லாவகையான எண்ணெய்களையும் அளவுடன் பாவிப்பது பாதுகாப்பானது. எண்ணெய் சேர்த்து வதக்கி எடுக்கும் சமையலுக்கு நல்லெண்ணெய், ஒலிவ் எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் என்பன சிறந்தவை.**

ஆனால் வடை, றோல்ஸ், பற்றீஸ் போன்ற பொரித்தெடுக்கும் உணவுகளை தயாரிப்பதற்கு இந்த எண்ணெய் வகைகள் சிறந்தவை அல்ல. இந்த எண்ணெய் வகைகளை கொதிக்க வைக்கும் பொழுது அவை "ராண்ஸ்" கொழுப்பாக மாற்றமடைகின்றன. இந்த "ராண்ஸ்" கொழுப்பு உடல் நலத்துக்கு பாதுகாப்பானது அல்ல.எனவே பொரித்து எடுக்கும் உணவு வகைகளை தயாரிப்பதற்கு தேங்காய் எண்ணெய் சிறந்தது.

தேங்காய் எண்ணெயை கொதிக்க வைக்கும் பொழுது அது "ராண்ஸ்" கொழுப்பாக மாற்றமடையாது. இதனால் பொரித்த தேங்காய் எண்ணெயை 2ஆம் 3ஆம் முறை பொரிப்பதற்கு பாவிப்பதும் பெரிய பாதிப்பு எதனையும் ஏற்படுத்த மாட்டாது.

இதனால் ஒரு தடவை பொரித்த தேங்காய் எண்ணெயை வெளியே ஊற்ற வேண்டிய அவசியமும் இல்லை. ஆனால் நல்லெண்ணெ, ஒலிவ் எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் போன்றவற்றை பொரிப்பதற்கு மீண்டும் மீண்டும் பாவிப்பது பாதுகாப்பானது அல்ல.

**அனைத்து எண்ணெய் வகைகளுக்கும் உடல் நிறையை அதிகரிக்கும் தன்மை காணப்படுகிறது. எனவே உடல் நிறைய்ய குறைக்க விரும்புவோர் அனைத்து வகையான எண்ணெய்களையும் குறைத்துக் கொள்வது நல்லது.**


பொதுவாக விலங்கு கொழுப்புடன் ஒப்பிடும் பொழுது தாவரக் கொழுப்புகள் பாதுகாப்பானவை என ஆராய்ச்சிகள் உறுதி செய்கின்றன. உடல் நலத்தை மேம்படுத்துவதற்கு மீன் எண்ணெய் குளிசை வகைகளோ அல்லது ஒமேகா -3 வகை குளிசைகளோ பெரிய அளவில் உதவப்போவதில்லை என்றும் ஆராய்ச்சிகள் தெளிவுபடுத்தி நிற்கின்றன. எனவே அதிக விலை கொடுத்து இந்த வகையான குளிசைகளை வாங்கி பயன்படுத்துவது பயனற்றது.

இறக்குமதியாகி அதிக விலையில் விற்பனையாகும் மரக்கறி எண்ணெய் வகைகளிலும் பார்க்க எமது பகுதியில் உற்பத்தியாகும் தேங்காய் எண்ணெய் பாதுகாப்பானது.

உலகளாவிய அளவிலே பயிரிடப்படும் சூரியகாந்தி பயிர்களை கருத்தில் கொண்டால் அவற்றிலிருந்து பெறப்படக் கூடிய எண்ணெய் தற்பொழுது சூரியகாந்தி எண்ணெய் என்று சொல்லி விற்பனையாகும் எண்ணெயின் காற்பங்கு எண்ணெயை விட குறைவானது.







அதாவது உலகளாவிய அளவில் பயிரிடப்படும் சூரியகாந்தி செடிகளிலிருந்து இவ்வளவு பெருந்தொகையான சூரியகாந்தி எண்ணெயை உற்பத்தி செய்வது நடைமுறைச் சாத்தியமானது அல்ல. எனவே இங்கு விற்பனையாகும் சூரியகாந்தி எண்ணெய் வகைகளின் தூய்மைத் தன்மை நிச்சயமற்றதாக காணப்படுகிறது.எண்ணெயை ஊற்றி வதக்கி எடுத்து பிரட்டும் உணவு வகைகளிலே பொரித்து வடித்து எடுக்கும் உணவுவகைகளிலும் பார்க்க எண்ணெய் செறிவு அதிகமாக காணப்படுகிறது.

**குறைந்தளவு எண்ணெயை பாவித்து சுவையான உணவு வகைகளை தயாரிக்கும் முறைகளை அறிந்திருப்பது பயனுடையதாக அமையும்.**

Dr. சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்.

**மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0768363858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.**